D
V2,11, 31'P62
N02.1P.3
224490

10-4-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 495-535 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பான வழக்கினை முன்னாள் முதலமைச்சர் திரும்பப் பெற்றது | 536-540 |
| (ஆ) திஹார் சிறைப் பணியில் உள்ள தமிழகக் காவல் துறை அதிகாரிகள் பற்றி | 540 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| பெண்ணாகரம் தொகுதி, சொரக்காம்பட்டி கோவிந்தன், காட்டு யானை மிதித்து இறந்தது | 541-544 |
| **4. விதி 110-ன் கீழ் அறிக்கை—** | |
| திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் புத்துயிர் அளித்தல் பற்றிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை | 545-547 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 547 |
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 547-548 |
| (ஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 548-549 |

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 19—உயர் கல்வித் துறை
(ஆ) கோரிக்கை எண் 41—பள்ளிக் கல்வித் துறை
(இ) கோரிக்கை எண் 47—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
(ஈ) கோரிக்கை எண் 44—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு
549-660

(உ) கோரிக்கை எண் 37—பொதுத் துறை

* திரு. வி.கே. லட்சுமணன் 549-560, 613
* திரு. கு. அன்பழகன் 560-565
* திரு. எஸ்.ஏ.எம். உசேன் 565-573
* திரு. டி.என். சிவசுப்பிரமணியன் 573-579
* திரு. ஜி. கே. மணி 579-592, 628-629
* திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 593-598
* திரு. என். நன்மாறன் 600-603, 635

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 603

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை 569-570, 573, 580, 582, 603-636

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— 660

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 27, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 10, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 110, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

**110—**

### இரயில்வே மேம்பாலம்

***18400—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 10

கோயம்புத்தூர் நகரில் வாலாங்குளம் புறவழிச் சாலையின் மீது கட்டப்படவுள்ள இரயில்வே மேம்பாலப் பணிகள் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் நகர், வாலாங்குளம் புறவழிச்சாலையின் பணியை ஹட்கோ கடனுதவியுடன் ரூ.14 கோடி செலவில் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிக்கான வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணி, இன்னும் ஒருமாத காலத்திற்குள் முடிவடைந்துவிடும். பின்னர், ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டு, பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, வாலாங்குளம் புறநகர்ப் பகுதி சாலை என்பது, ஓர் மிக முக்கியமான சாலை. இந்தச் சாலையில் ஓர் இரயில்வே கேட் இருக்கின்றது. இது ஒரு நாளைக்கு 52 தடவை மூடித் திறக்கப்படுகின்றது. இதனாலே போக்குவரத்து மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படுகின்றது. இதற்காக ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வந்தபோது, அந்தப் பாலத்தைக் கீழ்நிலைப் பாலமாகக் கட்ட, அதற்கு மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்து. அது தெரிந்த பின்னாலே, அதை உயர்மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்று நான் பலமுறை அந்தப் பொறியாளரிடத்திலே வாதாடி என்னுடைய கோரிக்கையை வைத்திருக்கிறேன். ஆகவே, அது உயர்நிலைப் பாலமாகக் கட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்தப் பாலத்தினுடைய அவசர, அவசியத்தினைக் கருதி, அந்தப் பாலத்தை மேம்பாலமாகத்தான் கட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22445
சென்னை-600 008
நூலகம்



2002 ஏப்ரல் 10]

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பாலம், சிங்காநல்லூர் சட்டப் பேரவைத் தொகுதியில் வருகிறது. நானும் இந்தக் கேள்வியை ஏற்கெனவே கிளப்பியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே.எல். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு நாகப்பட்டினம்-கடலூர், கடலூர்-மைசூர் சாலை இருப்புப் பாதை கடவு எண் 147-க்குப் பதிலாக கோயம்புத்தூர் மாநகரம், ஒண்டிப்புதூர் எல்லைக்குள் மேம்பாலம் கட்டுவதற்கான 15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம், இந்தத் திட்டத்தோடு இணைந்தது. இப்போது சொல்லப்பட்டிருக்கக்கூடிய வாலாங்குளம் மேம்பாலம், அதோடு ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரே திட்டம் என்பதாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தப் பணிகள் இரண்டும் எப்போது தொடங்கி, எந்தக் காலத்திற்குள் முடிவு அடையும் என்பதை அறிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனி வினா தொடுப்பார்கள் என்றால், பதில் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து பொள்ளாச்சி செல்லுகின்ற பாதையிலே ஆற்றுப் பாலம் உள்ளது. அங்கு ஏற்கெனவே பாலம் ஒன்று இருந்தது. அதோடு additional ஆக ஒரு பாலம் கட்டி சுங்க வரி அதிகமாக வசூல் செய்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, இந்தக் கேள்விக்குரிய பதில் மட்டும்தான் இருக்கும்; இது தொடர்புடையது தான் இருக்கும். திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாங்குளம் மேம்பாலம் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை முன்னின்று செய்து கொடுப்பதற்காக கோவை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பாலம் இருவழிப் பாதையாக

[2002 ஏப்ரல் 10

அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அந்த வாலாங்குளம் பாலம் இருவழிப் பாதையாக அமைக்கப்படுமா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இருவழிப் பாதைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் திருப்பூரிலே உருவாக்கப்பட்ட Ring பாதையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

வினா எண் 111, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-05

**111—**

## கோயில் நிலம்

***7644—திரு. மீ. அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் பல ஆண்டுகளாகக் குடியிருக்கும் ஏழை, நடுத்தர மக்களுக்குத் தகுதிக்கேற்ப இலவசமாகக் குத்தகை அடிப்படையில் அல்லது விலைக்கு அந்த இடத்தைத் தரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 ஏப்ரல் 10]

(அ) மற்றும் (ஆ) அறநிலையத் துறை சட்ட விதிகளின்படி, தனி நபர்களுக்குத் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தை வழங்குவதற்கு வழி இல்லை. எனவே, அதுபோன்ற திட்டம் பரிசிலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களிலே குடியேறி இருக்கிற தனி நபர்களுக்காக இந்தக் கேள்வி எழுப்பப்படவில்லை. பல்லாண்டு காலத்திற்கு முன்பே ஏழை எளிய மக்கள் அதுபோன்ற இடங்களில் குடியேறி இருக்கிறார்கள். குடியேறியபோது, அறநிலையத் துறை அவர்களைத் தடுக்கவில்லை. இப்போது அவர்களுக்குள்ள வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்ப, பிள்ளைகள் படிப்பதற்குக்கூட மின்சார வசதியைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். அரசு, அவர்களுக்கு வீட்டை இலவசமாகத் தர வேண்டுமென்று சொல்லவில்லை. நான், அவர்களுடைய வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப என்று சொல்லி இருப்பதற்குக் காரணம், மிகமிக ஏழைகளாக இருந்தால், அல்லது நடுத்தரக் குடும்பமாக இருந்தால், அவர்களுக்குக் குத்தகை அடிப்படையிலே, நம்முடைய உரிமையைக் கையிலே வைத்துக்கொண்டு, வாடகையைப் பெற்றுக்கொண்டோ, அல்லது அறநிலையத் துறைக்கு பணம் வேண்டும், அதை நிர்வகிக்க வேண்டும் என்றால், விலைக்குத் தருவதற்கோ இந்த அரசு முன்வருமா அதன்மூலம் பல்வேறு குடியிருப்புகளை நெறிமுறைப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை வெளியிட்டுள்ள ஆணையின்படி, திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்போருக்கு வீடாக இருப்பின், வீட்டின் மதிப்பில் 0.20 சதவீதம் வாடகையாக அல்லது அப்பகுதியில் நிலவும் தற்காலிக வாடகை, இவற்றில் எது அதிகமோ அதை வாடகையாக நிர்ணயிக்கிறார்கள். திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளுக்கு, இடத்தின் சந்தை மதிப்பில் 0.10 சதவீதம் குத்தகையாக நிர்ணயித்தும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு மேற்கூறியபடி நிர்ணயிக்கப்படும் வாடகையில், பாதி வாடகை நிர்ணயித்தும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படுகிறது. மேலும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துகள், தனி நபர்களுக்கு விற்பனை

செய்யப்படுவதில்லை. அரசு மட்டத்தில் ஏற்கெனவே கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளபடியால், திருக்கோயில் கட்டடங்கள், மனைகள் ஆகியவற்றை, அதில் வசித்துவரும் தனி நபர்களுக்கு விற்பனை செய்யவில்லை.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்களுடைய தொகுதியில் மட்டுமல்ல; சென்னையிலே பல இடங்களிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றிற்கு மின்சார விளக்குகள் போடுவது பற்றிக் கலந்தாலோசித்ததற்குப் பிறகு, என்.ஓ.சி. கொடுக்கும் திட்டம் குறித்து—அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் கேட்டு இருக்கிறார்கள்-அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சுட்டிக்காட்டியதைப்போல, என்னுடைய தொகுதியில் மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் ஆலய இடத்திலே தேனுபுரீஸ்வரர் நகரில் பல ஆண்டு காலமாக ஏழைகள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழைகள் குடிசை வீடுகளைத்தான் கட்டி இருக்கிறார்கள். அவர்களுக்குக் குத்தகைக்கு விடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை சில இடங்களில் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; சில இடங்களில் குத்தகை கொடுக்காமல் அவர்களாகவே அவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் குத்தகைக்குக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமோ, அந்தந்த இடங்களில் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. பாப்பா சுந்தரம்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, சில இடங்களிலே குத்தகை கொடுக்கிறார்கள்; சில இடங்களிலே கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், திருக்கோயில் நிலங்களில் கட்டி இருக்கின்ற வீடுகளுக்குத்





தற்போது ஊராட்சி மன்றத்தால்கூட மின்சாரம் வழங்கப்படுவதில்லை; அங்குக் குடிநீர் வழங்கப்படுவதில்லை. அங்கு 100, 200 வீடுகள் இருந்தாலும்கூட, பாதைகள் அமைக்கப்படுவதில்லை. ஆகவே, அந்த ஏழை எளிய அடித்தளத்து மக்களுக்கு மாத வாடகையாக—அமைச்சர் அவர்கள் சொல்வது [illegible] குத்தகையா அல்லது மாதக் குத்தகையா என்பதை விளக்கி, அந்த அடிப்படையிலே—அந்த ஏழைகளுக்குச் சற்றுக் குறைத்து விட்டால்தான், அந்த வசதிகளை எல்லாம் பெறக்கூடிய நிலைமை கட்டாயம் ஏற்படும். ஆகவே, அவர்கள் என்.ஓசி. பெறுவதற்கும், பஞ்சாயத்து மூலம் வசதி பெறுவதற்கும் நீங்கள் வாடகைக்கு விட முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி; அவருடைய குளித்தலை நகரத்திலே இருக்கின்ற நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம், இந்து சமய அறநிலையத் துறையின் ஓர் ஆலயத்திற்குச் சொந்தமான இடம். குறைந்த வாடகைக்கு நகர்மன்றத்தின் சார்பாக அந்த இடத்தைப் பெற்று அதிக வாடகை வசூலித்து வருகிறார்கள். அறநிலையத் துறையால் குறைவான வாடகைக்கு அந்த இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. வேண்டுமென்றால் அந்தப் பகுதியினுடைய மக்களின் நன்மைகளைக் கருதி, அதை அறநிலையத் துறைக்கு விடுவார்களேயானால், உடனடியாக அவர்கள் கேட்கின்ற பணிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. தமிழகத்திலே இதுபோன்ற பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. இந்தக் கோயில் நிலங்களிலே குடியிருக்கக்கூடிய மனைதாரர்களின் உரிமையைப்பற்றிப் பேசுகிற போது, கடந்த 2000 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 90 ரூபாய் என்று இருந்த வாடகையை 9 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி, அதற்கு உரிய ஒரு புதிய அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணை நிலை எண் கூட 353, அந்த அரசாணைபற்றி இந்தச் சட்டமன்றத்திலே நான் பேசி, அன்றைய முதலமைச்சர் அவர்கள், வாடகை பன்மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்; ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டு, அந்த

[2002 ஏப்ரல் 10

உத்தரவினை நிறுத்தி வைப்பதற்கான உத்தரவினை இந்த அவையிலேயே அறிவித்து, நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், இப்போது இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே திரும்பவும் 17-8-2001 ஆம் தேதி, அறநிலையத் துறையின் மூலமாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே இந்தப் புதிய வாடகையை வசூலிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவோ என்ற அச்சம், சந்தேகம் அந்த மனைப் பகுதியிலே வாழ்ந்துகொண்டு இருப்பவர்களுக்கு இருக்கிறது. அப்படி இந்த அரசு, நிறுத்தி வைக்கப்பட்ட அந்த வாடகையை மறுபடியும்—அந்த பன்மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிற வாடகைக் கட்டணங்கள் அடிப்படையிலே—வசூலிக்கச் சொல்லியிருக்கிறதா அல்லது பழைய நிலையிலே வசூலைத் தொடர்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிவதோடு, இந்த மனைதாரர்களுக்குரிய...

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவதோடு என்பதுடன் நிறுத்திக்கொள்ளுங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, போதும். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையிலே பேச வேண்டியது. நீங்கள் உட்காருங்கள், அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வார். அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்ட கேள்வி; நடந்து முடிந்த சட்டமன்றத்திலே முன்பு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், காலியிடங்கள், மனைகள், வீட்டு மனைகள் ஆகியவற்றுக்கு எந்தெந்தப் பகுதியில், என்னென்ன வாடகை நிர்ணயம் செய்யலாம் என்று ஒரு குழு அமைத்து, அதன் மூலமாக வாடகையை உயர்த்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டதற்கிணங்க முன்பு இருந்த அரசு, அவர்களுக்கு ஆதாயம் ஏதாவது வேண்டும் என்ற காரணத்திற்காக அதிக வாடகை வசூல் செய்யலாம் என்று அரசாணை பிறப்பித்ததற்குப் பின்னாலே அதை நிறுத்தியிருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, எந்த வாடகையும் உயர்த்தப்படவில்லை. முன்னாலே ஆண்டு கொண்டிருந்தவர்களால் விதிக்கப்பட்ட அந்த வாடகையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 1-11-2000-த்திற்கு மேல் வசூல் செய்யலாம் என்று—முன்னாள் அரசு சொன்னதைத்தான்—வசூல் செய்கிறதே தவிர, இந்த



2002 ஏப்ரல் 10]

அரசு பொறுப்பேற்று ஒரு நயா பைசா கூட உயர்த்தவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலுக்குச் சொந்தமான சில நிலங்களை நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்து, பிற்காலத்திலே அந்தக் குத்தகைதாரர்கள் வீட்டு மனைகளாகப் பிரித்து கோயில் தர்மகர்த்தாக்கள் உடந்தையோடு விற்று விடுகிறார்கள். அவர்கள்மீது அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அங்கு மட்டுமல்ல; திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா, வீரவயல் கிராமத்தில் 621 ஏக்கர்; இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் கோயிலுக்குச் சொந்தமான இடம்; அந்த 621 ஏக்கர் நிலத்தில் 40 ஆண்டு காலமாக ஒரு நெல்மணிகூடக் கொடுக்காமல், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள்தான் இப்போது அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களாகப் பார்த்து முன்வந்து கொடுப்பார்களேயானால், அனைத்து ஆலயங்களிலும் இந்த அரசு வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, வாடகை வசூலிப்பதிலே முன்னால் இருந்த அரசு ஆதாயத்திற்காக அதைச் செய்து அப்படியே வசூலித்துக்கொண்டு இருந்தது என்று சொன்னார்கள். ஆனால் அந்த அரசு கொண்டு வந்த திட்டத்தை நாங்கள் மாற்றாமல் அப்படியே இப்போதும் வசூலிக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால், இந்த அரசும் ஆதாயத்திற்காகத்தான் வசூல் நடத்திக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாயம் என்பதை படித்த வழக்கறிஞர் தவறாகப் புரிந்துகொண்டார் என்று கருதுகிறேன். அவருடைய அரசோடு அன்றைக்குத் தோழமை உடன்பாடு இருந்த காரணத்தினாலே, இந்திய

[2002 ஏப்ரல் 10

கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியதை அந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்று சொன்னேனே தவிர, உங்களைப்போல ஒரு படித்த வழக்கறிஞர், இப்படிப்பட்ட குறைகளைக் கண்டுகொள்வது சரியா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களிலே குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தில் அல்லது அந்தப் பகுதியில் வாடகைக்கு விடலாமா என்பது கேள்வி. ஆதிதிராவிடர் மக்கள், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் பெரும்பகுதி, அறநிலையத்துறைக்குச் சொந்தமான இடங்களிலே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசால் அறிவிக்கப்படக்கூடிய தொகுப்பு வீடுகள், மின் இணைப்பு போன்றவை, கோயில் நிலத்தில் இருக்கிற காரணத்தினால் அனுமதி மறுக்கப்படுகிறது. ஆகையால் அப்படி மறுக்கப்படாமல் அரசு ஓர் உத்தரவைப் போட்டு அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில், குடியிருப்பவர்களுக்கு மின்சார இணைப்புக்கும், ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலைகள் அமைப்பதற்கும் அரசு அனுமதிக்குமா என்பது கேள்வி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கம்யூனிஸ்டுகள்தான் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது 40 ஆண்டு காலமாக வழக்கில் இருந்து கொண்டிருப்பது; தீர்ப்பே வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகையால் அறநிலையத் துறை சார்பாக அந்த நிலங்களைக்கூட அவர்களுக்கே விற்று விடலாம் என்று வந்து, விலை நிர்ணயிப்பதில்தான் தாவா இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நிலைமைக்கிணங்க, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழையெளிய மக்களுக்கு அரசின் மூலமாக இலவசமாக வீடுகள் கட்டப்படுகின்ற அந்த இடத்திற்கும், ஏழை, அரிஜன மாணவர்களுக்கு Hostel கட்டக்கூடிய



2002 ஏப்ரல் 10]

அந்த இடத்திற்கும் மற்றும் உடனடியாக மின் விளக்கு வேண்டுமென்று சொல்கின்ற அந்தப் பகுதிகளுக்கெல்லாம், படிப்படியாக—சில பகுதிகளுக்கு—இப்போது அனுமதி தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், எங்கே வேண்டும் என்று சொன்னால் அங்கேயும்— கொடுப்பதற்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்களின் பரப்பளவு எவ்வளவு? இதில் எவ்வளவு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் பெரிய கேள்வி; தனியாகக் கேள்வி போடுங்கள். திரு. இ. புகழேந்தி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களுக்கு இப்படிப்பட்ட கோயில் நிலங்களைக் கொடுப்பது, அவர்களுக்கு முழுவதுமாக பாத்தியதை ஆக்குவது என்பதெல்லாம் இயலாத காரியம் என்பதை, அரசு செய்ய முடியாது என்பதை இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏழையெளிய மக்களிடமிருந்து வாடகையோ அல்லது குத்தகையோ வசூலிப்பதுகூடக் கடினமாக இருக்கிறது என்ற கருத்தும் அதிலே பொதிந்திருக்கிறது. ஆகவே, தனியாருக்கு என்பதல்லாமல் அங்கே வசிக்கக்கூடிய, 100 ஆண்டுகள், 60 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய அந்த மக்கள், கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் கூட்டுறவு சொசைட்டியை அமைத்து அந்த சொசைட்டியின் மூலமாக அந்த இடத்தை அவர்கள் கேட்கின்றபோது, அதை அவர்களுக்கு அளிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா; அல்லது அதற்கான எண்ணத்தைப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சி தலைவி அவர்களுடைய அரசு அது பற்றி யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 112, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**112—**

**குளிர்சாதன வசதி**

***4022—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில், குடியாத்தம் வட்ட மருத்துவமனையிலுள்ள பிரேத பரிசோதனை அறை குளிர்சாதன வசதி கொண்டதாக மாற்றித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் அரசு மருத்துவமனையிலுள்ள பிரேத பரிசோதனை அறைக்குக் குளிர்சாதன வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாததால், அந்த வசதி கொண்டதாக மாற்றி அமைக்கும் யோசனை எதுவும் இல்லை.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுளை வணங்கிட, காலத்தில் சிறந்தது சந்தியா காலம் என்று வேதங்கள் கூறுகின்றன. எங்களின் சந்தியா காலமாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவரவர்களே, சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'எங்கும் சுத்தம், எதிலும் சுத்தம்' எனச் சுகாதாரத்திற்கு முதலிடம் கொடுக்கும் அம்மா அவர்களின் தலைமையின்கீழ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நீண்டகாலமாகக் குறையாக



2002 ஏப்ரல் 10]

உள்ள குடியாத்தம் வட்ட மருத்துவமனையிலுள்ள பிரேத பரிசோதனை அறைக்குக் குளிர்சாதன வசதி செய்து தரவேண்டும். குடியாத்தத்தைச் சுற்றி வாழும் 20 கிலோ மீட்டரில் உள்ள மக்கள், மிகவும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பீடித் தொழிலாளர்கள். இங்கு இந்த மருத்துவமனையைத் தவிர வேறு எந்தப் பெரிய அரசு மருத்துவமனையும் இல்லை. யாராவது இறந்து விட்டால் அவர்களுடைய உறவினர்கள் வந்து எடுத்துச் செல்ல சில நேரங்களில் ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் ஆகிவிடுகின்றன. அதனால், இறந்தவர் உடலிலிருந்து துர்நாற்றம் அடிக்கிறது. இதன் காரணமாகத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை, குடியாத்தம் வட்ட மருத்துவமனையிலுள்ள பிரேத பரிசோதனை அறைக்குக் குளிர்சாதன வசதி செய்து கொடுக்கும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடியாத்தம் அரசு மருத்துவமனை என்பது ஒரு வட்டார மருத்துவமனையாகும். அங்கே பிரேத பரிசோதனைக்காக வருகின்ற உடல்கள், உடனடியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விடுகின்றன. எனவே, அங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல நீண்ட நாட்கள் அந்த உடல்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஒருநாள் அல்லது 2 நாட்கள் காலதாமதமாகி, உறவினர்கள் பெறுவதற்கு கால அவகாசம் தேவைப்படுமேயானால், அங்கே வேறு வசதிகள் மூலம் அதாவது ஐஸ் கட்டி போன்றவை மூலம் பதப்படுத்தப்படுகின்ற அந்தக் காரியத்தைச் செய்து பாதுகாத்து, உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே இருக்கிற மக்களுக்கு மருத்துவ வசதிகளை விரிவாக்கம் செய்வதற்கு வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம். இதைப் பொறுத்தவரையிலே, இது தேவையில்லாத ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு எத்தனை மருத்துவர்கள், எத்தனை பணியாளர்கள் மற்றும் எத்தகைய சாதனங்கள்...

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

113—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

***5779—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் ஒன்றியம், எய்யில் கிராமத்தில், இந்நிதியாண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், எய்யில் கிராமத்தில் இந்த நிதி ஆண்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மலையனூர் தொகுதியிலே என்னுடைய சொந்தக் கிராமமான எய்யில் கிராமத்திலே மக்களினுடைய பங்குத் தொகை 1989 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு உள்ளது; போதுமான இடவசதியும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏற்கெனவே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் எங்கள் கிராமத்திற்கும் இடைவெளி 8 கி.மீ. தூரம் உள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, கிராமப்புற மக்களுக்கு உதவ வேண்டும், கிராமப்புறம் செழிப்பாக இருக்க வேண்டும் என்ற நல்லுணர்வு கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களினுடைய ஆட்சியில், இந்த நிதி ஆண்டிலாவது இதனைப் பரிசீலித்து எங்கள் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தைப்



2002 ஏப்ரல் 10]

பொறுத்தவரையில், மொத்த மக்கள் தொகை ஒரு இலட்சத்து இருபதாயிரத்திற்கு மேல் 1991-ன் கணக்குப்படி இருக்கிறது. ஆனால் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களோ 2 தான். நம்முடைய மைய அரசு நிர்ணயித்து இருக்கிற இலக்கின்படிகூட, இங்கு ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சொந்தக் கிராமமான எய்யில் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குக் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதற்காக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற தொகையையும் ஊர் மக்கள் கட்டி இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த இலக்கின்படியும் 8 கி.மீ. தூரத்திற்கும் அதிகமாக எய்யில் கிராமம் இருக்கிற காரணத்தினாலேயும், நிச்சயமாக அடுத்த ஆண்டு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும்பட்சத்தில் இந்தக் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.(குறுக்கீடு)

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மறுபடியும் கூப்பிடுகிறேன். திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பராமரிக்கப்படுகின்ற மருந்தகங்களை—Dispensaries—ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிட அரசு முன்வருமா என்பதோடு, செஞ்சி தொகுதிக்கு உட்பட்ட அய்யூர் ஊராட்சியில் உள்ள மருந்தகம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, எய்யில் கிராமம். திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் நிதி ஆண்டில் எய்யில் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்து இருக்கின்றார்கள். அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய கிராம மக்கள் சார்பாகவும், என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே என்னுடைய தொகுதியிலே அரசு மருத்துவமனை எதுவும் இல்லாத காரணத்தினால் மேல்மலையனூர் ஒன்றியத்திலே வளத்தியிலும், தேசிய

[2002 ஏப்ரல் 10

நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ள செஞ்சி ஒன்றியம், சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 30 படுக்கை அறைகளைக் கொண்ட மருத்துவ வசதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மலையனூர் ஒன்றியம் என்பது முழுக்க முழுக்க கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதி. அங்கே வளத்தி என்ற இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், அவலூர்பேட்டை என்ற இடத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கிறது. இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில், வளத்தி ஆரம்ப சுகாதார நிலையம்தான் main PHC ஆக இருக்கிறது. எனவே நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தின்படி, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வீதத்தில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படுகிறபட்சத்தில், இந்த மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வளத்தி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட, தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 114, திரு. டி. மணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**114—**

### குடிநீர்

***3564—திரு. டி. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் ஊராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 ஏப்ரல் 10]

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் ஊராட்சிக்குட்பட்ட இறையன்முன்துறை, சின்னத்துறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரவிப்புத்தன்துறை ஆகிய 5 குடியிருப்புகளுக்கும் 1998 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ளது. இக்குடியிருப்புகள் அனைத்திற்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்குக் குறைந்தபட்சமாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இந்தக் குறைந்தபட்ச அளவாக இருக்கக்கூடிய குடிநீரைக் கூட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அந்த இடத்திலே இருந்து கூடுதலாகத் தண்ணீர் கொடுப்பதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்தூர் ஊராட்சியிலே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு விரிவான திட்டத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகின்ற நேரத்தில், அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும், அதுபோன்று முஞ்சிறை ஒன்றியத்தினுடைய ஆணையாளர் அவர்களுக்கும் விவரங்களைச் சொன்னோம். ஆனால், சரிவர அந்தத் திட்டம் பயன்படுத்தப்படாமல் ஏனோதானோ என்று அதைச் செய்ததன் விளைவாக, இப்போது கோடை காலம் ஆரம்பித்த உடனேயே தண்ணீருக்கு மிகப் பெரிய தட்டுப்பாடு அந்தப் பகுதிகள் பூராவிலும் ஏற்பட்டுள்ளது. ஆக, இன்றைய சூழ்நிலையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. அதுபோலக் குழாய்கள் இருக்கின்றன. எனவே, இரண்டு பகுதிகளில், இரண்டு கிணறுகள் போதுமான நீர் ஆதாரம் இருக்கின்ற பகுதிகளில் அமைக்கப்படுமானால், முழுமையாக அந்த வட்டாரத்திலே—அது முழுமையாகக் கடலோர கிராமம்—அந்தக் கடலோர கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தரமுடியும். அந்தவகையிலே இரண்டு கிணறுகள் அமைத்து, குடிநீர் வழங்க இந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்தக் கிராமங்களுக்கு, ஏ.வி.எம். கால்வாய் அருகில் கிணறு அமைத்தால் தண்ணீர் கிடைக்கும் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். அந்தப்

பகுதிகளிலே கிணறு அமைப்பதற்குத் துறை முன்வந்து, விரைவிலே அந்தக் கிராமங்களுக்கு நல்ல, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு லா. சந்தானம். கேள்வி, கன்னியாகுமரி மாவட்டம் தொடர்புடையது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களாகிய மதுரை, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களிலே மிகக் கடுமையான வறட்சி நிலவுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தையும் சேர்த்துக்கொள்கிறேன். அங்குக் குடிநீருக்காக மிகுந்த சிரமத்தை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் அந்த குடிநீர்க் குறையைப் போக்குவதற்கு அரசிடத்திலே இருந்து நிதியை எதிர்பார்க்கிறார்கள். அம்மா அவர்கள்கூட முதன்முதலாகக் கையெழுத்திட்ட கோப்பும், குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகத்தான் என்பதை நாம் அறிகிறோம். அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா அல்லது செய்யப்பட்டிருக்கிறதா என்பதனை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியைக் கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அறிக்கை பெற்று, எந்தெந்தப் பகுதிகளிலே குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கும் என்பதை எல்லாம் அரசு பரிசீலனை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகக் குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வியில்கூட நீங்கள் கேட்கலாம். அடுத்த கேள்வியும், குடிநீர் சம்பந்தமானதுதான். உட்காருங்கள்.

வினா எண் 115, திரு. க. பாரமலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**115—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***3682—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை ஆற்றில் பழவராயனேந்தல் அருகில் ஆழ்கிணறு தோண்டி ஆவரங்காடு, தஞ்சாக்கூர் உள்ளிட்ட கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட கூட்டுக்குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) விரைவாக இத்திட்டத்தை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒன்றியத்தைச் சார்ந்த தஞ்சாக்கூர் மற்றும் ஏழு குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவிலே அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை, சுருக்கமாகக் கேள்வி கேட்கப் போகிறார்.

முற்பகல் 10-30

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார். நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோடையினுடைய கொடூரம் ஆரம்பமாகிவிட்டது. சமீபகாலத்திலே வைகையிலே அதிகமான தண்ணீரும் திறந்து விடப்படவில்லை. நிலத்தடி நீரும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. விரைவாக ஏற்பாடு செய்யவில்லை என்றால், அரசு, லாரியிலே தண்ணீர் கொண்டுவந்து வழங்கக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்விடும். ஆகவே, விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட

[2002 ஏப்ரல் 10

வேண்டுமென்ற அடிப்படையில் எவ்வளவு காலகட்டத்திற்குள் அந்த வேலை முடிக்கப்படும்; மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்துவிடப்படும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை இந்தப் பகுதிக்குச் செயல்படுத்தும் திட்டத்தில் சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோதனை ஓட்டம் முடிந்தவுடன் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலைச் சொல்கிறபோது, அதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாகச் சொன்னார்கள்; என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பகுதியில் அதிகப்படியான பணம் செலவிட வேண்டிய ஒரு காலகட்டமல்ல, இப்போது இருக்கிற நிலை. இருந்தாலும்கூட, இந்தக் கோடைகாலத்தில் அங்கு நீராதாரத்தைக் கண்டுபிடித்து இரண்டு கிணறுகளை அமைத்தாலே அந்த வட்டார மக்களுக்கு முழுமையான தண்ணீரைத் தர முடியும். அதற்கான source, அந்தப் பகுதியிலே இருக்கிறது. அதை விரைவாக அமல்படுத்துவதற்குக் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்து, அதற்குப் போதுமான நிதியாதாரத்தை ஒதுக்கி, அந்தக் கிராமத்து மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க துரித நடவடிக்கையை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் பேசுகிறபோது, இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று கேட்டேன். இதற்காக 20 இலட்சம் ரூபாய் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 20 இலட்சம் ரூபாய் என்பது அதிகமான தொகைதான். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, துறையின் மூலம் எவ்வளவு விரைவாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முடியுமோ, அந்த அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.



2002 ஏப்ரல் 10]

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த வருடம் குடிநீர்ப் பஞ்சத்தால் பல கிராமங்களிலே மக்கள் பெரிதும் அவதிப்பட்டார்கள். குறிப்பாக திருவள்ளூர் நகரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ், அவரவர் பகுதிக்குத் தனிக் கேள்வி போட்டால்தான் தெரியும். அமைச்சரிடம் பதில் இருக்காது.

வினா எண் 116, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**116—**

**கூட்டுறவுக் கடன்கள்**

***238—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கைச் சீற்றத்தால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து விவசாயிகளின் துயர் துடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய இயலாத நிலை உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2002 ஏப்ரல் 10

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் நிலையைச் சொன்னார்கள். விவசாயிகளுடைய நிலையைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தாலே, தொடர்ந்து இயற்கைச் சீற்றத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிற விவசாயிகள் பற்றிப் பரிசீலிக்க வேண்டும். குறிப்பாக, கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருக்கிற விவசாயிகள் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டுகூடக் கூட்டுறவுக் கடனைப் பெற்றிருக்கிற விவசாயிகள் கந்துவட்டிக்கு வாங்கித்தான் நம்முடைய அரசு அறிவித்த சலுகையை ஈடுகட்டுவதற்காக அந்தப் பணத்தைச் செலுத்தினார்கள். அந்த கந்துவட்டி கட்டுவதற்கு வட்டி அதிகமாகி அதைச் செலுத்த இயலாத நிலையிலே நிர்ப்பந்தமான நிலையிலே விவசாயிகள் கடன்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுடைய பிரச்சினை பற்றி, அரசுக்கு இருக்கிற நிதி நெருக்கடியையும் மற்ற சிரமங்களையும் பொருட்படுத்தாத வகையிலேதான் இதைச் செய்ய வேண்டுமென்ற அவசியம் இருக்கிறது. ஆகவே அரசு மறுபரிசீலனை செய்து விவசாயிகள் பட்டிருக்கிற அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு முயற்சிகளையும், இந்த ஆண்டு இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுடைய மறுவாழ்வுக்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய துயரங்களைத் துடைக்கிற வகையிலேதான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு யாரும் செய்ய முடியாத காரியத்தை நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்திருக்கிறது. இந்த ஆட்சி அமைந்தவுடனேயே வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததன் மூலம் 6,11,193 விவசாயிகள் 226.56 கோடி ரூபாய் அளவிலே சலுகையைப் பெற்றிருக்கிறார்கள். அதேபோல இன்னும் அவர்களுடைய துயரைத் துடைக்க வேண்டும் என்பதற்குத்தான் இப்பொழுதும்கூட one time settlement என்ற அளவிலே அவர்களுடைய கடனை அடைக்கிற, 4.5 இலட்சம் விவசாயிகள் பலன் பெறக்கூடிய அளவுக்கு 110 கோடி ரூபாய்க்கான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் விவசாயிகள் நலனிலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. அதனாலேதான் கடந்த மழை வெள்ளத்தின்போது ஏற்பட்ட இழப்புக்கு 4.9 கோடி ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 10]

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு விவசாயிகளுக்காக அந்த நிவாரண உதவித் தொகைகளை வழங்கி இருப்பதை நாங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே மனதாரப் பாராட்டியிருக்கிறோம். இப்போதும் அதை நாங்கள் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். 110 கோடி ரூபாய் இப்போது இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; மகிழ்ச்சி, நன்றி. அதிலே குறிப்பாக, வட்டியை, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை எடுக்கிற நிலையில் இப்போது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். 1998 ஆம் ஆண்டு வரையிலும் மட்டுமே அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதாக ஏற்றுக்கொண்டு, இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பின் மூலமாக அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்வதாக ஏற்றுக்கொண்டு அறிவிப்பதற்கான முயற்சி இந்த நிவாரணம் கொடுப்பதற்கான முயற்சியாக வருகிறபோது, அது விவசாயிகளுக்குச் சுமையாக இருக்கும். ஏற்கெனவே அறிவித்ததன் அடிப்படையிலேயே வட்டியையும் அபராத வட்டியையும் நடைமுறையிலே கொண்டுவந்து அதைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் அறிவிக்கப்படும்போது, அதற்கான கால நிர்ணயத்தையும் நிர்ணயிக்கவேண்டிய அளவிலே இந்த அரசு இருக்கின்ற காரணத்தாலே, அந்தத் திட்டம் அந்த அளவிலே செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்ட கேள்வியைத்தான் நானும் கேட்க விரும்பினேன். அதாவது, 1998 என்பதை 2002 வரை நீட்டித்து தண்ட வட்டி, அபராத வட்டியை ரத்து செய்து one time settlement-க்கு இந்த அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இருக்கிற இந்த நிதி நெருக்கடியிலே இந்த அளவு செய்வதே மிகப் பெரிய காரியமாக இருப்பதாலே, விவசாயிகள் இதையே முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர், நாகை, தஞ்சை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்குவது பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தினார்கள். சிறப்பு நேர்வு அடிப்படையிலே விவசாயிகள் பட்ட கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, நேற்றுக்கூட விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல்லை டிராக்டரிலே எடுத்துச் சென்றபோது, காவல் துறையினராலே கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, கொஞ்சம் தொடர்புடைய கேள்வியாகக் கேளுங்கள். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) இல்லை, இதெல்லாம் தனிப் பிரச்சினை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, வேண்டாம். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதன்படி இந்தக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யமுடியாது என்பதனை நாங்களும் உணர்கிறோம். ஆனால் ஏற்கெனவே 2000 வரையிலும் இருக்கக்கூடிய வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110 கோடி ரூபாய் அறிவித்தார்கள். தற்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்து வட்டியை முதலோடு இணைப்பதாக அந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, 2000 வரை நீட்டிக்காமல் 1998 ஆம் ஆண்டோடு அது நிறைவு செய்யப்படுவதாகவும் அதிலே உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே ஏற்கெனவே குறிப்பிட்டபடி அந்த 2000 ஆம் ஆண்டுக்கு வட்டியையும் அபராத



2002 ஏப்ரல் 10]

வட்டியையும் சேர்த்து இந்தத் தடவை அந்த settlement-ஐ சமரச settlement-ஐ அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல முதலிலே அறிவித்த அந்த 226 கோடி ரூபாய் வரிச் சலுகை உத்தரவை வழங்குவதற்கு முன் அத்தனை அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசி, விவசாயிகளுக்குச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தின் அடிப்படையிலேதான் அந்த உதவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மிகப்பெரிய கருணையுள்ளத்தாலே செய்யப்பட்டது. இப்போது இந்தத் திட்டம் இரண்டாவது முறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்திலே இதுபோன்ற விவசாயக் கடன்களுக்கு எல்லாம் நபார்டு வங்கியும் கூட்டுறவுத் துறையும் ரிசர்வ் வங்கியினுடைய guidelines-படியேதான் நடக்கவேண்டியிருக்கிற காரணத்தினாலே புரட்சித் தலைவியினுடைய அரசு கருணையுள்ளத்தோடு செய்திருப்பதை விவசாயிகள் பெருமனதோடு ஏற்றுக்கொண்டு பலன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், தி. நகரிலே எங்கே விவசாயிகள் இருக்கிறார்கள்?

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் - வீட்டுக் கடன் பெறும் நடுத்தரக் குடும்பத்திற்குக் கால அளவு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. வினா எண் 117, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**117—**

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

***1860—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 10

மடப்பட்டு ஊரை மையமாகக் கொண்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மடப்பட்டை மையமாகக் கொண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

(முற்பகல் 10-40)

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய வினாவினைத் தொடங்குகின்றேன். திருநாவலூர் தொகுதியைச் சேர்ந்த மற்றும் அதன் அருகிலுள்ள ஏழையெளிய விவசாயிகளும், சிறு வியாபாரிகளும் தற்போது விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை மாட்டு வண்டி மூலமாகவோ, டிராக்டர் மூலமாகவோ எடுத்துச் செல்கிறார்கள். அப்படி எடுத்துச் செல்கின்றபோது அதிகப் போக்குவரத்து நெரிசல் நிறைந்த தேசிய நெடுஞ்சாலை வழியாகச் செல்கின்ற விவசாயிகள் பல்வேறு விபத்துகளுக்குள்ளாகியும், உயிர்ச்சேதம் ஏற்பட்டும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே போக்குவரத்துக்கு வசதியாக உள்ள அந்த மடப்பட்டு கிராமத்தை மையமாக வைத்து திருநாவலூர் தொகுதியினுடைய ஏழையெளிய விவசாயிகள் பயன்பெறும் வகையிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுடைய உயிர்நாடியாக இருக்கின்ற இந்த அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுக்காவைச் சேர்ந்த மடப்பட்டு கிராமம் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்துள்ளது. மடப்பட்டுக்கு மேற்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் திருவெண்ணெய்நல்லூரிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைந்திருக்கிறது. ஆகவே 10 கி.மீட்டர் தூரத்திலேயே ஒரு ஒழுங்குமுறை



2002 ஏப்ரல் 10]

விற்பனைக்கூடம் அமைந்துள்ள காரணத்தினால் மடப்பட்டு கிராமத்தில் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**118—**

### விவசாயக் கல்லூரி

***8728—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு இந்த ஆண்டில் சுமார் 50 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து குறிப்பாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஆதிதிராவிட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய எதிர்காலத்தை, நலனைக் கருதி தாயுள்ளத்தோடு உத்தரவிட்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை அறிவித்ததற்கு ஆற்காடு தொகுதி மக்களின் சார்பிலும், அனைத்துத் தொகுதி மக்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சார்பிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கேட்காமலேயே வாரி வழங்குகிற தெய்வம். வேலூர் மாவட்டத்திற்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வழங்கி இருக்கிறார்கள். மிகவும் ஏழ்மையான ப்ளஸ்-2 படிக்கும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு மிதிவண்டி

வழங்கியுள்ளார்கள். அதேபோல ஆற்காடு தொகுதியிலே விவசாயத் தொழில் நிறைந்த மலை சார்ந்த பகுதிகளான வெங்கடாபுரம், குப்பம், புங்கனூர், வெல்லக்குளம், வண்டிக்கல் போன்ற கிராமங்கள் உள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பிள்ளையின் தொகுதியில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 விவசாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல வேலூர் மாவட்டம், கலவையில் ஆதிபராசக்தி அறக்கட்டளையின்கீழ் விவசாயக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. ஆகவே அதே மாவட்டத்தில் புதிய கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், கேள்வி இல்லையா? வியப்பாக இருக்கிறது.

வினா எண் 119, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**119—**

### ஊட்டச்சத்து

***7177—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தில் சத்துருண்டையில் பிண்ணாக்கு சேர்ப்பதற்குப் பதிலாக ஊட்டச்சத்துள்ள ஜவ்வரிசியைச் சேர்த்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜவ்வரிசியை ஊட்டச்சத்துணவில் சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, கோவை, தென்னாற்காடு மாவட்ட மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்களின் நலனைக் காத்திடும் வகையில் சேகோசர்வ் கூட்டுறவு நிறுவனத்திற்குக் கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை மலர்ப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே 80 சதவிகிதம் ஜவ்வரிசி தமிழகத்தில்தான் உற்பத்தியாகிறது. இந்தச் சத்துள்ள ஜவ்வரிசியை வடமாநிலத்தில் உணவாகப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல தமிழகத்தில் உணவாகப் பயன்படுத்த குறிப்பாக ஏழைக் குழந்தைகள் நலமுடனும், வளமுடனும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் வாழ சத்துள்ள ஜவ்வரிசியை சத்துணவுத் திட்டத்தில் சேர்த்துக் கொடுக்க வரும் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகின்ற ஊட்டச் சத்துணவில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சமூகநலத் துறையின் ஆய்வின்போது குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உணவில் கால்நடைகளுக்கு வழங்கப்படுகின்ற கடலைப் பிண்ணாக்கு சேர்க்கக் கூடாது என்று அறிவுறுத்தி, ஏற்கெனவே கடலைப் பிண்ணாக்கு ஊட்டச் சத்துணவிலே நீக்கப்பட்டது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக ஜவ்வரிசியைச் சேர்த்தால், ஜவ்வரிசியில் 100 கிராமிற்கு 2 சதவீதம் புரதச் சத்து மட்டுமே உள்ளது. ஆனால் கோதுமையில் 11.8 சதவீதமும், ராகியில் 7.3 சதவீதமும், வறுக்கப்பட்ட கடலை மாவில் 22.5 சதவீதமும் புரதச் சத்து உள்ளது. எனவே, புரதச் சத்து குறைவாகவுள்ள ஜவ்வரிசியை ஊட்டச் சத்துணவில் சேர்க்கின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திலே, ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த முட்டையை நிறுத்திவிட்டு, இப்போது அதற்குப் பதிலாக உருளைக்கிழங்கு, அதேபோல, சில பயறு வகைகளைச் சேர்த்துக் கொடுப்பதற்கு நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள். ஆனால், முட்டைகள் நிறைய இப்போது தேங்கிக் கிடக்கின்றன. தமிழ்நாட்டிலே W.T.O. ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலே, நாமக்கல் போன்ற பகுதிகளில் கிடைக்கக்கூடிய முட்டைகள் தேங்கிக் கிடக்கின்ற காரணம் ஒன்று. இரண்டாவது, நிறைய பால் உற்பத்தி நம்முடைய தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் உருளைக்கிழங்கை வேக வைத்து அதனைப் பிரித்துக் கொடுப்பதிலே சத்துணவு அமைப்பாளர்கள் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முட்டை நிறைய கிடைக்கின்ற காரணத்தாலே, மீண்டும், அதையே கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? பால் நிறைய இருக்கின்ற காரணத்தாலே பாலைக்கூட சத்தைப் பெறக்கூடிய வகையில் இந்தச் சத்துணவுத் திட்டத்திலே விநியோகம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஊட்டச் சத்து சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் இந்தக் கேள்விக்கு பதில் தெரிவிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டிருக்கக் கூடாது. காரணம், இதே அவையிலே அவர் பேசிய பேச்சை நான் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். என்னுடைய மானியக் கோரிக்கை வருகிறபோது நான் இதற்குப் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். இருந்தாலும்கூட, அவர் இந்தத் தொடர்புடைய கேள்வியை கேட்ட காரணத்தினால் அவர் இந்த அவையிலே பேசிய பேச்சு, முன்னாள் முதலமைச்சர், இந்த மன்றத்தின் இப்போதுள்ள உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்களை உட்கார வைத்துக்கொண்டு அவர் பேசிய பேச்சில் சொல்லியிருக்கிறார்: 'தவறுதலான முட்டை கொடுத்த காரணத்தால் தமிழ்நாட்டுக் கோழிகள்கூட அரை முட்டை இட்டுக்கொண்டிருக்கின்றன' என்று அவர் சொன்னது பதிவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் புத்தகத்திலேயிருந்து எடுத்து வைத்திருக்கிறேன். ஆகவே, முட்டை வழங்கக்கூடிய கருத்துரு இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. (குறுக்கீடு).



2002 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முட்டைக்கு முட்டை போட்டாகிவிட்டது. (சிரிப்பு). விடுங்கள்.

*வினா எண் 120, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

**120—**

**சலுகைகள்**

***4176—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்களுக்கு அரசால் வழங்கப்படும் பல்வேறு வகையான சலுகைகள் சென்றடைகின்றனவா என்ற உண்மைகளை நேரடியாகக் கண்டறிய மாவட்ட வாரியாகக் குழுக்களை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிட இன மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைகள் அம்மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை அரசால் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆதிதிராவிட நலக் குழுக்கள் கண்காணித்து வருகின்றன. தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிட இன மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு வகைக் கடன் உதவிகள் மாவட்ட வாரியாக அரசு அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலம் பரிசீலித்து வழங்கப்படுகின்றன. இந்நிலையில் இக்குழுக்கள் தவிர, மேலும் குழுக்களை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு அரசால் வழங்கப்படுகிற பல்வேறு சலுகைகள் சென்றடைகின்றனவா என்பதை அறிவதற்கு குழுக்களை அரசு அமைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழுக்களிலே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மாவட்டத்திலே இருக்கின்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஒரு சிலரையும் இணைத்து,

[2002 ஏப்ரல் 10

அதுமட்டுமல்லாமல், சமூக நலனிலே அக்கறை கொண்டிருக்கின்ற சமூக நலத் தொண்டார்வ நிறுவனங்களில் உள்ள ஒரு சிலரையும் இணைத்தால் நன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால், மக்கள் மத்தியிலே நேரடியாக அந்த மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு இந்த பிரதிநிதிகளுக்கு இருக்கிற காரணத்தாலே மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளோடு இவர்களையும் சேர்த்து ஒரு குழு அமைத்தால் அளிக்கப்படுகின்ற அத்தனை நலத் திட்டங்களும் சரியான முறையிலே சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்ற குழுவிலே வாத விவாதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்தக் குழுக்களில் மேற்கண்டவர்களையும் சேர்க்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 10-50)*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட இன மக்களுக்காக அரசால் வழங்கப்படும் பல்வேறு வகையான சலுகைகள் அவர்களுக்குச் சென்றடைகின்றனவா என்ற உண்மையைக் கண்டறிய மாவட்ட வாரியாக, மாவட்ட ஆதிதிராவிட நலக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்—செயல் உறுப்பினர்; கோட்டாட்சியர்—உறுப்பினர்; திட்ட அலுவலர் (ஊரக வளர்ச்சி) உறுப்பினர்; மாவட்ட மேலாளர் (தாட்கோ)—உறுப்பினர்; ஏ, பி, சி, டி, நிலையில் ஆதிதிராவிடர் நல அதிகாரிகள் ஒவ்வொருவர் உறுப்பினர்கள்; ஆதிதிராவிட அரசு அலுவலர்களின் மாவட்ட சங்கத் தலைவர் ஓர் உறுப்பினர்; ஆதிதிராவிட அமைப்பின் மாவட்டத் தலைவர்கள் மூவர் உறுப்பினர்கள்; பழங்குடியினர் சங்கத் தலைவர் ஒருவர் உறுப்பினர்; ஆதிதிராவிட வழக்குரைஞர், பேராசிரியர், தொழிலதிபர் ஒவ்வொருவர் உறுப்பினர்கள்; இவர்களுடன் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், ஒன்றியத் தலைவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட குழு மாவட்ட அளவில் இயங்கி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன் (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே அமைக்கப்படுகிற ஆதிதிராவிட நலக் குழுக்களைப் போல மாநில அளவிலே ஆதிதிராவிட நல உயர்மட்டக் குழு அமைக்கப்படுமா அல்லது பாராளுமன்றத்தில் உள்ளதைப்போல் சட்டமன்றத்திலே ஆதிதிராவிட நல சட்டமன்றக் குழு அமைக்கப்படுமா? அப்படி அமைக்கப்படுமானால் அது குறைந்தபட்சம் ஆண்டுக்கு மூன்று முறை அல்லது நான்கு முறையாவது கூடுகின்ற மரபை அரசு ஏற்படுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



200 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் இட ஒதுக்கீட்டிற்கான பின்னடைவுகளை நிரப்புவதற்காக உயர்மட்டக் குழு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்; ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர்; சட்டத் துறைச் செயலாளர் மற்றும் பணியாளர் சீர்திருத்தத் துறைச் செயலாளர், சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையின் செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்றத்தில் உள்ளதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆதிதிராவிட நல சட்டமன்றக் குழு அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வியாகப் போட்டால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைச் சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அவர்களுக்குச் சென்றடைகின்றனவா என்பதை அறியும் குழு வருடத்தில் எத்தனை முறை கூடும் என்பதையும், அதேபோன்று வாகனங்கள் வாங்கக் கடன்; பல்வேறு தொழில்கள் நடத்த 100 சதவீத கடன் அதிகமாக வழங்கப்படுகிறது. அதிலே உண்மையான அந்தப் பயனாளி பயனடையவில்லை என்ற பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவற்றையெல்லாம் கண்டு இந்த அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதிதிராவிட நலக் குழுக் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படுகிறது. அந்தக் குழுவினுடைய பணிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் கல்வித்தரம், பயிற்சி நிலை, வசதிகள் மேம்பாட்டிற்கான அறிவுரைகள் வழங்குதல்; விடுதிகளில் விளையாட்டு வசதிகள், நூலக மேம்பாடு, தேர்வு ஆயத்தப் பயிற்சி அளிக்க துணை புரியும். பொங்கல் திருநாள், அம்பேத்கர் பிறந்த நாள் மற்றும்

[2002 ஏப்ரல் 10

நினைவு நாள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் பிற பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவில் போட்டிகள், கலைப் போட்டிகள், பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்துதல், அரசுப் பணியிடங்களில் ஒதுக்கீட்டு நடைமுறையை ஆய்வு செய்தல், கல்வி நிறுவனங்களிலே ஒதுக்கீட்டு நடைமுறையை ஆய்வு செய்தல், சிறப்பு உள்ளடக்கத் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் சிறப்பு நிதியின்கீழ் செயல்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்தல், புதிதாக அறிவுரை வழங்குதல், இத்திட்டங்களைப் பரப்பிட வகை செய்தல், தாட்கோ திட்டங்களைப் பரப்பிட வகை செய்தல், ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை, பயிர்நிலம் வழங்குதலையும், வழங்கியதைப் பேணுதலையும் ஆய்வுசெய்தல், நில உச்சவரம்பு நிலங்கள், பூமிதான நிலங்களை ஆதிதிராவிடர்களுக்கு அளித்தலையும் அளிக்கப்பட்ட நிலங்களைப் பேணுதலையும் ஆய்வு செய்தல், ஆதிதிராவிடர் மேம்பாடு குறித்து பொதுவாக ஆலோசனைகள் கேட்டல் போன்ற பணிகளை இக்குழு கவனித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *121*, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**121—**

## அரசுப் பேருந்து

***12828—திரு. கு. பிச்சாண்டி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை நகரிலிருந்து கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருவனந்தபுரம் போன்ற இடங்களுக்கு அரசு விரைவுப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு தலைவரவர்களே,

*அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருவண்ணாமலையிலிருந்து கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருவனந்தபுரம் போன்ற இடங்களுக்கு பேருந்து இயக்க, திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.*



2002 ஏப்ரல் 10]

*முற்பகல் 10-55*

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரம் இப்போது பௌர்ணமி தினத்திலே பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்ற நகரம். திருப்பதியிலிருந்து நேரடியாகச் செல்கின்ற பேருந்துகளில் இடம் கிடைக்காமல் மக்கள் பல்வேறு நிலையில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைக் களையக்கூடிய வகையிலே திருவண்ணாமலையிலேயிருந்து பக்தர்களின் வசதிக்காக, இப்படிப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற திருப்பதி - நாகர்கோவில் பேருந்துகள் எல்லாம் வந்தவாசி வழியாகத் திருப்பி விடப்படுகின்றன. ஆகவே, அதை நீக்கி மீண்டும் திருவண்ணாமலை வழியாக அந்தப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தடம் எண் *283*, வேலூரிலிருந்து கன்னியாகுமரிக்கு திருவண்ணாமலை வழியாக இரண்டு பேருந்துகள் இரண்டு தடவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று தடம் எண் *995*, திருப்பதியிலிருந்து நாகர்கோவிலுக்கு திருவண்ணாமலை வழியாக இரண்டு பேருந்துகள், இரண்டு தடவைகளாக இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, திருவண்ணாமலை பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்தி நாகர்கோவில் சென்று, அங்கிருந்து அம்மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் மூலமாக திருவனந்தபுரம் செல்ல வசதி உள்ளது. மேலும், திருவண்ணாமலை, திருவனந்தபுரம் வழித்தடம் இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் திருவனந்தபுரத்திற்கு இத்திட்டத்தில் பேருந்து இயக்குவது குறித்து இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போதுதான் அரசு பரிசீலிக்க இயலும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு இருக்கும் தற்போதைய நிதி நெருக்கடியில் திருவண்ணாமலையிலிருந்து கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்குத் தனியாகப் பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதியிலிருந்தும் வேலூரிலிருந்தும் வரும்போது அந்த வண்டிகள் எல்லாம் நிரம்பிவருகின்றன. ஆகவே, திருவண்ணாமலையில் காத்திருக்கின்ற பயணிகள் இடம் கிடைக்காமல் சிரமப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதால், திருவண்ணாமலைக்கெனத் தனியாக 5, 10 டிக்கெட்டுகளுக்கான இடங்களை ஒதுக்கி வைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலித்து, திருவண்ணாமலைக்கு என்று தனியாக சீட் ஒதுக்கீடு செய்வதற்கு அரசு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். கனிதா சம்பத்.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழகத்தின் நிரந்தர முதல்வர் புரட்சித் தாய், வீரத்தாய் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் வினாவைக் கேட்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியில் முருகன் தெய்வத்தலம், சக்தி வாய்ந்த கோவில் இருக்கிறது. திருவொற்றியூரிலிருந்து கேளம்பாக்கம் வரை பேருந்துகள் வருகின்றன. அதனை கேளம்பாக்கத்திலிருந்து திருப்போரூர் வரை நீட்டித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியாக எழுதிக்கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *122*, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**122—**

**தொழிற்சாலை**

***1895—திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேங்காய் உற்பத்தி அதிகமாக உள்ள கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய் உற்பத்தி அதிகமாக நடைபெறுகிறது. ஆனால், தேங்காய் விலை வீழ்ச்சியுற்று, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் இன்னல்களைப் போக்குகின்ற வண்ணம், விவசாயிகளின் நலன் காக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில் தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும்கூட, ஆர்வம் உள்ள தொழில் முனைவோர் இத்தொழில் தொடங்க முன்வந்தால் மாவட்ட தொழில் மையம் தக்க ஆலோசனைகளை வழங்கி தொழில் தொடங்க ஆவன செய்யும். தொழிலில் பின்தங்கிய வட்டாரத்தில் தொழிற்சாலை அமைக்கப்பெற்றால் அதற்கு மாநில முதலீட்டு மானியமாக 15 சதவீதமும், மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளாக இருப்பின் மாநில முதலீட்டு மானியமாக 20 சதவீதமும் வழங்க அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மேலும் இந்தப் பவுடரை இரசாயனத் தொழிற்சாலைகளிலே உரம், பூச்சி மருந்து போன்றவற்றுக்குப் பயன்படுத்த இருக்கிறார்கள் என்ற தகவலையும் இங்கே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் அதிகமாக விளையக்கூடிய முந்திரிக்காக ஒரு முந்திரித் தொழிற்சாலை கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 123, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.



123—

## பொருட்காட்சி

***13922—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் பொருட்காட்சி நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிந்தனைக் கூர்மையால், செயல் திறத்தால் எதிரிகளின் கூடாரம் அதிர்ந்து நடுநடுங்க

*'பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா*
*பிற்பகல் தாமே வரும்'*

என்ற குறளுக்குரிய விளக்கத்தை உலகறியச் செய்த உன்னத தெய்வமே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஒன்றியப் பெருந்தலைவராக, திருச்சி புறநகர் மாவட்ட இணைச் செயலாளராக, மாவட்டச் செயலாளராக, உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீரங்கம் சட்டப் பேரவை உறுப்பினராக, அமைச்சராக என்போல் எளிய தொண்டனை உயர்த்தி அழகுபார்க்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி விடையளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் அரசு பொருட்காட்சி

[2002 ஏப்ரல் 10

நடத்தப்பட்டது. அதன் பின்பு அரசு பொருட்காட்சி நடத்தப்படவே இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொருட்காட்சி நடத்த முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசு பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் இல்லாமல் செய்திகளைத் தெரிவிக்கும் சாதனமாகத் திகழ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைச் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 124, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**124—**

**நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு**

***130—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி பகுதியில் பட்டு நெசவுத் தொழில் நெசவாளர்களுக்குக் கூலி உயர்வின்மையால் பட்டு நெசவுத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆரணி பகுதியில் பட்டு நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு இல்லாத நிலை இல்லை. மேலும் ஆரணி பகுதியில் பட்டு நெசவுத் தொழிலில் பாதிப்பு இல்லை.



2002 ஏப்ரல் 10]

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதி நெசவாளர்கள் அதிகம் நிறைந்த பகுதி. பட்டு உற்பத்தி செய்கின்ற நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1992 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோது அன்றைக்குக் கூலி உயர்வு பெற்றுத் தரப்பட்டது. அதன் பிறகு 10 ஆண்டுகளாகக் கூலி உயர்வு பெறாமல் அந்த நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மறுபடியும் வந்திருக்கின்ற காரணத்தால்—அந்த நெசவாளர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்த கூலி உயர்வு அதே நிலையில்தான் இப்போதும் இருக்கிறது. அந்த நெசவாளர் பெருமக்கள் எல்லாம் ஒவ்வொரு நாளும் தொகுதியில் என்னிடத்தில் கேட்கிறார்கள். ஆகவே, அம்மாவின் ஆட்சியிலே—அந்த நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு பெற்றுத்தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்களில் மக்களின் தேவைக்கு ஏற்ப குறைந்த விலையில் உள்ள பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சேலைகள் மேற்கண்ட சங்கங்களின் தலைமை விற்பனை நிலையம் மற்றும் கிளை விற்பனை நிலையங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன. மேலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இச்சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டங்களை வழங்கி அவ்வப்போது உற்பத்தியாகும் சேலைகளைக் கொள்முதல் செய்து வருகிறது. ஆரணி பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கூலி உயர்வு இல்லாத நிலை இல்லை. ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் திங்களில் 10 சதவிகித அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கூலி உயர்வு இல்லை என்ற நிலை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பான வழக்கினை முன்னாள் முதலமைச்சர் திரும்பப் பெற்றது

*முற்பகல் 11-05*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு செய்தியை, ஒரு பிரச்சினையை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், என் அருமைச் சகோதரர் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும்கூடத் தெரிவித்திருக்கிறார்கள்.

காவிரிப் பிரச்சினையிலே tribunal வேண்டுமென்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1971 ஆம் ஆண்டு ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டது. பிறகு அன்றைக்கிருந்த பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த வழக்கை வாபஸ் பெறவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களே எடுத்த எடுப்பிலேயே அதை வாபஸ் பெற வேண்டும் என்ற முடிவிற்கு வராமல் அன்றைக்கிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து 'இப்படிப் பாரதப் பிரதமர் அவர்கள் விரும்புகிறார்கள்' 'பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்ப்பதற்கு இந்த வழக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது எனவே, இந்த வழக்கை நீங்கள் வாபஸ் பெறுங்கள்; நான் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன் என்று சொல்கிறார்; எனவே, பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாருடைய கருத்துக்கு மதிப்பளிக்கிற வகையிலே நாம் என்ன செய்யலாம்' என்று கேட்டபோது, அன்றைக்கிருந்த எல்லாக் கட்சிப் பிரமுகர்களும் வழக்கை வாபஸ் பெறலாம் என்று தெரிவித்தார்கள். அதனடிப்படையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று குறிப்பிட்டதைப்போல 1972 ஆம் ஆண்டு அந்த வழக்கை நாம் வாபஸ் பெற்றோம். வாபஸ் பெறுகிறபோதுகூட, ஓர் உத்தரவாதத்தோடு பெற்றோம். மீண்டும் நாங்கள் இந்த வழக்கைத் தொடுப்பதற்கு வேண்டிய அந்த உத்தரவாதத்தோடுதான் நாங்கள் அந்த வழக்கைத் திரும்பப் பெற்றிருக்கிறோம்.

ஆக, 1971-1972 ஆம் ஆண்டிலேயே வழக்குத் தொடுப்பதும் அதனை வாபஸ் பெறுதலும் முடிந்துபோய் இருக்கிறது. ஆனால், இங்கே பேசிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், அதை ஒட்டியே நம்முடைய





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஏதோ கலைஞர் அவர்கள் சர்க்காரியா கமிஷன் விவகாரத்திலேதான் அந்த வழக்குகளைப் பெறுவதற்காக இந்திராகாந்தியிடத்திலே கெஞ்சிக் கூத்தாடி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன்....

**திரு. துரைமுருகன்:** அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சர்க்காரியா கமிஷனைப்பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை.

**திரு. துரைமுருகன்:** இல்லை, பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அப்படியில்லை. நேற்றே அதுபற்றியெல்லாம் விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) நேற்றே அதுபற்றி திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.....

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, நானே சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சர்க்காரியா கமிஷன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னவுடன், மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்தவுடன், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்க்காரியா என்று அல்ல சி.பி.ஐ. வழக்கு என்று அதைத் திருத்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன் அவர்களே, சுருக்கமாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். அதாவது (குறுக்கீடு) இல்லை, இது குறித்து ஓர் உரிமை மீறல் பிரச்சினை தங்கள் கட்சியின் சார்பில் சில சட்டமன்ற உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என் ஆய்வில் இருக்கிறது. நான் அவைக் குறிப்பைப் பார்த்து என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து, அதுபற்றிய தீர்ப்பை நான் அளிக்கிறேன். நீங்கள் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறீர்கள்.

**திரு. துரைமுருகன்:** உங்கள் தீர்ப்பை நான் குறை சொல்லவில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சி.பி.ஐ. வழக்கு என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கும், தங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்காரியா கமிஷன், ஆட்சி கலைக்கப்பட்ட 1975-1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு போடப்பட்ட வழக்கு....

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், ஏற்கெனவே அதற்கு விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. ஆனால், சி.பி.ஐ. வழக்கு என்பது அதற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டிலேதான் வருகிறது. எனவே, 1980 ஆம் ஆண்டு வருகிற வழக்கிற்காக 1972 ஆம் ஆண்டே போடப்பட்ட வழக்கை, சுப்ரீம் கோர்ட்டிலே போடப்பட்ட வழக்கை வாபஸ் பெற்றார் கலைஞர் என்று சொல்வது விந்தையாக இருக்கிறது. அது ஒன்று. இரண்டாவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதுவும் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதற்கும் விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கும் விளக்கம் சொன்னார்கள். அதாவது, சி.பி.ஐ. வழக்கு இல்லை. அதுபற்றிய புலனாய்வு தொடங்கப்பட்டிருக்கிறது என்றுதான் அவர் சொன்னார். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** 1974-லே கிடையாதே. இன்னும் சொல்லப்போனால், அப்போது புலனாய்வே வரவில்லையே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிய உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் குறிப்பிட்ட இவ்வளவு கருத்துகளையும் உள்ளடக்கி சட்டப்பேரவை உறுப்பினர்களால் உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கப்பட்டிருக்கிறது. நான், அவைக் குறிப்பிலே பேசப்பட்ட கருத்துகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு அதுபற்றிய தீர்ப்பை வழங்குகிறேன்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. உங்களுடைய கருத்தை நான் மறுத்துச் சொல்கிறேன். ஆகையினாலே உண்மைக்கு மாறான ஒரு தகவலை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்களே தீர்ப்புச் சொல்லக்கூடாது இல்லையா? உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**THIRU DURAIMURUGAN**: It is a fact.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மைக்கு மாறானது என்று எப்படி நீங்கள் தீர்ப்புச் சொல்லலாம்? நீங்களே தீர்ப்புச் சொல்லக்கூடாது அப்படி—



2002 ஏப்ரல் 10]

**திரு. துரைமுருகன்:** அதேபோன்று, (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதோ சொல்லிவிடுகிறேன். நம்முடைய எஸ்.ஆர்.பி. அவர்கள்கூட ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏதோ 250 டி.எம்.சி-க்கு—ஏன் என்றால் தவறாகத் தகவல் வந்துவிடக்கூடாது. ஒத்துக்கொண்டதைப்போல்; ஆனால்—அன்றைக்கு கலைஞர் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். 1974 ஆம் ஆண்டு அப்போது பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் ஒரு ஸ்கீமைக் கொடுத்தார்கள், நமக்கு என்ன செய்வது என்று. அதன் அடிப்படையிலே, என்ன என்று கேட்டால் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1972 ஆம் ஆண்டு வரையில் 5 ஆண்டுகளிலே சராசரியாக தமிழ்நாட்டினுடைய உபயோகத்தினுடைய தண்ணீர் மொத்தம் 489 டி.எம்.சி. என்று கணக்குப் போட்டார்கள். அதிலே 100 டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று அந்த வரைவுத் திட்டம் சொன்னது. ஆனால் 1934-லேயிருந்து 1972 ஆம் ஆண்டு வரை, 38 ஆண்டு காலத்தில் சராசரியாக மேட்டூருக்கு வருகிற தண்ணீர் அளவு...

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நான் சொல்வதைக் கேளுங்கள். ஒவ்வொரு நாளும் இது குறித்துச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருப்பது நல்லதல்ல. பிரச்சினை ஏதாவது இருந்தால் உரிமை மீறல் பிரச்சினையாகத் தாருங்கள். கொடுக்கப்பட்ட விவரங்களிலே தவறு இருக்கிறது என்றால் உரிமை மீறல் பிரச்சினையாகத் தாருங்கள். அதுபற்றி விசாரித்து தீர்ப்புச் சொல்கிறேன். உரிமை மீறல் பிரச்சினை ஏற்கெனவே ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அதைப்பற்றியும் விசாரிக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தி.மு.க. உறுப்பினர்கள், இந்தப் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டபோது அவையில் இல்லை. அது எங்களுடைய தவறு அல்ல. அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். விரும்பியிருந்தால் மீண்டும் உள்ளே வந்து விவாதத்தில் கலந்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. வெளிநடப்புச் செய்த பிற கட்சியினர் எல்லாம் மீண்டும் உள்ளே வந்து விவாதத்தில் கலந்து கொண்டார்கள். தவறு செய்வது மனித இயல்பு. தவறு செய்யாதவர்கள் இந்த உலகத்தில் இல்லவே இல்லை. நானும் மனிதப் பிறவிதான். நேற்றுத்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 10

தவறாக, வாய் தவறி ஒரு கருத்தைச் சொன்னேன். உடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுந்து அந்தத் தவறைச் சுட்டிக்காட்டினார்கள். உடனடியாக நான், அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டு, தவறை ஏற்றுக்கொண்டு, அதைத் திருத்திக்கொள்கிறேன் என்று சொன்னேன். அதுவும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. ஆகவே இதில் உரிமை மீறல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் உரிமை மீறல் பிரச்சினை அவர்கள் கொடுத்தால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்புக் கூறலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன் கீழ்....(குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, உங்கள் subject தான். பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) என்ன, பழனிசாமி?

### (ஆ) திஹார் சிறைப்பணியில் உள்ள தமிழகக் காவல் துறை அதிகாரிகள் பற்றி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள திஹார் சிறையில் தமிழகத்தினுடைய காவல் துறையினர் பணிபுரிந்து வருவதாகவும், 66 கோடி ரூபாய் பாக்கி இருப்பதாகவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது குறித்து ஏதாவது அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களா? கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கிறீர்களா?

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். நான் அனுமதிதான் கேட்கிறேன். அமைச்சரிடம் விளக்கம் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னவென்று ஆய்வு செய்து அதற்குப் பிறகு அரசிடத்தில் பதில் இருந்தால் சொல்லச் சொல்கிறேன். உட்காருங்கள்.



2002 ஏப்ரல் 10]

## 3. கவன ஈர்ப்பு

### பெண்ணாகரம் தொகுதி, சொரக்காம்பட்டி கோவிந்தன், காட்டு யானை மிதித்து இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி.கே. மணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேம்பிலஹள்ளி ஊராட்சி, சொரக்காம்பட்டியில் கோவிந்தன் என்பவர் காட்டு யானை மிதித்து உயிரிழந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேம்பிலஹள்ளி ஊராட்சி, சொரக்காம்பட்டி கிராமத்தில் கோவிந்தன், த/பெ. முனியன், வயது சுமார் 42 என்பவர் 26-1-2002 ஆம் தேதி இரவு 11-00 மணியளவில் ஆட்டுப்பட்டிக்குக் காவல் இருந்தபோது காப்புக் காட்டில் இருந்து யானைகள் வருவதைக் கண்டு தனது நிலத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள ஓடியபோது காட்டு யானை மிதித்து இறந்துவிட்டார் என்ற தகவல் கிடைக்கப்பெற்றதும் பாலக்கோடு சரகர் சிப்பந்திகளுடன் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, திரு. கோவிந்தன் யானை மிதித்து இறந்ததை உறுதிப்படுத்தி, 27-1-2002 அன்று தந்தி மூலம் மேலதிகாரிகளுக்குத் தகவல் அளித்துள்ளார். 27-1-2002 அன்று உதவி வனப் பாதுகாவலரும், 29-1-2002 அன்று தருமபுரி மாவட்ட வன அலுவலரும் சொரக்காம்பட்டி கிராமத்திற்கு பாலக்கோடு சரக சிப்பந்திகளுடன் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட

[திரு. ப. மோகன்] [2002 ஏப்ரல் 10

குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்துவிட்டு நிவாரணம் வழங்கத் தேவையான ஆவணங்களை அளிக்குமாறு அறிவுரை வழங்கி உள்ளனர்.

அரசாணை (நிலை) எண் 205, சுற்றுப்புறம் மற்றும் வனம், நாள் 12-9-2000-ன்படி யானை மிதித்து இறந்துபோனவர்களுக்கு ரூ. 1.00 இலட்சம் வரை நிவாரணம் வழங்க வழிவகை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, பாதிக்கப்பட்ட நபர் திரு. கோவிந்தன் என்பவருக்கு உரிய நிவாரணம் வழங்க தருமபுரி மாவட்ட வன அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கிராம மக்களைச் சந்தித்து யானைகள் காப்புக் காட்டிற்கு வெளியில் வந்தால் பறையடித்தும், யானைகள் வரும் வழியில் நெருப்பு உண்டாக்கியும், இரவு நேரங்களில் வீட்டின் முன்பு மின் விளக்கு தொடர்ந்து எரியவிடவும், காப்புக் காட்டிற்குள் தனியாக யாரும் செல்லவேண்டாம் என்றும், யானை வந்தால் பட்டாசு வெடித்து காட்டிற்குள் விரட்ட வேண்டும் எனவும், வன அலுவலர்களுக்கு உடனே தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும், யானையிடமிருந்து பாதுகாத்துக் கொள்வது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த துண்டுப் பிரசுரம் மூலமும், சந்தை நாட்களில் ஒலிபெருக்கி மூலமும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. யானைகள் காப்புக் காட்டிற்கு வெளியில் வரும பகுதியைக் கண்டறிந்து கம்பி வேலி அமைத்து நெருப்பு உண்டாக்கி விரட்டப்படுகிறது. பெரிய பெரிய பாறைகளில் சுண்ணாம்பு வரிகள் பூசப்பட்டுள்ளன. மேலும், யானைகள் குறித்த விவரம் உடனுக்குடன் தகவல் பெறப்பட்டு வனச் சிப்பந்திகள் மேற்படி பகுதியில் தொடர்ந்து ரோந்துப் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற மாதிரி கடந்த மாதம் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்த பாப்பாரப்பட்டி பகுதியில் சொரக்காம்பட்டி கிராமத்தை அடுத்துள்ள காந்தி நகர் பகுதியிலே காட்டு யானை அடிக்கடி வந்து சென்றது. காட்டு யானை வந்தவுடன் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் அதிகாரிகளிடத்தில் புகார் செய்ததன் வாயிலாக அதிகாரிகள் அந்தக் காட்டு யானையை விரட்டி அடித்துவிடுவார்கள் என்ற நிலையை எதிர்பார்த்தும்கூட, அவர்கள் செய்யத் தவறிய



2002 ஏப்ரல் 10] [திரு. ஜி.கே. மணி]

காரணத்தினால் அந்தப் பகுதியில் தொடர்ந்து காட்டு யானை வந்தது. அவர் இறந்துவிட்ட அந்த நாள் அன்று, சரியாக இரவு 12.00 மணிக்கு மேலே காட்டு யானை வந்து, அந்தக் கிராமத்திலே இருக்கிற வீடுகளையெல்லாம் சுற்றி ஓலமிட்டு, அங்கு இருக்கக்கூடிய நாய்கள் எல்லாம் குரைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, அந்தப் பகுதி, அந்தக் கிராமத்திலிருந்து கோவிந்தன் என்பவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஒரு கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அலறி அடித்துக்கொண்டு வெளியே வந்தார். வந்தவுடனே அவரை யானை அதே இடத்திலே மிதித்து அடித்து சாகடித்து விட்டது. யானை மிதித்து இப்படிச் சாகடிக்கப்பட்ட கோவிந்தனுடைய குடும்பத்திலே 3 குழந்தைகள் இருக்கிறார்கள், மனைவி இருக்கிறார். இந்த விவசாயக் கூலித் தொழிலாளியினுடைய குடும்பம் இன்றையதினம் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்க வேண்டுமென்கிற கோரிக்கையை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இதுபோல இந்த நாட்டிலே பல்வேறு பிரச்சினைகளினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படுகிறது.

*முற்பகல் 11-15*

நான் அமைச்சரிடத்தில் சொன்னேன், கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் இதுவரையிலே எடுத்துக் கொள்ளப்படவில்லை; நிவாரண நிதியும் வழங்கப்படவில்லை என்ற அந்த வேதனையான செய்தியைச் சொல்லி உடனடியாக அது வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு அந்தப் பகுதியிலே காட்டு யானைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. கடந்த 7 ஆம் தேதிகூட நான் ஒகேனக்கல் பகுதிக்குச் சென்றுவிட்டு திரும்பி வந்தேன். திரும்பி வருகின்ற நேரத்திலே சுமார் 7.00 மணிக்கு திடீர் என்று காட்டிலேயிருந்து ரோட்டுக்கு ஒரு சிறுத்தைப்புலி பாய்ந்தது. என்னுடைய காரையும் அடித்துவிட்டது. என்னோடு வந்தவர்களெல்லாம் அலறியடித்து உயிருக்குப் பயந்து சத்தம் போட்டார்கள். உடனடியாக அந்தச் சிறுத்தைப்புலி சீறிவிட்டு மீண்டும் புதருக்குள் மறைந்துவிட்டது. அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்த பிறகுதான் நேற்றைய முன்தினம் அந்தப் பகுதிக்கு வனத் துறை அதிகாரிகள்

எல்லாம் சென்றிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே தொடர்ந்து காட்டு யானை, சிறுத்தைப்புலி போன்ற மிருகங்களாலே ஆடுகள் கொல்லப்படுகின்றன, மாடுகள் கொல்லப்படுகின்றன. பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற காரணத்தினாலே அந்த வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களை மீட்பதற்கு, பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இதிலே நிவாரணம் வழங்கப்படுகிறது என்பது அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதையே மறுபடியும் கேட்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேம்பிலஹள்ளி ஊராட்சி, சொரக்காம்பட்டிப் பகுதியில் கோவிந்தன், வயது 42....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, நிவாரணம் வழங்கப்படுமா என்று கேட்கிறார்கள். விரைவாகக் கொடுக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அதற்குரிய பதில் மட்டும் போதும்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 2001-2002ல் 25 இலட்சம் ரூபாய் மைய அரசிடம் கேட்கப்பட்டு, 20 இலட்சம் ரூபாய் மட்டும் வந்திருக்கிறது. இந்தத் தொகையில் 23 இனங்களில் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க மைய அரசின் ஆணையைப் பெற்றவுடன் வழங்கப்படும் என்பதையும் அவைக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இறந்தவர்கள் குடும்பத்திற்கு முன்பு 50 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை இப்போது ஒரு இலட்சம் ரூபாயாக மாற்றி ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் என்பதை உயர்த்தி இரண்டு இலட்சமாகத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேர்வைத் தலைவர்:** அமைச்சர் இதற்கு பதில் சொல்லவேண்டாம், போதும்.





## 4. விதி 110–ன் கீழ் அறிக்கை

### திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் புத்துயிர் அளித்தல் பற்றிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்று அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, பொதுத் துறை, வங்கிகள், நிதி நிறுவனங்கள், தனியார் ஆகியோர் இணைந்து, ஒரு புதிய முயற்சியாக, திருப்பூர் நகரத்திற்கு, அடிப்படைக் கட்டுமான வசதிகளைச் செய்து கொடுக்க, 1995ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு முயற்சியை மேற்கொண்டது. அந்த முயற்சிதான் "புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்". அந்தக் கழகத்தை தொடங்கி, அதன் மூலம், திருப்பூர் நகருக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி, தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நீர், சாலை வசதிகள் ஆகியவை செய்து தரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. திருப்பூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஊரகப் பஞ்சாயத்துகள், நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் உள்ளூர்த் திட்டப் பகுதியில் உள்ள ஊர்களில் உள்ள குடியிருப்புகள் மற்றும் தொழில்கள் பயன்படுமாறு இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியைத் தொடர்ந்து வந்த தி.மு.க அரசு இந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டமைப்பு வசதிகளை அமைக்க எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அதாவது, இதற்கான உதவி பெறுவதற்கு நிதி நிறுவனங்கள், பொதுத் துறை, அரசுத் துறை ஆகியவற்றைக் கொண்டு ஒரு நிதியை உருவாக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

*முற்பகல் 11-20*

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, மீண்டும் திருப்பூர் நகா

[திரு. சி. துரைராஜ்] [2002 ஏப்ரல் 10

மேம்பாட்டுக் கழகத்திற்காக 615 கோடி ரூபாய் நிதியினை ஏற்பாடு செய்வதற்காக முன் முயற்சியாகத் தமிழக அரசு 30 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. தமிழக அரசு முன்வந்ததைத் தொடர்ந்து, இதர நிதி நிறுவனங்கள் இந்தத் திட்டத்திற்கு நிதி வழங்க முன்வந்துள்ளன. திருப்பூர் நகரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டம் நாளொன்றிற்கு 185 மில்லியன் லிட்டர் நீரினைத் திருப்பூர் நகருக்கும், வழியோர கிராமங்களுக்கும் 3 ஆண்டுகளுக்குள் வழங்கும்.

திருப்பூர் நகரில் வசிக்கும் 3.5 இலட்சம் மக்கள் மட்டுமின்றி அந்த நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 4 இலட்சம் மக்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். இத்திட்டம், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் கடுமையான அறைகூவலை எதிர்கொள்ள வேண்டியுள்ள பின்னலாடைத் தொழிலின் போட்டித் திறனை மேம்படுத்தும். நிலத்தடி நீர் மாசுபடுவது அதிகரித்து வருவதால், தொலைதூரத்தில் உள்ள விவசாயக் கிணறுகளிலிருந்து நீர் கொண்டு வர வேண்டியுள்ள நிலை இத்தொழிலின் சாத்தியப்பாட்டினை அச்சுறுத்துகிறது. அதைவிட முக்கியமாக திருப்பூர் குடிநீர்த் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதால் அது உலக வர்த்தக நிறுவனத்தின் கடுமையான கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள திருப்பூர் ஏற்றுமதியாளர்களுக்கு உதவியாக இருக்கும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆனால் தனியாக ஒரு புதிய கழிவுநீர் அகற்றும் திட்டம் திருப்பூர் நகரில் 60 சதவிகிதம் பகுதிகள் பயன்பெறும்விதத்தில் செயல்படும். இதன்மூலம் சென்னைக்கு அடுத்தபடியாக மாநிலத்திலே அதிக அளவு இணைப்புகளைக் கொண்ட கழிவுநீர் அகற்றும் திட்டத்தினைத் திருப்பூர் பெறுகிறது.

முன்சொல்லப்பட்டவைகளால், இத்திட்டத்தின் மூலம் இப்பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் பயனுள்ள விளைவை ஏற்படுத்தும். தொழிற்சாலைக் கழிவுகளும், குடியிருப்புக் கழிவுகளும் சுத்திகரிப்புச் செய்யப்படுவது உறுதி செய்யப்படுவதால், இத்திட்டத்தின் விளைவாக இப்பகுதியின் நிலத்தடிநீர் மேம்பாடு அடையும். நாட்டிலேயே முதன்முதலாக வணிக முறையில் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தலும், புதுப்பித்தலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதி தமிழ்நாடு அரசும், திருப்பூர் நகராட்சியும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்துடன் சலுகை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. அதைத்தொடர்ந்து புதிய திருப்பூர் பகுதி



2002 ஏப்ரல் 10] [திரு. சி. துரைராஜ்]

மேம்பாட்டுக் கழகம் இதற்குச் செயல் திட்டம் வகுத்து, கட்டுமானங்களை ஏற்படுத்தி இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களின் கூட்டமைப்புடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இக்கூட்டமைப்பு, மகேந்திரா, பெக்டெல், மற்றும் யுனைடெட் யுட்டிலிட்டீஸ் ஆகிய நிறுவனங்களைக் கொண்டதாகும். இத்திட்டம் சுமார் ஓர் ஆண்டு காலம் தாமதப்பட்டிருப்பினும், 2001 ஆம் ஆண்டிலே, மே மாதம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்றபின் இத்திட்டம் முதன்மையாகக் கருதப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. இது தமிழ் மாநிலத்திற்கு மட்டுமின்றி, தமிழ்நாடு முழுமைக்குமே ஒரு முன்னோடித் திட்டமாகும். வளர்ச்சிப் பணிகளில் பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பு என்னும் முன்மாதிரிக்கு இத்திட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 34 முதல் 40 வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு அன்னையின் பாதம் பணிந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2002 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-25*

## 7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 19 - உயர் கல்வித் துறை**—தொடர்ச்சி

(ஆ) **கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வித் துறை**—தொடர்ச்சி

(இ) **கோரிக்கை எண் 47 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**—தொடர்ச்சி

(ஈ) **கோரிக்கை 44 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு**—தொடர்ச்சி

(உ) **கோரிக்கை எண் 37 - பொதுத் துறை**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி மானியக் கோரிக்கையின் மீதான விவாதம். திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்கும் முன்பாக கடந்த 1991-96 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும், இப்போது பொறுப்பேற்று இருக்கின்றபோதும் என்னுடைய சில கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றிக்

கொடுத்தமைக்காக நான் அவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, சென்ற முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, கோவைக்கு ஓர் இசைக் கல்லூரி வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். அதை ஏற்றுக்கொண்டு, அந்தக் கல்லூரி இப்போது அங்கே செயல்பட்டு வருகிறது என்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த மாமன்றத்திலே முதன்முதலாக மாநில உயர் கல்வி மன்றம் ஒன்று வேண்டுமென்று—State Council for Higher Education—நான் ஒரு கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, இப்போது அது அமலாகி செயல்பட்டு வருகிறது என்பதற்காகவும் நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேசமயத்திலே நான் அன்றைக்கு இன்னொரு கோரிக்கையும் வைத்தேன். இந்தப் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு ஒரு மண்டல மையம்—Regional Centre—இங்கே நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கை அன்றைக்கு ஏற்கப்படாவிட்டாலும், இனிமேலாவது அது பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

நான் அன்றைக்கு கோவைக்கு ஒரு கோளரங்கம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, கோவைக்கு அருகிலுள்ள விளாங்குறிச்சி கிராமத்திலே 6 ஏக்கர் நிலத்திலே அந்தக் கோளரங்கம் வர இருப்பதை எண்ணிப் பார்க்கிறபோது, வைணவப் பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. "அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன், அரங்கத் தரவணைப் பள்ளியானே" என்று சொல்வார்கள். அதுபோல, இனிமேல் வர இருக்கிற அந்தக் கோளரங்கிற்கு நான் இப்போதே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்றமுறை நான் இங்கே பேசுகின்றபோது, சேலத்தில் எப்படி ஒரு extension centre—ஆக இருந்ததை நீங்கள் பல்கலைக்கழகமாக மாற்றினீர்களோ அதைப்போல வேலூரிலே இருக்கிற அந்த விரிவாக்க மையத்தையும் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அந்த வேண்டுகோள் எனக்காக ஏற்கப்பட்டுள்ளதா, எப்படியென்று எனக்குத் தெரியாவிட்டாலுங்கூட, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, இப்போது அது திருவள்ளுவர் பல்கலைக்கழகமாக மாறியிருப்பதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.



இந்த 2002-2003 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையிலே 6 அரசு கலைக் கல்லூரிகளில் M.C.A., M.B.A., பட்டமேற்படிப்பு பாடப் பிரிவுகள் தொடங்க இருப்பதனை அறிந்து, நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த M.C.A., M.B.A., பட்டப்படிப்புகளைக் கலை அறிவியல் கல்லூரிகளில் தொடங்குகிறபோது, பொறியியல் கல்லூரிகளிலே இருக்கின்ற அளவுக்கு அவற்றிற்குரிய மரியாதை கிடைப்பதில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், பொறியியல் கல்லூரிகளிலே இந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள் ஒரு நாளைக்கு 7 மணி நேரம் பணியாற்றுகிறார்கள். ஓர் ஆண்டிற்கு 180 நாட்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், கலை அறிவியல் கல்லூரிகளில் அவ்வாறு இல்லை. ஆகையினாலே, கலை அறிவியல் கல்லூரிகளில் தொடங்க இருக்கிற M.C.A., M.B.A., பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள் பொறியியல் கல்லூரிகளில் எவ்வளவு நேரம் சொல்லிக் கொடுக்கிறார்களோ அதேபோல இங்கேயும் சொல்லிக்கொடுக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

இன்றைக்கு 187 புதிய ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதையும், 1243 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டு இருப்பதையும் நான் வரவேற்கிறேன். அந்த முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

அதே சமயத்திலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நான் இங்கே பேசுகின்றபோது, 5ஆம் வகுப்பிலே, 8ஆம் வகுப்பிலே மாணவர்கள் தேர்விலே தோற்றுவிட்டால், அவர்கள் ஓர் ஆண்டுகாலம் காத்திருக்க வேண்டிய நிலைமை இல்லாது ஓரிரு மாதத்திற்குள்ளாகவே, மீண்டும் தேர்வு எழுதி, ஜூன் மாதத்திலே, அவர்கள் மேல்படிப்புக்குச் செல்வதற்கு நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். அது, 5ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்புக்கு இல்லாவிட்டாலும்கூட, முதற்கட்டமாக, பரிட்சார்த்தமாக, நீங்கள் இப்போது 10ஆம் வகுப்பிற்கும், 12ஆம் வகுப்பிற்கும், தேர்விலே தோல்வி அடைந்த மாணவர்கள் உடனடியாகத் தேர்வு எழுதி ஜூன் மாதத்திலேயே மீண்டும் மேல்படிப்புக்குச் செல்வதற்கு வாய்ப்பு அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்கலைக்கழக மானியக் குழுவோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ள இந்த மாநில உயர் கல்வி மன்றமானது பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. ஒன்று, பெரிய பல்கலைக் கழகங்களுக்கு அருகே இருக்கிற கல்லூரிகளை ஒன்றாக இணைக்கிற திட்டம்; அதற்கு அடுத்தபடியாக, அன்னை தெரசா பல்கலைக்கழகத்திலே அருகிலே இருக்கிற கல்லூரிகளை ஒன்றாக இணைக்கிற திட்டம். இந்த இரண்டு திட்டங்களும் நல்ல திட்டங்கள். இது அந்தப் பல்கலைக்கழகத்திற்கும் நல்லது, அங்கே இணைக்கப்படுகின்ற கல்லூரிகளுக்கும் நல்லது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இந்த மாமன்றத்திலே நான் நுழைந்தபோது, Common University Act பொது பல்கலைக்கழகச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தேன். தமிழ்நாட்டிலே குறிப்பாக, புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான் 5 பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக, பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பிறகு நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் என்று பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இந்தப் பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் தனித்தனியான சட்டங்கள் இருப்பதனாலே ஒரு பல்கலைக்கழகத்திலே செனட்டுக்கு அதிக அதிகாரம், இன்னொரு பல்கலைக்கழகத்திலே சிண்டிகேட்டுக்கு அதிக அதிகாரம். ஆக இப்படியில்லாமல் எல்லாப் பல்கலைக்கழகங்களிலேயும் ஒரே மாதிரியான அதிகாரம் இருப்பதற்கு நீங்கள் வகை செய்ய வேண்டுமென்று சொன்னால், பொதுவான ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தேன். அதுதான் Common University Act. ஆனால், அந்த Common University Act-ஐக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னபோது, நான் இன்னொன்றையும் சொன்னேன். தமிழ்நாட்டிலே நிதிநெருக்கடி காரணமாக இப்போது அரசாங்கமே புதிய கல்லூரிகளைத் தொடங்க இயலவில்லை. குறிப்பாக இன்று இருக்கிற பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிலகங்கள், கலைக் கல்லூரிகள் இவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டால், பொறியியல் கல்லூரிகள் 222; அதிலே அரசாங்கம் நடத்துகின்ற கல்லூரிகள் 7 தான். 215 கல்லூரிகள் தனியார் துறையிலே இருக்கின்றன. ஒன்று அது உதவி பெறும் கல்லூரியாக இருக்கலாம், அல்லது உதவி பெறாத கல்லூரியாக இருக்கலாம். எப்படியிருந்தாலும், தனியார்த்துறையிலே ஒட்டுமொத்தமாக 215 கல்லூரிகள் இருக்கின்றன.



**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோல பாலிடெக்னிக்குகள். மொத்தம் 203 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அதிலே 22 பாலிடெக்னிக்குகள்தான் அரசாங்கம் நடத்துகிறது. மீதம் இருக்கிற 181 பாலிடெக்னிக்குகள் அதாவது பல்தொழில் பயிலகங்கள் தனியாரிடம்தான் இருக்கின்றன. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மொத்தம் 477. அதிலே 410 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தனியார் துறையிடம்தான் இருக்கின்றன. இருந்தாலும்கூட, இந்தத் துறையிலே மிகச் சிரமத்திற்கிடையிலே இதை நடத்துகின்ற அந்தத் தனியார் கல்லூரி நிர்வாகிகளுக்கு, செயலாளர், தலைவர் அல்லது Correspondent ஆகியவர்களுக்கு, அந்தப் பல்கலைக்கழகத்திலே, சிண்டிகேட்டிலே உரிய மரியாதை இல்லை, உரிய இடம் இல்லையென்பதை நான் அன்றைக்குச் சொன்னேன். இன்றைக்கு நீங்கள் Common University Act-லே கொண்டு வருகிறபோது ஒரேயொரு இடம்தான் கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறீர்கள். நான் உங்களைப் பார்த்துக்கேட்டுக் கொள்ளவிரும்புவதெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *10 நிமிடங்கள் ஆயிற்று. சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. வி.கே. லட்சுமணன்:** *5 நிமிடம் கொடுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி, பேசுங்கள்.*

*முற்பகல் 11-35*

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆக, குறைந்தபட்சம் இந்தத் துறையிலே இருக்கின்ற தனியார் கல்லூரிகளை நடத்துகின்றவர்களில் 4 பேருக்காவது நீங்கள் அதிலே இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளிலே நீண்டகாலமாகக் காலி இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவை approved vacancies. அவற்றை நிரப்புவதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தனியார் நடத்துகிற கல்லூரிகட்கு non salary grant 3 ஆண்டுகளாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்துவதற்காக Private Colleges Regulation Act—தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்று சட்டம்—என்ற ஒரு சட்டம் 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அப்பொழுது சுயநிதிக் கல்லூரிகள் கிடையாது. Self Finance Colleges எல்லாம் கிடையாது. ஆனால் அதற்குப் பின்னாலே ஏராளமான சுயநிதிக் கல்லூரிகள் வந்துவிட்ட பின்னாலே, இப்போது அதே சட்டத்தை இந்தக் கல்லூரிகளுக்கும் நாம் அமல்படுத்த முடியாது. இந்தக் கல்லூரிகள் வேறு. அது வேறு. அதனாலே, இரண்டுக்கும் தனித்தனி சட்டம் வேண்டும். ஆக நீங்கள் அந்த சுயநிதிக் கல்லூரிகளுக்குத் தனியாக ஒரு ஒழுங்காற்று சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எப்படி சிண்டிகேட்டிலே நம்முடைய தனியார் நிர்வாகத்திற்கு இடம் ஒதுக்கிட வேண்டும் என்று கேட்கிறோமோ, அதேபோல மாநில உயர் கல்வி மன்றத்திலும் தனியார் நிர்வாகத்திற்கு இடம் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நமக்கு நிறைய ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து ஆசிரியர்களைப் பெற வேண்டும் என்று சொன்னால், ஆண்டு ஒன்றுக்கு 2000 ஆசிரியர்கள்தான் கிடைப்பார்கள். ஆகையினால், மைசூரில் இருப்பது போன்று கலைக் கல்லூரிகளிலேயே ஒரு 5 வருட Integrated Course - B.Ed.-ஐ நாம் இப்போது கொண்டுவர முடியும் என்று சொன்னால், அங்கேயே நாம் சிறந்த ஆசிரியர்களை உருவாக்க முடியும். அதற்குச் சான்று ஏராளமாக அண்டை மாநிலங்களிலே இருக்கிறது. அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமில்லாமல், இப்போது பள்ளிகளிலேகூட ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கிற ஆசிரியர்கள் ஒன்று கணக்கு ஆசிரியர், இல்லாவிட்டால் விஞ்ஞான ஆசிரியர்; இப்படித்தான் இருக்கிறார்கள். நம்முடைய கிராமப்புற மாணவர்களுடைய ஆங்கிலத் தரம் வெகுவாகக் குறைந்துபோய்விட்டது. எனவே, இந்த ஆங்கிலத் தரம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால் பள்ளிகளிலே ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள் ஆங்கில மொழியிலே பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் வகை செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



நீண்டகாலமாக எனக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது. தமிழுக்காக தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட, தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் பெயரைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வைக்க வேண்டும் என்று நான் பலமுறை இங்கே பேசியிருக்கிறேன். இப்பொழுதும் சொல்கிறேன். நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது பல்கலைக்கழகங்கள் எவ்வளவு வந்தாலும், கல்லூரிகள் எவ்வளவு வந்தாலும், தேவை நிறைய இருக்கிறது. ஆகையினாலே உலகம் முழுவதும் திறந்த நிலைக் கல்வி - அஞ்சல் வழிக் கல்வி—மிக வேகமாக வளர்ந்து வருகிறது. நம்முடைய சென்னை பல்கலைக்கழகத்தில் பார்க்கிறேன் "அஞ்சல் வழிக் கல்வி" என்று பெயர்ப் பலகையில் எழுதப்பட்டிருக்கிறது. கீழே ஆங்கிலத்திலே "Open University" என்று எழுதி இருக்கிறார்கள். ஆனால் தமிழில் திறந்தவெளி பல்கலைக்கழகம் என்று எழுதி இருக்கிறார்கள். அது திறந்தவெளி அல்ல. அதைத் திருப்பி ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தால் "Open Air University" என்று ஆகிவிடும். "Open Air" என்று சொன்னால் சாந்தி நிகேதனிலே மரத்தடியிலே உட்கார்ந்து படிக்கும் பள்ளிக்கூடம் போல ஆகிவிடும். இது அப்படி அல்ல. திறந்த நிலை, இந்தத் தன்மைக்கு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் என்று பெயர். இந்தத் திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மூலமாகக் கல்வி மிக வேகமாகப் பரவி வருகிறது."

*முற்பகல் 11-40*

நம்முடைய பாரத நாட்டிலே 10 பல்கலைக்கழகங்கள் மிகச் சிறப்பாக IGNOU உட்பட செயல்பட்டு வருகின்றன. IGNOU-யைப் போல தமிழ்நாட்டில் ஒரு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தை விரைவாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் அஞ்சல் வழியாக வெறும் அச்சடித்த பாடங்களை மட்டும் அனுப்புவது இல்லை. அதற்குப் பதிலாக வானொலி, தொலைக்காட்சி, ஒலிப்பேழை, ஒளிப்பேழை, சாட்டிலைட், பிறகு Virtual University என்று அவர்கள் மிக வேகமாக இப்போது தங்களுடைய பாடங்களைச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தைப் போல பாடம் சொல்லிக்கொடுக்க வழி செய்துகொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதிய Common University Act-ல் கூட Academic Council-க்கு 84 பேருக்கு மேலே போடப்போவதாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே கூடத் தனியாருக்கு Principal-க்கு ஆசிரியருக்கு என்று சொன்னால்; நாம் அதைப் பார்க்கிறபோது—செனட் கிடையாது. நீங்கள் சொல்வதிலே செனட் கிடையாது—அந்த Academic Council-ஐப் பார்த்தால் அது Senate ப[illegible]தான் இருக்கிறது. நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம்; முதல்வர்கள் 15 பேர், ஆசிரியர்கள் 15 பேர், தனியார் கல்லூரிகளின் நிர்வாகிகள் 15 பேர் என்று இருக்குமாறு நீங்கள் பார்த்துக்கொண்டால், அது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் இந்தச் சட்டமானது நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைப்—Deemed University—பாதிக்கக்கூடாது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது தமிழ்நாட்டில் மாநில உயர் கல்வி மன்றம், பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, எல்லாக் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறது. ஆனால் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால், 2, 3 ஆண்டுகளாக அது 44-ஐத் தாண்டவே இல்லை. 44 கல்லூரிகள்தான் தன்னாட்சி பெற்று இருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடியாக இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் இந்த 44-ஐ ஏன் தாண்டவில்லை என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், எந்தெந்தக் கல்லூரிகள் எல்லாம் தேசிய தர நிர்ணயம் மற்றும் மதிப்பீட்டுக் கழகத்தின் மூலம் நான்கு நட்சத்திர அந்தஸ்து அல்லது ஐந்து நட்சத்திர அந்தஸ்து பெற்றிருக்கின்றனவோ, அந்தக் கல்லூரிகளுக்கு எல்லாம் நீங்கள் தாராளமாகத் தன்னாட்சி அந்தஸ்தைக் கொடுத்து விடலாம்; அப்படிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, Private Colleges Regulation Act-ல்—தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்று சட்டத்திலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் பேசி முடித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். இன்னும் பத்து உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான செய்தி இருக்கிறது. அந்தச் சட்டம், பெரும்பாலும் ஆசிரியர்களைக் கட்டுப்படுத்தும் விதிகள் அடங்கிய சட்டமாக இருந்தாலும் கூட, ஊழியர்களுடைய போக்கைக் கட்டுப்படுத்தக்



கூடியதாக இல்லை. ஆகவே, அதற்குரிய சட்டத் திருத்தத்தை நீங்கள் இங்கே கொண்டுவந்து, அங்கே உள்ள கடைநிலை ஊழியர்களைக் கூடக் கட்டுப்படுத்துவதற்கு வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே புதிதாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்காக ஒரு தனி இயக்குநரகத்தைத் தோற்றுவித்திருப்பது பாராட்டுக்குரியது. அதே நேரத்தில் அண்ணா பல்கலைக்கழகம் குறித்து எனக்குக் கொஞ்சம் கருத்து வேறுபாடு உண்டு. என்ன கருத்து வேறுபாடு என்று சொன்னால், 219 பொறியியல் கல்லூரிகளை அதிலே சேர்த்திருக்கிறீர்கள். இப்போது உலகம் முழுவதும் decentralise செய்ய வேண்டும் என்பது இப்போது உலக நாகரீகமாக இருக்கிறது என்கிறபோது, அதை Centralise செய்து 219 பொறியியல் கல்லூரிகளையும் அந்த ஒரே பல்கலைக் கழகத்தில் இணைப்பதினால் என்ன பயன் என்று தெரியவில்லை. இருந்தாலும்கூட நீங்கள் இந்த மாநில திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தைப் போல மாநில திறந்த நிலைப் பள்ளிகளைக் கொண்டுவந்திருப்பது போற்றக்கூடிய காரியமாகும். அதை நான் வரவேற்கிறேன்.

அதே சமயத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிற அந்த 25 சதவீத ஒதுக்கீட்டைப் பெற நீங்கள் உச்சநீதிமன்றத்தில் வாதாடி மீண்டும் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கிராமப்புற மாணவர்களுக்கு 25 சதவிகிதம்; அது நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது. அதை நீங்கள் உச்சநீதிமன்றத்திலே வாதாடி, அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

இங்கே திருத்தம் ஒன்று அனுப்பியிருக்கிறீர்கள். அந்தத் திருத்தத்திலே ஒரு சின்னத் திருத்தம். அது என்னவென்று கேட்டால், அந்தத் திருத்தத்திலே, 'தமிழ்ப் பிரதியில் பத்தி எண் 1. 2-ல் பல்தொழில் நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை 45337 என்பதற்குப் பதிலாக "45334" என்று வாசிக்கவும்' என்று தெரிவித்து இருக்கிறீர்கள். அது, பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை அல்ல; மாணவர்களினுடைய சேர்க்கை ஆகும். ஆகையினால், அந்தத் திருத்தத்திற்கு என்னுடைய திருத்தத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே இப்போது இருக்கிற பல்தொழில்நுட்பப் பயிலக மாணவர்கள் சேர்க்கை என்பது, 45, 334. ஆனால், பொறியியல் கல்லூரிகளுக்கு வருகிற மாணவர்கள் 60, 470. குறைவாகப் படிக்கிறவர்கள் குறைவாக இருக்கிறார்கள்; அதிகமாகப் படிக்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இது எங்குமே இல்லாத ஒரு நிலை. ஆகையினால், இது 1:2 என்ற விகிதத்திலாவது இருக்கலாம். ஆனால், இப்போது 1:3 என்ற விகிதத்திலே இருக்கிறது. ஆகையினால், பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலே படிக்கிற மாணவர்களினுடைய எண்ணிக்கை அதிகமாகவும், பொறியியல் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களினுடைய எண்ணிக்கை குறைவாகவும் இருந்தால்தான், அது சரியாக இருக்குமென்று நான் நம்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இதோ முடித்து விடுகிறேன். சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், தேடி வையுங்கள்; அடுத்த வாய்ப்பு வரும்போது பேசலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** முடித்து விடுகிறேன். மருத்துவக் கல்வித் துறையில், தற்காலிக மருத்துவர்கள், அதாவது M.B.B.S., படித்தவர்கள், பத்து, பதினைந்து ஆண்டுகளாக ரூபாய் இரண்டாயிரம், மூவாயிரம் என்று சம்பளம் பெற்றுக்கொண்டு பணிபுரிகிறார்கள். அவர்கள் தற்காலிகப் பணியில் இருக்கிறார்கள். Employment exchange பதிவும் போய்விட்டது; வேலை நிரந்தரம் இல்லை. எனவே, அவர்களை நிரந்தரமாக்க நீங்கள் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு, இங்குள்ள சென்னைப் பல்கலைக்கழக விரிவாக்க மையத்தின் இயக்குநர் திரு. டி.எஸ். மகாலிங்கம் என்பவரை S.O. வாக நியமித்து, பின் V.C. ஆக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், [illegible] தொகுதியில், பல ஆரம்பப் பள்ளிகளை, நாம் இப்போது தரம் உயர்த்தி, உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டும். அதேபோல், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க



வேண்டும் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு, உயர்நிலைக் கல்விக்காக நாம் ஒதுக்கி இருக்கிற தொகையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், 8 கோடி ரூபாய் அதிகமாக இருப்பதாகத் தெரியும். அதாவது, சென்ற ஆண்டு 785 கோடி ரூபாய்; இந்த ஆண்டு 793 கோடி ரூபாய்; 8 கோடி அதிகமாகத் தெரியும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது. ஆனால், ஒட்டுமொத்த Revenue expenditure என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது. சதவிகிதம் என்னவென்று பார்த்தால், சென்ற ஆண்டு அந்த சதவிகிதம் 3.20; இந்த ஆண்டு 2.95, ஆக, 0.25 சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோல், பள்ளிக் கல்விக்கும் அது ரொம்ப அதிகம். பள்ளிக் கல்விக்கு 812 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது. இப்படி 812 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறபோது, எப்படிப் புதிய பள்ளிகளைத் தொடங்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பள்ளிக் கல்விக்குச் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 4978 கோடி ரூபாய். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இதை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆனால் இந்த ஆண்டு ரூ.4165.93 கோடி ரூபாய். அதாவது ஒட்டுமொத்த சதவீதம் என்னவென்று பார்த்தால், சென்ற ஆண்டு 15.5 சதவீதம்; Revenue expenditure என்பதோடு கணக்குப் பார்க்கும்போது 15.5 சதவீதம். ஆனால், இந்த ஆண்டு அது 1.46 சதவீதம் குறைவாக இருக்கிறது. ஆகையினாலே, ஒட்டுமொத்தமாக 812 கோடி ரூபாய் பள்ளிக் கல்விக்குக் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. கு. அன்பழகன். (குறுக்கீடு) முடித்து விடுங்கள். 2 பேர் பேச வேண்டியதை நீங்கள் ஒருவரே பேசுகிறீர்கள். நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆகையினாலே, இந்த Common University Act-லே சொல்லப்பட்டிருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்திலே Anna University சட்டத்திலே சில சிரமங்கள் இருக்கின்றன. இன்றுகூடப் பத்திரிகையிலே வந்து இருக்கிறது. எப்படிப் பரிட்சை எழுதுவது என்று தெரியாமல் மாணவர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்று அதையும் நீங்கள் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய இறுதியான கோரிக்கை, 2 தனிச் சட்டங்கள்; ஒன்று சுயநிதிக் கல்லூரிகளுக்கு; இன்னொன்று உதவி பெறும் கல்லூரிகளுக்கு என்று 2 தனித் தனிச் சட்டங்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், தமிழ்நாட்டுக்குத் திறந்த நிலைப் பல்கலைக்கழகம் நல்ல நவீன முறையிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. அன்பழகன். (குறுக்கீடு) நிறையப்பேர் பேச வேண்டியிருக்கிறது.

***திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்....
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்.

என்று சொன்னார்கள்.

'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு,

என்று சொன்னார்கள்.

'கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு.' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட கல்வி மானியத்திலே என்னைப் பேச வைத்த, பழகுபவருக்கு அகநானூறாய், பகைவர்களுக்குப் புறநானூறாய், பழக்கத்தால், பாசத்தால், இன்குணத்தால் பகுத்தறிந்து பேசுகின்ற உயர்ந்த பேசசால், துன்றாத மலை மனமாய், குறைவுபடாத நிறைகுடமாய், கருத்துப்



பெட்டகமாய், காவிய மழையாய், சொட்டுகின்ற தமிழருவியாய், கொட்டுகின்ற தமிழ்க் குளவியாய், இல்லாதவர்களின் அமுதசுரபியாய், ஏழைகளின் ஒளி விளக்காய்த் திகழும் எங்கள் அன்னைக்கு மீண்டும் நன்றி சொல்லி, என் உரையைத் தொடங்குகின்றேன். இப்போது இந்தக் கல்வி மானியத்திலே எங்களுடைய தங்கத் தலைவியினுடைய அரசு மிகப் பெரிய புரட்சியைச் செய்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகி விடாது. ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்டவர்கள், திருப்பதிக்கு சென்றுவந்த பக்தனின் தலை எப்படி வழுவழுப்பாக இருந்ததோ, பழனிக்குச் சென்றுவந்த பக்தனின் தலை எப்படி சுத்தமாக வழுவழுப்பாக இருந்ததோ, அதைப்போன்று கஜானாவைச் சுத்தமாக வைத்துவிட்டு, இந்த ராஜ்யத்தை ஒரு பூஜ்யமாக மாற்றிவிட்டு சென்றுவிட்ட அப்படிப்பட்ட நிலையிலே எங்களுடைய தன்னிகரில்லாத தலைவி தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து மீண்டும் இரண்டாவது மானியத்தை அளிக்கும் இந்த நல்ல நேரத்திலே, எங்களுடைய அரசு இந்தக் கல்வி நிலை பெருக வேண்டும்; கல்வி சிறக்க வேண்டும் என்பதற்காக மொத்தம் உயர் கல்விக்காக ரூ.793.35 கோடி ரூபாயை ஒதுக்கி, அதைப் பல்வேறு நிலைகளிலே பிரித்து, பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் என்ற வகையிலே ரூ.563.40 இலட்சங்களை வாரி வழங்கி, பல்கலைக்கழகக் கல்விக்காக ரூ.62982.25 இலட்சங்களை ஒதுக்கி ஒரு மாபெரும் ராஜ்யத்தை அதுவும் அவர்கள் பூஜ்யமாக விட்டுச் சென்ற ராஜ்யத்தை இப்போது வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல. தொழில்நுட்பக் கல்விக்காக ரூ.14,377.61 இலட்சங்களை ஒதுக்கி பூஜ்யமாக விட்டுச்சென்ற ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோன்று விளையாட்டுகளுக்காகவும் இளைஞர் நலனுக்காகவும் ரூ.385.95 இலட்சங்களை ஒதுக்கி பூஜ்யமாக விட்டுச்சென்ற ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதுபோன்று, கலையும் பண்பாடும் அதையொட்டி வருகின்ற ஆவணக் காப்பகங்களையும் காப்பதற்காக ரூ.326.99 இலட்சங்களை ஒதுக்கி, இந்த இலட்சிய அரசு, பூஜ்யமாக விட்டுச்சென்ற ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

அடுத்து, கல்வித் துறையிலே சமூகப் பாதுகாப்புக்கும், அதனையொட்டிய நலனுக்காகவும் ரூ.24.34 இலட்சங்களை ஒதுக்கி பூஜ்யமாக விட்டுச்சென்ற

ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோன்று தலைமைச் செயலகம் சமூக நலப்பணிகளுக்காக ரூ.190.23 இலட்சங்களை ஒதுக்கி, கஜானாவைக் காலி செய்துவிட்டு பூஜ்யமாக விட்டுச்சென்ற ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

மலைப் பகுதியிலே இருக்கிற கல்விக் கூடங்களை உயர்த்துவதற்காக எங்களுடைய தங்கத் தலைவியினுடைய அரசு—ரூ33 இலட்சத்தை ஒதுக்கி பூஜ்யமாக விட்டுச்சென்ற ராஜ்யத்தை உயர்த்தியிருக்கிறது. அதேபோன்று இதர அறிவியல் ஆராய்ச்சிகளுக்காக ரூ.203.70 இலட்சத்தை ஒதுக்கி கையாலாகாத அரசு கைவிட்டுச் சென்ற, பூஜ்யமாக விட்டுச்சென்ற ராஜ்யத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரங்களுக்காக ரூ. 36.28 இலட்சத்தை ஒதுக்கி, இப்போது இந்த இலட்சிய அரசு, பூஜ்யமாக விட்டுச் சென்ற ராஜ்யத்தை புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். விவரச் சுவடி, புள்ளி விவரக் குறிப்பேடுகள், கல்வி, போட்டி, விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவிற்காக ரூ. 56.34 இலட்சத்தை ஒதுக்கி, கஜானவை காலி செய்துவிட்டுச் சென்ற கையாலாகாத அரசின் பூஜ்யமான ராஜ்யத்தை இப்போது கல்வி மானியத்திலே உயர்த்தி இருக்கிறார்கள். அதுபோன்று பண்பாட்டிற்கான கடன்களுக்கும் ரூ.2.00 இலட்சத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி மொத்தச் செலவினமாக ரூ.79,335.39 இலட்சத்தை ஒதுக்கி இப்போது கல்வியின் தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

அடுத்து, 1965 ஆம் ஆண்டு நம்முடைய தமிழ் மாநிலத்தில் மொத்தம் 477 கல்லூரிகள் இருந்தன. இப்போது அந்தக் கல்லூரிகளைக் கட்டிக் காப்பதே பெரும்பாடாக இருந்தபோதிலும், எவ்வளவு பணச் சுமை இருந்தபோதிலும், இப்போது அந்தக் கல்வி நிறுவனங்களை இந்த அரசு பாதுகாத்து வருகின்றது.

நண்பகல் 12-00

தகவல் தொழில்நுட்பம் மற்றும் வேளாண்மைக் கல்விக்காக அரசு கல்லூரிகளில் M.C.A., வகுப்பு, M.B.A., வகுப்பு போன்ற பட்ட மேற்படிப்புப் பாடப் பிரிவுகளைக் கொண்டு வந்து, இப்போது அவர்கள் விட்டுச்சென்ற இந்த பூஜ்யமான ராஜ்யத்தை உயர்த்தி இருக்கிறார்கள்.



நவீன இந்தியா உருவாக வேண்டுமெனில் மகளிருக்கு உயர்கல்வி அளிக்கப்பட வேண்டும். அந்த வகையிலேதான், இப்போது தமிழ்நாட்டிலே உள்ள 477 கல்லூரிகளில், பெண்களுக்காக 120 கல்லூரிகள் உள்ளன. அது போதாது என்று ஆண்கள் கல்லூரிகளிலும் 30 மகளிர் படிக்கலாம் என்ற உத்தரவையும் போட்டு, பூஜ்யமாக அவர்கள் விட்டுச்சென்ற ராஜ்யத்தை அம்மா அவர்கள் .இப்போது உயர்த்தியிருக்கின்றார்கள்.

அதேபோன்று, கல்லூரிகளுக்குத் தன்னாட்சி இந்தியாவிலேயே மிகக் கூடுதலாக தமிழகத்திலேதான் உள்ளது. 44 கல்லூரிகள் தன்னாட்சி பெற்று இருக்கின்றன. அதேபோன்று ஏழை மாணவர்களுக்கு இலவசப் படிப்புக்கு ஆண்டு வருமான வரம்பு 12 ஆயிரம்தான் கடந்த காலத்திலே இருந்தது. இப்போது நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவியினுடைய அரசால் அது 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழ் பயிலும், தமிழ் வழியிலே கல்லூரிக் கல்வியைப் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.400-ஐ கொடுத்து, இப்போது தாய்மொழியிலே உயர்தரக் கல்வி என்ற தத்துவத்தை உயர்த்தி இருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, கல்லூரிகளில் இருக்கிற பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்ற ஆசிரியர்கள், ஆங்கிலத்திலே நல்ல புலமையைப் பெற வேண்டும், நல்ல பக்குவத்தைப் பெற வேண்டும், நல்ல சிந்தனையைப் பெற வேண்டும் என்பதற்காக ஆங்கிலம் கற்பிப்பதில் ஆசிரியர்களின் திறமைகளை வளர்ப்பதற்கு அனைத்து பாடப் பிரிவுகளிலும், பயிற்சி அளிப்பதற்கான திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது இந்த அரசு.

அதேபோன்று அரசுக் கல்லூரிகளிலே, ஆசிரியர்கள் நியமனங்களை எங்கள் தங்கத் தலைவி அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு இப்போது செய்து இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று பல்கலைக்கழகத்திலே நுண்திறன் மேம்பாட்டுத் திட்டம் என்ற வகையிலே F.I.P. திட்டத்தில் பல்வேறு கல்லூரிகளிலே, அரசு கல்லூரிகளிலே, மேல்நிலைப் படிப்புக்காக ஆசிரியர்களையும் இந்த அரசு

இந்த ஆண்டு அதிகபட்சமாக அனுப்பி வைக்க முயற்சி எடுத்திருக்கிறது என்பதனையும் இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று கணினி மற்றும் இணைய பயிற்சித் திட்டம் என்பதை அரசு இப்போது கல்வி மானியத்திலே மிகச் சிறப்பாகச் செய்து இருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அறிவியல் கல்லூரி. ஒரு காலத்திலே இந்தத் தமிழ் நாட்டிலே 3 சங்கங்கள் இருந்ததாக வரலாறுகள், சங்க இலக்கியங்கள் எல்லாம் சொல்கின்றன. முதல் தமிழ்ச் சங்கம், தென் மதுரையிலே இருந்ததாகவும், அந்தச் சங்கம் கடல் கோள்களால் அடிக்கப்பட்டு அழிந்ததாகவும், அதற்குப் பின்னாலே கபாடபுரத்திலே இரண்டாவது தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டு அந்தத் தமிழ்ச் சங்கமும் அழிந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதற்குப் பின்னாலே மதுரையிலே 3-வது தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்துத் தமிழை ஆராய்ந்து இருக்கிறார்கள். அந்த வகையிலே இப்போது 4-வது தமிழ்ச் சங்கமாகத் திகழ்கிற மதுரை தமிழ்ச் சங்கத்திலே நம்முடைய புரட்சித் தலைவி அரசு அங்கே கணினி மையத்தையும் ஓலைச் சுவடி பாதுகாப்புக்காக உருவாக்க இருக்கிறார்கள். நாங்கள் எஸ்டிமேட் கமிட்டியிலே போகின்றபோது, அந்த மதுரை தமிழ்ச் சங்கத்திலே இருக்கிறவர்கள் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள். இப்போது அரசும் இதைச் செய்ய இருக்கிறது என்பதையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியான நிலக்கோட்டையிலே அரசினர் மகளிர் கல்லூரி ஒன்று வெகு அற்புதமான கல்லூரியாக இப்போது வளர்ந்து, செயல்படுகிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கல்லூரி தற்காலிக இடத்திலே இருக்கிறது. நிரந்தரமாக நம்முடைய அரசு இப்போது ஒரு கோடி ரூபாய்த் திட்டத்திலே புதிய கட்டடங்களை எழுப்பி புதிய கல்லூரி வளாகத்தையும் திறக்க இருக்கிறோம். அந்த வகையிலே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்த அரசினர் மகளிர் கல்லூரியை நம்முடைய அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திலே இணைத்து மிகப் பெரிய ஒரு சாதனையை இந்த அரசு என்னுடைய தொகுதிக்காகக் கொடுத்து இருக்கிறது. அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்; வாயாரப் புகழ்கிறேன். அந்த வகையிலே இப்போது நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசினிடத்திலே மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். என்



கிராமத்தில்கூட மக்கள் கேட்டதற்கு நான் அவர்களிடத்திலே சொன்னேன், எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய கையிலே என்ன அலாவுதீன் அற்புத விளக்கா இருக்கிறது, உங்களுக்கு நினைத்தவுடனே கொடுக்க என்று அந்த வரலாறுகளை எல்லாம் சொன்னேன். மக்கள் நிறைய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் எங்களுடைய தங்கத் தலைவியினுடைய அரசு இப்போது மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது என்பதைச் சொல்லி, இந்த அருமையான வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய அன்னைக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

***திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் பள்ளிக் கல்வி, உயர் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய தலைப்புகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், எங்களுடைய அன்புத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் பேராசிரியர் அவர்களுக்கும், எங்களுடைய இனிய தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

தலைவர் கலைஞர் அரசால் 1997-ல் உயர் கல்வித் துறை என்ற ஒரு துறை தனியாக ஏற்படுத்தப்பட்டது. அதேபோல், தலைவர் கலைஞர் அரசால் 1997-98-இல் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை Single Window System ஏற்படுத்தப்பட்டது. இதுபோன்று கழக அரசு செய்துவந்த சாதனைகளின் தொடர்ச்சியாகத்தான் இந்த அரசின் கல்விக் கொள்கைக் குறிப்பு உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவே எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகளுக்குச் சரியான எடுத்துக்காட்டு. அதுமட்டுமல்ல, உயர் கல்வியின் சாதனைகளின் உச்சமாக டைடல் பூங்கா (TIDEL PARK) மற்றும் பல பல்கலைக்கழகங்களை அமைத்து, பல புதிய பாடத் திட்டங்களைத் தொலைநோக்குப் பார்வையோடு அறிமுகப்படுத்தி, வெற்றி கண்டு, அகில இந்திய கல்வி வரலாற்றில் தமிழகத்திற்குத் தகுதியான இடம்

பெற்றுத் தந்தது தலைவர் கலைஞர் அவர்கள் அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களும், அவரைப் போன்ற பல்வேறு தலைவர்களும், தலைவர் கலைஞர் அவர்களுடைய சாதனைகளைப் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை பக்கம் 23-24-ல் விளையாட்டுத் துறையை தி.மு.க. அரசு சரியாகக் கவனிக்காததால் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டு, இதனால் தற்கொலை போன்ற நிலைமைகள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதை நான் மறுக்கின்றேன். தலைவர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாட்டில் முதன்முதல் விளையாட்டுத் துறைக்கென்று ஓர் அமைச்சரையும், இத்துறைக்கென ஒரு செயலாளரையும் நியமித்து, இத்துறையைத் திறம்பட வளர்த்தார்கள். ஆனால், இப்படிப் பாடுபட்ட தலைவரைத் தனது தேர்தல் அறிக்கையில் குறை சொல்லும அ.தி.மு.க. அரசு, விளையாட்டுத் துறைக்கென்று அமைச்சர் ஒருவரை நியமிக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழக விளையாட்டுத் துறை மட்டுமல்ல, விளையாட்டு வீரர்களும் போற்றி மதிக்கப்பட்டதோடு, உரிய வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கொள்கைக் குறிப்பில் விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பு பற்றிப் போதுமான அளவு கூறப்படவில்லை.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை பக்கம் 19-ல் பெண்களுக்கான நர்சரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்புகள் ஆளுநர் உரையிலோ அல்லது அரசின் நிதிநிலை அறிக்கையிலோ தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

அரசுப் பேருந்துகள் சில தடங்களில் தனியார் மயமாக்கப்படக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அப்படிப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களின் இலவச பேருந்து பயணச் சலுகைகள் பாதிக்கப்படாமல் அவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்திட அரசு வழி வகுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



பள்ளிகளில் மாணவர்களுக்கு நல்ல குடிநீர் வழங்க தி.மு.க. அரசு அறிமுகப்படுத்திய 'இராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டம்' பற்றி உங்கள் கொள்கைக் குறிப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீதிபதி மோகன் குழுவின் பயிற்று மொழி தொடர்பான பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் அரசு அறிமுகப்படுத்திய மாவட்ட ஆவணக் காப்பகங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதுகுறித்து உங்கள் அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

தி.மு.க. அரசு ஏற்படுத்திய தமிழ்நாடு அரசு உருது மொழி அகாடமி பற்றி உங்கள் அரசின் கொள்கைக் குறிப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சிறுபான்மை மக்களுக்காக அரசு சார்பில் ஏற்படுத்தப்பட்ட அந்தத் தமிழ்நாடு அரசு உருதுமொழி அகாடமி தொடர்ந்து நடைபெற இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

2002-2003-க்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 34-ல் குறிப்பிடப்பட்டுள்ள 'மாற்று புதுமைக் கல்வித் திட்டத்திற்கான' நிதி ஒதுக்கீடு பற்றித் தெளிவான விளக்கம் குறிப்பிடப்படவில்லை. கழக அரசு கொண்டுவர முயற்சி செய்த உலகத் தரம் வாய்ந்த முட்டுக்காடு நீர் விளையாட்டு மையத்தை ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கார்கில் போரில் பங்கேற்ற திரு. எம். குணசேகரன் அவர்களின் மகள் செல்வி ஷாலினி எனும் மாணவியின் பொறியியல் கல்விக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் கல்வி உதவி செய்து முன்னுதாரணம் ஏற்படுத்தினார்கள். அதைத்தான் இந்த அரசும் கடைப்பிடித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் 2002-2003-க்கான உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு எண் 19, பக்கம் 1-ல் புதிய கல்வி நிறுவனங்களைத் தொடங்குவது அரசின் கொள்கை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழக அரசு 2002-2003-ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்விக் கொள்கைக் குறிப்பில் எண் 41, பக்கம் 8-ல், 187 புதிய ஆரம்பப் பள்ளிகள் இந்த நிதியாண்டில் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த அறிவிப்புகள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளன. 2002-2003-க்கான கல்வி மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு எண் 19, பக்கம் 23-ல், சமுதாயக் கல்லூரிகள் என்ற புதுவகையான கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இந்தியாவிலேயே முதல் முறையாக சமுதாயக் கல்லூரிகள் சென்னை மாநகராட்சி மூலம் மேயர் ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 13 தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் சென்னையில் 4 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் மொத்தம் 152 மாணவர்கள் தற்சமயம் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளுக்குச் சமமாக சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் தரத்தையும், தேர்வு வெற்றி சதவிகிதத்தையும் உயர்த்துவதோடு, மழலையர் பள்ளிகளையும் ஏற்படுத்தி, கல்வித் தொண்டு செய்து வருகிறார் மேயர் ஸ்டாலின் அவர்கள். நான் குடியிருக்கும் பகுதி, லாயிட்ஸ் காலனியில் ஒரு மிகப் பெரிய குப்பை மேடு, குப்பைகள் சேகரித்து மலைபோல் குவிக்கப்பட்டு இருந்தது. 100 ஆண்டுகளுக்கு மேல் அந்தக் குப்பைமேடு அந்தப் பகுதிவாழ் மக்கள் மத்தியிலே இருந்து சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தது. அந்தக் குப்பைமேடு இருக்கக்கூடிய பகுதியில் வாழக்கூடிய, குடியிருப்பில் இருக்கக்கூடிய பொதுமக்கள் மிகுந்த நோய்வாய்ப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பல்வேறு முயற்சிகள் பல காலகட்டங்களில் எடுக்கப்பட்ட நேரத்திலும், அந்தக் குப்பைமேட்டை அகற்ற முடியவில்லை. ஆனால் மேயர் ஸ்டாலின் அவர்கள், சென்னை மாநகராட்சி மேயராக வந்தபோது, அவரிடத்தில் அணுகி எங்கள் பகுதியில் இப்படிப்பட்ட சீர்கெட்ட நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். பிரச்சினை நியாயமான பிரச்சினை, இதை எப்படிச் சமாளிப்பது என்று அவர்கள் திட்டம் தீட்டிய நேரத்தில் பல்வேறு பகுதிகளில் சேகரிக்கப்பட்ட அந்தக் குப்பைகள் லாரியின் மூலம் அங்கே சேமித்து வைக்கப்பட்டு, அதற்குப் பிறகு வேறு பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அப்படி சேகரிக்கக்கூடிய அந்தக் குப்பைகளை ஒரேயடியாக அங்கே சேகரிக்காமல், எங்கே கொண்டு சேர்க்க முடியுமோ அங்கு சேர்ப்பதற்கு முடிவு



எடுத்தார்கள். ஆக அந்த குப்பைமேடு, 100 ஆண்டுகளுக்கு மேல் இருந்த குப்பைமேடு அகற்றப்பட்டது. அந்த இடம் வெற்றிகரமாக மாநகராட்சிக்குக் கிடைத்தது. அந்த இடத்தில் என்ன செய்வது என்று திட்டமிட்ட நேரத்தில், தொழிற்பயிற்சி மையம், ஐடிஐ. ஆரம்பிக்கலாம் என்று திட்டம் போடப்பட்டு அதற்கான நிதியாதாரம் இல்லையென்ற நிலையில அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராகவும், திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த மாண்புமிகு இனிய அண்ணன் நாஞ்சிலார் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இரண்டு தவணையாக ரூ. 50 இலட்சம் ஒரு முறையும், ரூ. 20 இலட்சம் ஒரு முறையும் ஆக ரூ. 70 இலட்சம், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அமைச்சரவையில் அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 50 இலட்சம், ஆக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அங்கே ஐடிஐ. கல்வி நிறுவனத்தை நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் ஆரம்பித்தார்கள். அதில் மிகுந்த மகிழ்ச்சி. அதிலும் ஒரு விதியைப் போட்டார்கள். அந்த ஐடிஐ.-யில் சேர்வதற்கு முன்னுரிமை மாநகராட்சிப் பள்ளியில் படிக்கின்ற அந்த மாணவர்களுக்குத்தான். மாநகராட்சிப் பள்ளியில் ஏழை எளிய மாணவர்கள்தான் படிக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை தந்து அந்த இடத்திலே அவர்களை ஐ.டி.ஐ.-யில் சேர்க்க வேண்டுமென்ற அந்த விதியோடு அந்த ஐ.டி.ஐ.-யைத் தொடங்கி வைத்தார்கள். இந்த நேரத்தில் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மேயர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உசேன் அவர்கள் பேசும்போது, மாநகராட்சிப் பள்ளிகளில் பல்வேறு சீர்திருத்தங்களை மாண்புமிகு மேயர் அவர்கள்—சென்னை மேயர் — கொண்டு வந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் புள்ளிவிவரத்தைப் பார்த்தீர்களென்றால், 1995-96 ஆம் ஆண்டு நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளிலே மாணவர்கள் உயர்நிலைச் சேர்க்கை விகிதத்தைப் பார்த்தீர்களேயானால், 78,993 என்று இருந்தது. ஏனென்றால் மாநகராட்சிகளை ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளும், அதற்குப்பிறகும் ஆண்டதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக மேயர்கள்தான். அதில் சென்னை மாநகர மேயரும் இருந்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, 2000-2001-ல் பார்த்தீர்கள் என்றால், மாணவர் பள்ளிச்

சேர்க்கை முதலில் புரட்சித்தலைவி ஆட்சியில் 78 ஆயிரமாக இருந்தது. இது 49 ஆயிரமாக மாறியிருக்கிறது. இது உயர்நிலைப் பள்ளியினுடைய நிலைமை. அதுபோல மேல்நிலைப் பள்ளிகளை எடுத்துப் பார்த்தீர்களென்றால், நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளை எடுத்துப் பார்த்தீர்களென்றால், புரட்சித்தலைவி ஆட்சியிலே 1995-96 பற்றிச் சொல்லும்போது 1,93,932 என மாணவர்கள் சேர்க்கை இருந்தது. இப்போது 2000-2001-இல் பார்த்தீர்களென்றால் வெறும் 88,264 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இதுதான் நிலைமை. இது உயர்ந்திருக்கிறதா? ஏன் மாணவர்கள் எல்லாம் அந்த நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளிலே சேரவில்லையா? அவர்கள்தான் விளக்கவேண்டும். ஏதோ திட்டங்கள் செய்தார் என்று சொல்கிறார். இதுதான் உண்மையான நிலைமை. மாநகராட்சியிலே பள்ளியினுடைய தரமும் குறைந்து இருப்பதாகத்தான் புள்ளிவிவரம் தருகிறது. (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாநகராட்சியைப்பற்றிக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு திரு. உசேன் அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்வார். ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேயர் ஸ்டாலின் அவர்கள் மேயராக வந்தபிறகு, மாநகராட்சியினுடைய கல்வித்தரம் மிக உயர்ந்தது என்று தீக்கதிரினுடைய தலையங்கம் சொல்லிப் பாராட்டியுள்ளது. 75 விழுக்காடு, 80 விழுக்காடு எனக் கல்வித் தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

அதேபோல, அமைச்சர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு குறிப்புகளைச் சொன்னார்கள். 1997-98, 1998-99 ஆம் ஆண்டு கல்வியினுடைய குறிப்புகள் மூலம் கல்வித்தரம் படிப்படியாக உயர்த்தப்பட்டதன் விவரம் தெரியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். உயர் கல்வி மானியக் கோரிக்கை ஏடு எண் 19, பக்கம் 34-ல் திருச்சி மண்டல அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம் அமைப்பதற்கு அன்றைய முதலமைச்சரால் 22-1-1994-இல் அடிக்கல் நாட்டப்பட்டது என்றும், ஜப்பான் நாட்டு உதவியுடன் நடைபெற்று வருகிறது என்றும், ஏதோ அது அ.தி.மு.க. அரசின்



சாதனை போல வெளியிடப்பட்டுள்ளது. 2000-2001 கல்வி மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு எண் 17, பக்கம் 51-இல் திருச்சி அண்ணா அறிவியல் மையத்தில் ரூ. 128 இலட்சம் செலவில் கோளரங்கம் கட்டப்பட்டு, 10-6-1999 அன்று அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்றும், அந்நிறுவனத்திற்கு ஜப்பான் அரசின் சார்பில் ரூ. 150 இலட்சம் இந்திய-ஜப்பான் பண்பாட்டு உறவு அடிப்படையில் தரப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கோளரங்கத்தைக் கட்டிமுடித்து, திறப்புவிழா நடத்தி நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தியது தலைவர் கலைஞர் அரசுதான் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வைத்திருப்போரின் பதிவினைப் புதுப்பித்தல் செய்துகொள்ள முடியாமல் போன அனைவருக்கும் பொதுவான ஒரு வாய்ப்பும் காலக்கெடுவும் வழங்கி, அதற்குள் அனைவருக்கும் விடுபட்டுப்போன பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்ள வாய்ப்பு வழங்கி, வேலை கிடைக்காத பட்டதாரிகளுக்கும், முதல்நிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் உதவிட வேண்டுமென்று நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஏற்கெனவே கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அப்படி வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு புதுப்பித்தல் விடுபட்டுப் போனவர்கள் புதுப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். தற்சமயம் தமிழ்நாடு அரசின் ... (மணியடிக்கப்பெற்றது)

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** கொஞ்ச நேரம் கொடுங்கள். நான் அதிகம் பேசமாட்டேன். தற்சமயம் தமிழ்நாடு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அரசுக் கல்லூரிகளை, நிதிநிலையைக் காரணம் காட்டி பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்ற இருப்பதாகக் கருத்துக் கூறப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களிலே நிதிநிலை பிரச்சினை இருக்கும்போது, அவற்றின்கீழே அரசுக் கல்லூரிகளை மாற்றுவது பல

சிக்கல்களை ஏற்படுத்தும். மாணவர்களின் கல்விக் கட்டணமும் உயர்த்தப்பட வேண்டிய நிலை உருவாகி, மாணவர்கள் திறனும் நலனும் பாதிக்கப்படும். எனவே, இத்தகைய முயற்சி இருந்தால், அதைக் கைவிட்டு, அரசுக் கல்லூரிகள் வழக்கம்போல் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்க வழிவகுத்திடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளுக்கான அரசு நிதியுதவிகளின் அளவு குறைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இது கல்வி நிறுவனங்களின் செயல்பாட்டையும், வளர்ச்சியையும் பாதிக்கும். இப்படிச் செய்வதனால் சமூக வளர்ச்சியும் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தலைசிறந்த கல்வியாளரில் ஒருவரான டாக்டர் வ.செ. குழந்தைசாமி அவர்கள் 'தினமணி' நாளிதழில் 6-4-2002 அன்று எழுதிய கட்டுரையில் தமிழ்நாட்டிற்கு உடனடித் தேவை ஒரு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் என்று கூறியுள்ளார். ஏற்கெனவே இந்தியாவில் 10 மாநிலங்களில் செயல்பட்டு வருவதைவிடச் சிறப்பான இத்தகைய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்திட வேண்டும் என இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் நிதித் துறைச் செயலாளர் திரு. ஆர். சந்தானம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கு இந்த நிதியாண்டில் ஏதும் நிதி ஒதுக்கவில்லை என்றாலும் கடந்த ஆண்டைப் போலவே 192 கோடி ஒதுக்கப்படும் என்று பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலே சொன்னது 28 ஆம் தேதிய தினமணிப் பத்திரிகையிலே வெளிவந்துள்ளது. தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட ஏராளமான நல்ல திட்டங்களில் ஒன்றான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு தொடர்ந்து செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டால் இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எங்கள் தொகுதியிலுள்ள மேம்பாட்டுத் திட்டங்களுடன் கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கும் சேர்த்துத் தொண்டு செய்ய முடியும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவை கண்ணியமிக்க பல தலைவர்கள் அமர்ந்த அவையாகும். அவர்கள் தமிழின மக்களை நேசித்தவர்கள்; இந்த மண்ணை பூஜித்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் அமர்ந்திருந்த இந்த அவையில்



இன்று அமர்ந்திருக்கும் பெருமை இங்குள்ள அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் உண்டு. இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது மறுப்பதற்காக எழுகின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுகிற பேச்சு இந்தச் சபைக்கு மேலும் மாண்பு சேர்ப்பதாக இருக்க வேண்டும். இது ஆளுங்கட்சியினுடைய கடமையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேற்றை வாரி அடுத்தவர்மீது இறைக்கிறபோது, அடுத்தவர் முகத்தில் படுவதற்குமுன் தங்களின் கரத்தில் படிகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எங்களைச் சிறுமைப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு உங்களை நீங்களே சிறுமைப்படுத்திக்கொள்ள வேண்டாம் என்றும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி மானியக் கோரிக்கை, முடியுங்கள். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள், (குறுக்கீடு) பேசி முடித்துவிடுங்கள். திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்திலே பேசும்போது மற்ற கருத்துகளை .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முடித்து விட்டார் அவர். (குறுக்கீடு) பேசி முடித்துவிட்டார்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** நான் முடித்துவிடுகிறேன். நான் முடித்துவிடுகிறேன். ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** ஒரே வார்த்தை, ஒரே வார்த்தை .. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வார்த்தைதான். 'முடித்துவிடுகிறேன்.' அவ்வளவுதான்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** இந்த அவையின் மாண்பையும், நாகரிகத்தையும் காப்போம், அனைவரும் அதற்காக ஒத்துழைப்போம் என்று கூறி அமைகின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி மனித வாழ்விலே கல்வி என்பது பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக இருக்கிற காரணத்தினாலும், கல்வியால் மட்டுமே ஒரு மனிதன் முழுமைபெற்ற மனிதனாக உயர முடியும் என்பதாலும்தான் தமிழ் மூதாட்டியார்

> 'கற்கை நன்றே, கற்கை நன்றே
> பிச்சைப் புகினும் கற்கை நன்றே'

என்று கல்வியின் சிறப்பைப் பற்றித் தெளிவாகச் சொல்லியுள்ளார். கரையற்ற கல்விச் செல்வத்தை குறைவற்று அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக நமது அரசு அறிவித்துள்ள பல்வேறு முன்னோடிக் கல்வித் திட்டங்களை நான் மனதார வரவேற்கின்றேன். தாய்மொழிக் கல்வியை இவ்வரசு ஊக்குவிக்கும் என்பது தித்திக்கும் செய்தியாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தமிழ் அல்லது தாய்மொழி மற்றும் ஆங்கிலம் எனும் இருமொழிக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதும், அனைத்துப் பள்ளிகளிலும் பாடத்திட்டங்களில் தமிழ்மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவது உறுதிசெய்யப்படும் என்பதும் தமிழ்ப் பற்றுக் கொண்ட தமிழ் நெஞ்சங்களுக்கு மிகப்பெரும் ஆறுதலாகும். கோவில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. பள்ளி இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் எனும் புதுமொழியை முன்னிலைப்படுத்தி பள்ளி இல்லாத சிற்றூர்களில் பள்ளி வசதியை ஏற்படுத்துதல், 2007-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் 5 ஆண்டுக் கல்வியை அளிக்கச் செய்தல், 2010-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் 8 ஆண்டுக் கல்வியை அளிக்கச் செய்தல் மற்றும் பள்ளி இடைநிற்றலை அறவே ஒழித்தல், பள்ளிகளில் பாலர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை தரம் உயர்த்துதல், ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளித்தல், பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பயற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல் என்பன போன்ற இவ்வரசின் கல்விக் கொள்கைகளை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

தொடக்கக் கல்வி பற்றிச் சொல்லும்போது, அனைவருக்கும் கல்வி எனும் இலக்கினை அடைவதற்காகப் பள்ளிகளில் சேர்ந்த குழந்தைகள் அனைவரும் இடையில் நின்றுவிடாமல், 8 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து தக்க வைத்து நிறைவுறச் செய்தலை இவ்வரசு குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனச் சொல்லப்பட்டுள்ளது. இதிலே 8 ஆம் வகுப்பு என்பது குறைந்தபட்சம் 12 ஆம் வகுப்பு வரை



அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற உயரிய கொள்கையை வகுப்பதுதான் இன்றைய சூழலுக்கு ஓரளவேனும் பொருத்தமானதாக இருக்கும் என்பதனைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

கல்லாமையை இல்லாமை ஆக்க வேண்டும் என்பதற்காக, ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் பள்ளிகள் இல்லாமல் இருக்கும் இடங்களிலும், மக்கள்தொகை, 300-ம் அதற்கு மேற்பட்டுமுள்ள சிற்றூர்களிலும் ஆரம்பப் பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்பதனை அரசு முதன்மைக் கொள்கையாகக் கொண்டுள்ளதால், 2002-2003-ல் 187 புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும் என்பதும், 1,243 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதும் மெத்த வரவேற்கத்தக்க அறிவிப்பாகும்.

ஆசிரியர்கள் பணியிட மாற்றத்திலே தற்போது பின்பற்றப்பட்டு வரும் முன்மாதிரியான திட்டமான வெளிப்படைக் கலந்தாய்வு முறை, குறைகள் களையப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பது இவ்வரசின் கொள்கை உறுதியைப் பறைசாற்றுவதாக உள்ளது. மேலும், நடுநிலை வகுப்பில் கல்வித் தரத்தை மேம்படுத்த அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் B.Ed. கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களைப் படிப்படியாக நியமிக்க ஏதுவாக நடுநிலைப் பட்டதாரி ஆசிரியர் என்ற புதிய பதவி ஏற்படுத்தப்படும் என்பது தரமான கல்விக்கு இவ்வரசு தரும் உத்தரவாதமாகும். மன ஆரோக்கியத்திற்கு, உடல் ஆரோக்கியம் அடிப்படை என்பதால் அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் உடல் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படும் என்பது நல்ல சிந்தனையாகும்.

அதேபோன்று, பொது அறிவை வளர்க்கும் முகமாக புத்தக அறிவைப் பெருக்க, அனைத்துத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் நடமாடும் நூலகங்கள் ஏற்படுத்தப்படும் என்பது பயனுள்ள திட்டமாகும். கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் பகுதிக்கான மைய அரசின் முனைப்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் ஒன்றியம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் மைய அரசால் அடையாளம் காணப்பட்டுக் கட்டடம் கட்டப்பட்டு வருவதாகவும், இதுதவிர, சிறுபான்மையினர் அதிகம் வாழும் மேலும் சில பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோவை மேற்குத் தொகுதியில் இத்திட்டத்தினை அமல் நடத்த வேண்டுமெனவும், இஸ்லாமியக் கல்லூரி ஒன்றினை அங்கு ஏற்படுத்திட வேண்டுமெனவும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள் கோருகிறார்கள். இதனை இவ்வரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்பதோடு, ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலைக் கல்வி பெறச் செய்தல் மற்றும் மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப சுயவேலைவாய்ப்பு அல்லது உயர் கல்வி பெறத் தயார் செய்தல் ஆகிய அறிவிப்புகளை இவ்வரசு தொலைநோக்குப் பார்வையோடு அறிவித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும்.

நவீன காலத்திற்கேற்ற நல்ல பாடத் திட்டங்களை அமல்படுத்தும் பொருட்டு சீராய்வு செய்ய பல்வேறு வல்லுநர்கள் குழுக்கள் அமைக்கப்படும் என்பது சிறந்த முயற்சியாகும்.

அரசுப் பள்ளிகளில் கணினிக் கல்வி, அறிவியல் தேவைக்கேற்ப திருத்தியமைக்கப்படும் என்பதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் முழுநேர வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்படும் என்பதும் காலத்திற்கேற்ற பயனுள்ள முயற்சியாகும்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதன்கீழ் சில வட மாவட்டங்களை மட்டும் குறிப்பிட்டு அங்குள்ள பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 50 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், கரூர், கோவை போன்ற நகரங்களிலும், சுற்றியுள்ள ஊர்களிலும் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை என்பதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அடிப்படை வசதிகள் அற்ற அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பள்ளிகளுக்கும் தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"

எனும் பாரதியார் பாடலை மெய்ப்பிக்கும் வகையிலே அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்து உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திறன் திட்டம் கொண்டு வரப்படும் என்பது எதிர்காலத்தில் விளையாட்டுத் துறைகளில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் விஞ்சி நிற்கும் என்பதனை உறுதிப்படுத்துகிறது. மேல்நிலை மற்றும் 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் 1 அல்லது 2 பாடங்களில் தோல்வியுற்ற மாணவர்கள் அதே கல்வியாண்டில் மேல் படிப்பைத் தொடர ஏதுவாக ஜூன் மாதத்தில் உடனடியாக மறு தேர்வினை நடத்தி முடிவினை ஜூலை மாதம் 15-ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என்பது இவ்வரசு மாணவர்களிடம், அதாவது இளம் சமுதாயத்திடம் கொண்டுள்ள அக்கறையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.



பிற்பகல் 12-30

அதேபோன்று உயர் கல்வியை ஊக்குவிக்கும் இவ்வரசு, பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்து இருந்தும்கூட, இன்னும் பாராட்டப்பட வேண்டிய எத்தனையோ நல்ல அம்சங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டும்கூட கல்வித் துறைக்கான உதவி மானியமானது படிப்படியாகக் குறைக்கப்படும் என்பது நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டுள்ளது பெரும் கலக்கத்தையும், கவலையையும் அளிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வறிவிப்பினால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏழையெளிய மக்களுக்குக் கல்வி மறுக்கப்படும் சூழல் எதிர்காலத்தில் உருவாகலாம். ஆகவே, இவ்வரசு இதனை மறுபரிசீலனை செய்து கண் எனப்படும் கல்விக்கான மானியத் தொகையைத் தொடர வேண்டுமெனத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், உயர் கல்வி என்பது சமுதாய சேவை மட்டுமின்றி அதனுடைய முதலீடு என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இப்போது உலகு தழுவிய உற்பத்தித் திறன் மிகுந்த கல்வி முறையின் தேவை உணரப்பட்டிருக்கிறது. ஆகவே, நாமும் இதைப்போன்று உற்பத்தித் திறன் மிக்க கல்வி முறையைக் கையாள வேண்டும். உயர் கல்விக்கான மானியத்தை மைய, மாநில அரசுகள் கணிசமாகக் குறைப்பதற்கான சாயல் தெளிவாகத் தெரிவதால், வருங்காலக் கல்வித் தேவைக்கு உற்பத்தித் திறன் மிக்க, குறைந்த செலவினம் கொண்ட கல்வி முறையான திறந்தநிலை பல்கலைக் கழகங்களைக் கொண்டுவர இவ்வரசு முன்வர வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மாணவர்களுக்கு உயர் கல்விக்கான இட ஒதுக்கீட்டினை 25 சதவீதமாக உயர்த்தி இருக்கும் உன்னதத் திட்டத்தை எதிர்த்து

உயர்நீதிமன்றத்திலே நிலுவையில் உள்ள வழக்கினை விரைவில் நடத்தி முடிக்க ஏற்பாடு செய்து, மேற்படி திட்டம் பயன்பாட்டுக்கு வர அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் தொகுதியிலே பல பள்ளிகள் கட்டடப் பராமரிப்பு இல்லாமலும், அடிப்படை வசதிகளான கழிப்பிடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சத்துணவுக் கூடம் மற்றும் டேபிள், சேர், டெஸ்க் போன்ற தளவாடச் சாமான்கள் இல்லாமலும், பள்ளியைச் சுற்றி மதில் சுவர் இல்லாமலும் உள்ளன. இதனை உடனடியாக அரசு சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் தொகுதியில் சில அரசுப் பள்ளிகளில் English Medium பிரிவுக்காக மனுச் செய்துள்ளார்கள். அரசு அதனை உடனடியாகப் பரிசீலனை செய்து அனுமதி கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி சார்பாக ஒரு கோரிக்கை. கல்வித் துறையைச் சார்ந்த அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு உட்பட்ட கோவை அரசுத் தேர்வுகள் மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தில் தினக்கூலி அடிப்படையில் பிரிவு எழுத்தாளர்களாகப் பணியாற்றி வரும் 15 நபர்கள் 13 ஆண்டுகள் முதல் 17 ஆண்டுகள் வரை பணிபுரிந்தும்கூட, இன்னமும் நிரந்தரப்படுத்தப்படாமல் தினக்கூலியாகவே இருந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் 40 வயதைக் கடந்தவர்களாக இருப்பதால், வேறு எந்தப் பணித் தேர்வுகள் எழுதவோ, வேறு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கோ தகுதி இழந்த நிலையில் உள்ளனர். ஆகவே, அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்து கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கோவை மேற்குத் தொகுதிக்கு உட்பட்ட கோவை மண்டல அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் தினக்கூலிகளாக, தேர்வு எழுதும் மாணவர்களுக்குத் தேவையான எழுது பொருட்களைச் சிப்பங்களாகக் கட்டிப் பள்ளிகளுக்கு வழங்கும் பணியில் நியமிக்கப்பட்டு, 13 ஆண்டுகளாக தினக்கூலி பெற்று வரும் ஏழு பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.



**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, குன்னூர், குந்தா மற்றும் ஊட்டி தாலுகாக்களில் பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் சுவெட்டர், சாக்ஸ் மற்றும் காலணி ஆகியவற்றைத் தேர்வு மையத்திற்கு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜு கொடுத்த கோரிக்கையா?

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** ஆமாங்க. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி மற்றும் ராஜு, நீங்கள் எல்லோரும் அவரிடம் கோரிக்கையைக் கொடுப்பதை விட அமைச்சரிடத்திலே கொடுத்திருக்கலாமே! *(சிரிப்பு)*

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** வெளியில் அணிந்திருக்கும் சுவெட்டர் மற்றும் சாக்ஸ், காலணிகளைக் கழற்றி வைத்துவிட்டுத் தேர்வு எழுதுமாறு சொல்லும் கல்வி அதிகாரிகளின் வற்புறுத்தலை உடனடியாக நிறுத்தும்படி அரசு ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 12-35*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய அன்பான வணக்கத்தைச் சொல்லி, இந்த உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு, பொதுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆய்ந்த தலைமகன் தலைவர் இருக்கையிலே இருக்கின்ற காரணத்தாலே தமிழ் வளர்ச்சி பற்றிப் பேசுவதற்கு எனக்குச் சற்று கூடுதல் நேரத்தைக் கொடுக்குமாறு உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கேட்டதற்காகத் தயவுசெய்து குறைத்துவிடாதீர்கள்.

இன்றைய சூழ்நிலையிலே ஒரு தனி மனிதன் முன்னேறுவதற்கு, ஒரு குடும்பம் மேம்பாடு அடைவதற்கு, ஒரு சமுதாயம் முன்னேறுவதற்கு, ஒரு நாடு வளர்ச்சி பெறுவதற்கு கல்வி மிக மிக இன்றியமையாதது. ஆகவேதான், கல்வியைப் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் சொல்கின்ற நேரத்திலே, உலகப் பொதுமறை என்று சொல்லக்கூடிய திருக்குறளில், திருவள்ளுவர் சொல்கின்ற அந்தக் கூற்றையெல்லாம் பார்க்கின்ற நேரத்திலே உண்மை என்ன என்பது உலக நாட்டு மக்கள் எல்லாம் உணரக்கூடியது தெளிவாகிறது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மற்றல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "மாடல்ல மற்றை யவை."

**திரு. ஜி.கே. மணி:** மாடல்ல மற்றை யவை.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

இப்படிப் பல்வேறு கோணங்களிலே கல்வியினுடைய பெருமைகளை எல்லாம் சொல்லிய காரணத்தினாலேதான் இந்த நாட்டிலே, தமிழ்நாடு மாத்திரம் அல்ல, இந்தியத் திருநாடு மாத்திரம் அல்ல, உலக நாடுகள் எல்லாம் கல்வித் துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கி வருகின்றன. ஆனால், நம்முடைய கோத்தாரி கமிஷன் அறிக்கையிலே ஓர் அரசாங்கத்தினுடைய மொத்த வருமானத்திலே 6 சதவீதத்திற்குக் குறையாமல் கல்விக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டபோதிலும்கூட, நம்முடைய அரசாங்கம் இதுவரையில் 3 சதவீதத்திற்கு மேல் ஒதுக்கவில்லை என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படியெல்லாம் இருக்கின்ற காரணத்திலேதான் .....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய நிதிநிலை அறிக்கையை - பட்ஜெட்டை - சமர்ப்பித்தபோது பார்த்தீர்கள் என்றால் சுமார் 25 சதவீதம் பணத்தைக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, கோத்தாரி கமிஷன் அறிக்கை நீண்டகாலத்திற்கு முன்னாலே வந்தது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கையில், கல்விக் கொள்கை மிக உயிர்மூச்சுக் கொள்கை என்று கருதப்படுகிறது. அது உயிர்மூச்சுக் கொள்கை என்ற காரணத்தினாலேதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூடக் கடந்த முறை முதலமைச்சராக இருந்த நேரத்திலே ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில் கல்வியினுடைய அவசியத்தைப் பற்றியும், தமிழ் மொழியினுடைய பெருமையைப் பற்றியும், தமிழ்க் கல்வியினுடைய அவசியத்தைப் பற்றியும் வலியுறுத்திச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய உரையிலே பேசியது: "ஓர் அரசுக்கு அதனுடைய கல்விக் கொள்கையே அதனுடைய உயிர்க் கொள்கையாகக் கருதப்படுகிறது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட இருமொழிக் கல்வித் திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு, நமது மாநிலக் கல்வித் துறையின் பற்றுக்கோடாக விளங்கி வருகிறது." ஆகவே, அவர்கள் இப்படி அதையும் சொல்லிவிட்டு, "தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளிலும் பள்ளிக் கல்வி நிலையங்களிலும், நமது தாய்மொழி கற்பிக்கப்படாத ஒரு சூழ்நிலை உருவாகிவிடுமோ என்கிற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால் தமிழில் கல்வி கற்பதைத் தவிர்த்துவிடலாம் என்கின்ற எண்ணம் எவருக்காவது இருந்தால், அவர்கள் தயவுசெய்து அத்தகைய தங்களுடைய எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி நிர்வாகத்திலும் அன்னை தமிழ்மொழியை அரியாசனத்தில் அமர்த்துவதற்கு இந்த அரசு முந்தைய அரசுகளைக் காட்டிலும் முனைப்பாகச் செயல்படும் என்பதை இப்போது வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்" என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழ் மொழியினுடைய வளர்ச்சியிலேயும், கல்விக் கொள்கையிலேயும் அக்கறை கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலே தமிழ்ப் பயிற்சி மொழி என்ற அந்த அரசாணை, உயர்நீதிமன்றத்தாலே தோற்கடிக்கப்பட்டு, இன்று உச்ச நீதிமன்றத்திலே நிலுவையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்களே, நீங்கள் எப்பாடுபட்டாவது அந்தத் திட்டத்தை

நிறைவேற்றி சட்டமாக்க முன்வரவேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

அனைவருக்கும் கல்வித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. அந்தக் கல்வித் திட்டத்தை அறிவிக்கக்கூடிய அதேநேரத்தில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது இருக்கக்கூடிய அந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி வைக்கின்ற நேரத்திலே இன்று தமிழ்நாட்டிலே கல்வியிலே ஏற்றதாழ்வு இருக்கிறது; ஏழைக்கு ஒரு மாதிரியான கல்வி; நடுத்தர வர்க்கத்துக்கு ஒரு மாதிரியான கல்வி; பணக்கார வர்க்கத்திற்கு ஒரு மாதிரியான கல்வி என்ற இந்த நிலை எல்லாம் மாறவேண்டுமென்றால் நம்முடைய அரசு அதற்காக முனைப்பாகச் செயலாற்ற வேண்டும். இன்னும் வளர்ந்து வரக்கூடிய மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலேகூட Cambridge Oxford போன்ற பல்கலைக் கழகங்களில் ஒரே Syllabus பின்பற்றப்படுகிறது. ஆனால் நம்முடைய நாட்டிலே பார்ப்போம் என்று சொன்னால், C.B.S.E., Anglo Indian, Higher Secondary Education, Matriculation போன்ற பலதரப்பட்ட Syllabus இங்கே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இவையெல்லாம் மாற்றப்பட்டு ஏழை, நடுத்தர வர்க்கம், பணக்காரன் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் ஒரே தரமான கட்டாயக் கல்வியைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வரவேண்டும். கட்டாயக் கல்வி என்று சொல்லுகின்ற நேரத்திலேகூட நம்முடைய அரசியல் சட்டப்படி 6 முதல் 14 வயது வரையிலே கட்டாயக் கல்வி கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இது நீண்ட நாட்களாக நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் கட்டாயக் கல்வி வழங்கப்படவில்லை. இருந்தாலும்கூட நம்முடைய.... (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது கட்டாயக் கல்வி பற்றிப் பேசினார்கள். கட்டாயக் கல்வியைச் செயல்படுத்துவதற்குச் சட்டம் இயற்றியது புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் 1994 ஆம் ஆண்டு கட்டாயக் கல்வி இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டத்தைக் குறை சொல்லவில்லை. அந்தச் சட்டத்தின் வாயிலாக இன்று நாட்டிலே எல்லா மக்களுக்கும் கட்டாயக் கல்விக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஆகவே, கொடுக்கப்பட வேண்டும் என்ற அந்த உயர்ந்த நோக்கத்தோடு சொல்கிறேனே தவிர சட்டத்தை நான் குறையாகச் சொல்லவில்லை. அந்த வகையிலே 14 வயதுவரை கட்டாயக் கல்வி என்று இருந்தாலும்கூட இன்று இந்திய ஆராய்ச்சியாளர்கள், உலக நாட்டு, வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள்; ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சி என்பது 4 வயதுக்குள்ளே 80 சதவிகிதம் வளர்ச்சி பெறுகிறது; மீதி இருக்கக்கூடிய 20 சதவிகிதம் மூளை வளர்ச்சியை குழந்தைகள் வளர்கின்ற பருவத்திலே பெறுகின்றன என்று சொல்லுகிறார்கள். அந்தக் காரணத்தினால்தான், இப்போதுகூட நர்சரி பள்ளிகள் எல்லாம் வந்துவிட்டன. 3½ வயது என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த 6 வயது முதல் 14 வயது வரை கட்டாயக் கல்வி என்ற திட்டத்தை 3 வயது முதல் 15 வயது வரை கட்டாயக் கல்வி என்ற வகையில் கொடுப்பதுதான் பொருத்தம் உடையதாக இருக்கும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நிறைவேற்ற வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு கல்வி அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். 10 ஆம் வகுப்பிலும், பிளஸ் 2 வகுப்பிலும் தேர்ச்சிபெறாத மாணவர்கள், ஜூன் மாதத்திலே தேர்வு எழுதி, ஜூலை மாதத்திலே முடிவுகள் வெளிவரும் என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே நான் மனதார வரவேற்கிறேன். மாணவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த அறிவிப்பைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மீண்டும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் முன்பும் சொன்னார்கள், இப்போது அறிக்கையிலேகூடச் சொல்லியிருக்கிறார்கள். 1954 ஆம் ஆண்டு கல்விக் கண் கொடுத்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அன்றைய இயக்குநராக இருந்த மரியாதைக்குரிய நெது. சுந்தரவடிவேலு அவர்களை அழைத்து ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். என்ன உத்தரவு என்று சொன்னால், ஒரு மைல் தூரத்திற்கு ஒரு துவக்கப் பள்ளி இருக்க வேண்டும், இரண்டு மைல் தொலைவிற்கு ஒரு நடுநிலைப்

பள்ளி இருக்க வேண்டும், 5 மைல் தொலைவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே 1954-லே பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே இருந்து இன்றுவரை சொல்லப்படுகிறதே தவிர அது முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதை நாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இன்றும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு துவக்கப் பள்ளி என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அது நடைமுறையிலே வராமல் இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

இப்படி எந்தத் திட்டத்தை வகுத்தாலும்கூட, ஒரு மாணவன் உண்மையான, முழுமையான கல்வி பெறுவதற்கு அங்கே நல்ல இயற்கைச் சூழலோடு அமைந்த பள்ளி வளாகம் இருக்க வேண்டும். இன்று சரியான கட்டடங்கள் இல்லை. மண் தரையாக இருக்கிறது. அதேநேரத்திலே மரத்தின் அடியிலே அமர்ந்திருக்கிற நிலை எல்லாம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி, மாறுபட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதியை உருவாக்க வேண்டும். அதேநேரத்திலே, போதுமான நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அங்கே அமர்த்தப்பட வேண்டும். நல்ல பாடத் திட்டம் வேண்டும். அதேபோல நல்ல தேர்வு முறைகள் கொண்டுவரப்பட வேண்டும். இப்படி இவை அனைத்தும் இருந்தால்தான் ஒரு முழுமையான, சரியான கல்வியைப் பெற முடியும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு வேலூரிலே திருவள்ளுவர் பல்கலைக்கழகம் கொண்டுவரப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதற்கு ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்குவதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனாலும், இந்த ரூ. 50 இலட்சத்தை வைத்துக்கொண்டு ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கி நடத்துவது என்பது சற்றுக் கடினமாக இருக்கும். கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பல்கலைக்கழகத்தை அறிவித்த நேரத்திலே, அது ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி நலனுக்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரம் என்று சொன்னால், பல்கலைக்கழகச் சட்டத்திலே இடம் பெற முடியுமா?



நிதியொதுக்கம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அப்படி இந்தப் பல்கலைக்கழகத்திலே ஒடுக்கப்பட்ட மக்கள் என்று சொன்னால், மற்றப் பல்கலைக்கழகங்களிலே இல்லாத நிலை ஏற்படுமா என்ற நிலை எல்லாம் ஏற்படும் என்ற காரணத்தினால், ஒடுக்கப்பட்ட பகுதியிலே வாழக்கூடிய சாதாரண மக்களும் பயன்படக்கூடிய வகையிலே என்று சொல்லியிருந்தால் அது பொருத்தம் உடையதாக இருக்கும் என்ற திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Budget Memorandum Part I என்பதில் பக்கம் 48-லே தலைப்பு 8; பள்ளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்; இதிலே 2001-2002 ஆம் ஆண்டிலே 2 கோடி ரூபாய். அதே நேரத்திலே 2002-2003 ஆம் ஆண்டிலே 75 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே பள்ளிக் கல்வித் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் என்ற தலைப்பிலே கல்வித் தரத்தை மேம்படுத்தும் கல்வி, தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் 2000 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க மைய அரசு 2.25 கோடியும், மாநில அரசு சுமார் ரூபாய் 75 இலட்சமும் அனுமதித்துள்ளன என்று இருக்கிறது. அதிலே முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த முரண்பாடு ஏன் என்று தெரியவில்லை. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த முரண்பாட்டுக்கான காரணத்தையும் களைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத்தான், நம்முடைய நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் அவர்கள்கூடச் சொல்கிறார்கள்; ஒரு மனிதனுக்கு அடிப்படைக் கல்வி மிகவும் அவசியம் ஆகிறது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று எல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த அடிப்படைக் கல்விக்கு, ஆரம்பக் கல்விக்கு அரசு எல்லா வகையிலேயும் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் நான் இங்கே வலியுறுத்துகிறேன்.

இங்கே கூட நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்விக் கொள்கை என்பது மிக முக்கியமான கொள்கையாகும். நீங்கள் முடிவு எடுக்கின்ற

நேரத்திலே முதலமைச்சர் அவர்களைக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கிறீர்களா; இல்லையா; என்ன என்பது எங்களுக்குச் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது. காரணம், 5 ஆம் வகுப்பிலேயிருந்து 9 ஆம் வகுப்பு வரையிலே பொதுத் தேர்வு என்று சொல்கிறீர்கள். அதற்கு அரசாணை இடப்பட வேண்டும் அல்லது, சட்டமன்றத்தைக் கூட்டி விவாதம் செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதுவும் இல்லாமல், இன்று கல்வித் துறையினுடைய இயக்குநராலே ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, அந்தச் சுற்றறிக்கையின் மூலம் ஒரு கொள்கை முடிவை அறிவிக்கிறீர்கள் என்று சொன்னால், இது நாட்டு மக்களுக்கு, மாணவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளிக்கும். அந்தப் பொதுத் தேர்வு முறை என்பதன்மூலம் இன்று 5-வது வகுப்பிலே, 6-வது வகுப்பிலே, ஏதாவதொரு வகுப்பிலே கிராமப்புறக் குழந்தை தேர்ச்சி பெற முடியாத நிலை ஏற்படும் என்று சொன்னால், அவர்கள் தொடர்ந்து படிக்க முடியாது; மீண்டும் பெற்றோர்கள் செய்த தொழிலையே செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தினாலே, இதை நாங்களெல்லாம் பலமுறை வலியுறுத்திச் சொன்னோம். ஆனால், மீண்டும், திரும்பப் பெறுவதாக, இரத்து செய்யப்படுவதாக அறிவித்துவிட்டு, இப்போது மாவட்ட அளவிலே பொதுத் தேர்வு என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, அதையும் நீங்கள் திரும்பப் பெறவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுகூட, அரசியல் சட்டத் திருத்தம் 93-ன்படி, கல்வி, மனிதனுடைய அடிப்படை உரிமை. இந்த அடிப்படை உரிமையை அந்தக் குழந்தைகள் பெறுவதற்கு பெற்றோர்கள் இதனைத் தங்களுடைய கடமையாகக் கருத வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படியிருந்தாலும்கூட இப்போது அரசினுடைய புள்ளிவிவரத்தைப் பார்க்கிறோம். மாணவர்களுடைய சேர்க்கை என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அப்படி மாணவர்களுடைய சேர்க்கை மிகக் குறைவாக இருக்கின்ற அதேநேரத்திலே இடைவிட்டோர், drop-outs என்று சொல்கிறார்களே அது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. அந்தப் புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது. நிறையச் சொல்லலாம். தேர்ச்சி விகிதம் என்பதும் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே போகவில்லை. ஆகவே இப்படியெல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; யார் மீது என்று சொன்னால் பெற்றோர்கள் மீது. குழந்தைகளைக் கட்டாயம் படிக்க வைக்கவில்லை என்று சொன்னால் அரசு செய்யக்கூடிய, அரசு வழங்கக்கூடிய நலத் திட்டங்களை, உதவிகளையெல்லாம் குறைத்துக்கொள்வோம், நிறுத்திக்கொள்வோம் என்ற ஓர் அறிவிப்பையாவது வெளியிட்டால் அந்தப் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளைக் கட்டாயம் படிக்க வைப்பார்கள் என்ற ஒரு நிலை உருவாகும். இதுவும் ஒரு காரணம்.



*பிற்பகல் 12-50*

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அடுத்து, குழந்தைத் தொழிலாளர் முறை இருக்கிறது. வறுமையின் காரணத்தினாலே குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள். வருமானத்தை ஈட்டுவதற்கு என, இந்தக் குழந்தைகளுடைய படிப்பை நிறுத்திவிட்டு இப்படித் தொழிலுக்கு, வேலைக்கு அனுப்புகிறார்கள். ஆகவே, குழந்தைத் தொழிலாளர் முறை கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அடுத்தது, மிக முக்கியமான பிரச்சினை. கல்வியிலே நிறையப் பேசிக் கொண்டே இருக்கலாம். தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி. பற்றிப் பேசுகிற நேரத்தில் நம்முடைய தமிழ்நாட்டிலே மிகப் பெரிய கோஷம்; எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் கோஷம் இப்போது மங்கி, ஈனக்குரலிலே சொல்கின்ற அளவிற்கு தமிழ் மெல்லச் சாகும் என்ற நிலை மாறி, தமிழ் வேகமாகச் செத்து விடுமோ என்ற ஐயம் எழுந்துகொண்டிருக்கிறது. சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கே இருக்கிறது தமிழ்? பள்ளிகளிலே மாறிக் கொண்டிருக்கிறது. இன்று வீடுகளிலே தமிழ் இல்லை; தெருக்களிலே இல்லை; சந்தைகளிலே இல்லை; உணவு விடுதிகளிலே இல்லை; அலுவலகங்களிலே இல்லை; நீதிமன்றங்களிலே இல்லை; திருமணக் கூடங்களிலே இல்லை, வழிபாட்டுத் தலங்களிலே இல்லை; சின்னத் திரையிலே இல்லை; பெரிய திரையிலே இல்லை. எங்கு பார்த்தாலும் ஆங்கிலம் கலந்த தமிழ். (குறுக்கீடு) ஆமாம். நம்முடைய லெட்டர் பேடில்கூட இல்லை. இன்னும் வேதனையோடு சொல்கிறேன். இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகிய நாமும் தமிழிலேயே கையொப்பம் இட வேண்டுமென்ற கோரிக்கையை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இப்போது இருக்கிற இந்த நிலையெல்லாம் மாற வேண்டும்.

இப்போதுகூட நம்முடைய தமிழ்நாட்டிலே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகத் தமிழ் மாநாட்டை நடத்துகிறோம்; கோடிக்கணக்கிலே செலவழிக்கிறோம்; புரட்சிகரமான தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றுகிறோம். இதனாலே நிச்சயமாகத் தமிழ் வளர்ந்துவிடாது. ஆகவே, தமிழை வளர்ப்பதற்கு எல்லா நிலைகளிலும் நாம் முன்வர வேண்டும். நம்முடைய அரசாங்கம் இரு மொழிக் கொள்கையைக் கடைபிடிக்கிறது. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். B.A. Literature அல்லது தமிழ் மீடியத்திலே அல்லது ஆங்கிலம் கலந்து M.A., M.Sc. படித்து இருக்கிற ஒரு மாணவனைப் பார்த்து இரண்டு வாக்கியங்கள் அல்லது ஒரு கடிதத்தினை ஆங்கிலத்திலே எழுத முடியுமா என்று சொன்னால் திணறுகிறான். ஆனால் ஆங்கில மீடியத்திலே இரண்டாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு படித்த மாணவனை அழைத்து ஆங்கிலத்திலே எழுதச் சொன்னால், பேசச் சொன்னால் சரளமாகப் பேசுகிறான், கடிதம் எழுதுகிறான். ஆகவே இப்படி இருமொழிக் கொள்கையும் நம்முடைய தமிழ்நாட்டிலே தோல்வியடைந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த இரு மொழிக் கொள்கையை நான் குறை சொல்லவில்லை. தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அதே நேரத்திலே ஆங்கிலத்திலே முறையாகப் படிக்கவில்லை, கற்றுக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1956-லே அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய பெரியவர், நாங்கள் எல்லாம் மதித்துப் போற்றக்கூடிய பெரியவர் (மணியடிக்கப்பெற்றது) தலைவரே, இன்னும் நேரம் இருக்கிறது. அதற்குள் முடித்து விடாதீர்கள். திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். கொண்டு வந்த நேரத்திலே அவர் சொன்ன கூற்று என்ன தெரியுமா? தமிழனாகப் பிறந்த இந்தப் பிறப்பின் பயனை இன்று நான் முழுமையாகப் பெற்றுவிட்டேன் என்று பெருமையோடு சொல்லி அந்தச் சட்டத்தைச் சட்டமன்றத்திலே தாக்கல் செய்கிறார்கள். அவர் பெருமைப்பட்டார். தமிழனாகப் பிறந்ததற்காகப் பெருமைப்பட்டாரே தவிர, அந்தச் சட்டம் இன்னும் பெருமைப்படவில்லை. ஆகவே, இந்தத் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்னொன்றையும் சொல்கிறேன். நம்முடைய அரசாங்கம் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. 1659 பெண் போலீஸ் தேவை என்று சொல்லி விண்ணப்பப் படிவத்தைத் தமிழிலே கொடுத்திருக்கிறது. தமிழிலே விண்ணப்பப் படிவத்தைக் கொடுத்துவிட்டு ஆங்கிலத்திலே பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்பதற்காக. கணினி தமிழில் இல்லையா? நம்முடைய அதிகாரிகளுடைய நிலை என்ன? சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? ஆகவே, நம்முடைய ஆட்சியாளர்களாலே, அதிகாரிகளாலே தமிழினுடைய நிலை செத்துக்கொண்டிருக்கிறது என்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

அடுத்து, இன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருப்பது என்னவென்று சொன்னால், அரசு உதவிப்பெறக்கூடிய கல்வி நிறுவனங்களுக்கு வழங்கிவந்த உதவித் தொகை மெல்ல மெல்லக் குறைக்கப்படும் என்பது. கல்வி மானியம் குறைக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இப்படியெல்லாம் குறைக்கப்படுகின்ற காரணத்தினாலே இலவசத் திட்டம் எங்கே பறிபோய்விடுமோ என்ற வகையில், நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது. இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். அது என்னவென்று சொன்னால், கல்லூரிகளெல்லாம் பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இதனாலே ஆசிரியர்களுடைய பரிதாபநிலை என்னவென்றால் அவர்களுக்குரிய சலுகைகள், Seniority எல்லாம் போய்விடும் என்று சொல்கிறார்கள். அதுமாத்திரமல்ல; பல்கலைக்கழகங்களோடு இணைக்கின்ற நேரத்திலே அரசுக் கல்லூரிகளிலே மாணவர்களுக்குச் சேர்க்கைக் கட்டணம் 500 ரூபாய் என்று சொன்னால் பல்கலைக்கழகங்களோடு இணைப்பு வந்த பிறகு 5000 ரூபாய் வரை உயரும். இப்படி உயர்த்துவதனாலே, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகள் எப்படிப் படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, இந்த நிலையிலே அதைக் கைவிடவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** அடுத்து, பாதிக்கப்பட்ட, இடைநிலை ஆசிரியர்-மாணவர் பிரச்சினை. இது கடந்த ஆட்சிக் காலத்திலே, அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்டது. அதற்கு இப்போது புத்துயிர் கொடுத்திருக்கிறீர்கள்; உள்ளபடியே வரவேற்கின்றேன். வரவேற்றாலும்கூட, பாதிக்கப்பட்ட எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கவில்லை. 40% மதிப்பெண் சொல்லியிருக்கிறீர்கள். இடஒதுக்கீடு முறை சொல்லியிருக்கிறீர்கள்.

*10*-ஆம் வகுப்பிலிருந்து Training போகக்கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுமாத்திரம் அல்லாமல் நேரிடையாக இரண்டாம் ஆண்டு பயிற்சியிலே சேர்ந்து தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இப்படி இந்த நிபந்தனையெல்லாம் இப்பொழுது விதிக்கப்பட்டால் இலட்சக்கணக்கிலே செலவழித்து, இரண்டு ஆண்டுகள் படித்து, வயது கடந்த நிலையிலேயுள்ள அவர்கள் நிலைமைகளெல்லாம் கேள்விக்குறியாகும் என்பதை அரசு கவனத்திலே கொண்டு யாரெல்லாம் பயிற்சியிலே அன்று சேர்ந்தார்களோ அவர்கள் அனைவருக்கும் வாய்ப்பை அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து Kindergarten பயிற்சி முறை. அதிலே பயிற்சி பெற்றவர்களுடைய நிலை கேள்விக்குறியாக இருக்கிறது. அவர்களுக்கும் பயிற்சியில்லாமல் வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும் என்று அந்தக் கருத்தையும் நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறகு இளைஞர்கள் நலன். இந்த நாட்டிலே இளைஞர்கள் சக்தி மிகப்பெரிய சக்தி. ஆகவே, இந்த இளைஞர்கள் சக்தி இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தினாலே தீவிரவாதத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றிடவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி கட்டாயம் வேண்டும். இதுகுறித்து நான்கூட இந்தச் சட்டமன்றத்திலே கடந்த பல ஆண்டுகளாக வற்புறுத்திக் கொண்டிருக்கின்றேன். ஆகவே, ஒரு பாடப் பிரிவையோ அல்லது ஒரு நீதிபோதனை வகுப்பினையோ ஏற்படுத்தி மாணவர்களிடையே நல்லொழுக்கத்தை தீவிரவாதமில்லாமல், நாட்டுப்பற்றை, தேசப்பற்றை உருவாக்கக்கூடிய வகையிலே கொண்டு வரவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்தாக இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இளைஞர்கள் நலன் மிக முக்கியமான நலன். அவர்களுக்கு விளையாட்டுத் துறை மிக முக்கியமானது. விளையாட்டு கட்டாயமாக்கப்பட வேண்டும். விளையாட்டு என்று வருகின்ற நேரத்திலே மாணவர்களெல்லாம் அங்கே ஒருமுகப்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். ஆகவே, உடல்நலத்தைப் பாதுகாப்பதற்கும் அவர்களை எதிர்காலத்திலே உயர்த்துவதற்கும் இந்த விளையாட்டைக் கட்டாயமாக்குவதோடு, அதிலே ஊக்கப்படுத்தி, வேலைவாய்ப்பு, மேற்படிப்புக்கெல்லாம் நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது)

பிறகு பொதுத் துறையிலே தேர்தல். ஊழலுக்கு வழிவகுப்பது தேர்தல். இந்தத் தேர்தலைப் பார்த்தீர்கள் என்று சொன்னால்—மனசாட்சி, மனம் திறந்து பேசுகின்றோம்—தேர்தலுக்கான செலவு முறையைக் குறைத்துச் சொல்கின்றோம். ஆனால், நிறையச் செலவு செய்கின்றோம். அரசியல்வாதிகளாகிய நாமும் அதை மீறுகின்றோம். பொதுமக்களும் அதை மீறுகிறார்கள். இப்படி அதிகம் செலவழித்துச் சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்களுக்கு அதை மீண்டும் எப்படியும் பெற வேண்டும், அடுத்த, தேர்தலிலே நிற்க வேண்டும். சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வருகின்றது. இப்படி, அரசியல்வாதிகளுக்கு எண்ணம் வருகின்ற நேரத்திலே அதிகாரிகளும் துணையாக இருக்கின்றார்கள். ஆகவே இப்படி இந்த ஊழல் முக்கோண வடிவில் பொதுமக்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் என்று தேர்தலின் மூலமாக ஆரம்பமாகிறது. இந்தத் தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதன்பிறகு இந்து சமய அறநிலையத் துறை சார்பிலே—மிக முக்கியமானது—கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை வரப்போகிறது; அந்த மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதோ முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசின்மூலம் கல்வி நிறுவனங்கள் புதியதாகத் தொடங்கப்படவில்லை என்று சொன்னாலும்கூட, இந்தத் திருக்கோயில்கள் வாயிலாக நடத்தப்படக்கூடிய அந்த வகையிலேயாவது வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய நல்ல கல்வி நிலையங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலே Community Colleges என்று இருக்கின்றன. நீங்கள்கூட அறிவித்திருக்கிறீர்கள். இந்த Community Colleges என்று சொல்லக்கூடிய சமுதாயக் கல்லூரிகள். வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய வகையிலே வறுமையைப் போக்கக்கூடிய வகையிலே, பொருளாதார முன்னேற்றத்தைத் தரக்கூடிய வகையிலே, அந்த மேலை நாடுகளிலே இருக்கின்றன. அந்த Community Colleges சமுதாயக் கல்லூரிகளைப் போல எல்லா மாவட்டங்களிலும் கொண்டுவரப்பட வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஒவ்வொரு கல்லூரி மட்டத்திலேயும் நீங்கள் கொண்டுவரவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி இந்தக் கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே மிக முக்கியத்துவம் கொடுத்து, நல்ல கொள்கை முடிவுகளை எடுக்கின்ற நேரத்திலே,—அரசு நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும்.— இந்த 5 ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை பொதுத் தேர்வு என்ற நிலை கட்டாயம் வரக்கூடாது. கோத்தாரி கமிஷன் சொல்கிறது, பெரிய வல்லுநர்கள் எல்லாம் சொல்கிறார்கள், தேர்வு முறை எளிதாக்கப்படவேண்டும், 10 ஆம் வகுப்பு வரை தேர்வே கூடாது என்று. அந்த நிலையிலே இந்தப் பொதுத் தேர்வு அல்லது மாவட்ட அளவிலான தேர்வு என்பதை அரசு திரும்பப் பெற வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of clarification. ஒரு புள்ளிவிவரம் சம்பந்தமாகக் கேட்க வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, அமைச்சர் இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** இல்லை, கல்வி அமைச்சர்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் வந்தவுடன் நீங்கள் பேசுங்கள். உட்காருங்கள். உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா' என்னும் ஔவையின் அக்கால பாலர் பாடமான ஆத்திச்சூடியிலே தொடங்கி இன்று பாட்டுக்கொரு புலவன் பாரதி சொல்லியதைப் போன்று,

*"சென்றிடுவீரெட்டுத் திக்கும்— கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்"*

என்று சொன்னதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் வகையில், திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி இந்தியாவிலேயே மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்பக் கல்வித் துறையில் தேவைக்கேற்ப கட்டடப் பொறியியல் துறை, மின்னாற்றல் மற்றும் மின்னணுவியல், உலோகவியல் துறை, கணிப்பொறி விஞ்ஞானத் துறை, கருவிகள் மற்றும் பழுதுபார்ப்புப் பொறியியல் துறை, வேதியல் துறை, கட்டடக் கலைத் துறை, இவைகளில் இளநிலைப் படிப்பும், தொழில்நிலை வடிவமைத்தல், எரிசக்தி பொறியியல், போக்குவரத்துப் பொறியியல் மற்றும் நிர்வாகம், கட்டடக் கலைப் பொறியியல், கணிப்பொறி அறிவியல், மின்சக்தி அமைத்தல், தகவல் தொடர்பு அமைப்புகள், அனல்மின் சாதன வடிவமைப்பு மற்றும் உற்பத்திப் பொறியியல், தொழில் பாதுகாப்புப் பொறியியல், உலோகம் பற்றவைப்பு முறை, தொழில் உலோகவியல் உற்பத்தி, தொழில் நுட்பவியல்,

செயல்முறை மின்னணுவியல், செயல்முறை வேதியல் மற்றும் கணிப்பொறி செயல்பாட்டுத் துறை, வணிகத் துறை ஆகிய துறைகளில் முதுகலைப் பட்டப் படிப்பும் செயல்படுவது பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

இன்று உலகம் ஒரு பெரும் விஞ்ஞான சாதனையைப் படைத்திருக்கிறது. நாமும் அதை நோக்கித்தான் அசைய வேண்டியுள்ளது. மாறாக, மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சி பத்தாம் பசலித்தனமான ஜோதிடத்தை ஒரு கல்வி என்று சொல்லி, அதை விருப்பப் பாடமாக அறிவித்து உள்ளதை நினைத்துப் பார்த்தால் இந்தியாவிற்கு வந்த அமெரிக்க அதிபர் கிளிண்டன் அவர்கள் சொன்னதை—அவர் இந்தியாவைப் பற்றி, இங்கே சாமியார்களும், சன்னியாசிகளும், பாம்பாட்டிகளும் நிறைந்திருப்பார்கள் என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதை—மெய்ப்பித்துக் காட்டுவார்களோ எனத் தோன்றுகிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், மத்தியில் உள்ள அரசு விஞ்ஞானக் கல்விக்குக் கொடுத்துவந்த மானியத்தை நிறுத்திவிட்டதாக அறிகிறேன். இது விஞ்ஞான உலகத்திற்கு நம்மை இட்டுச் செல்ல உதவாது. இதனை வேதனையோடு நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் வந்துவிடா வண்ணம், பார்த்துக்கொள்ள வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வு எழுதும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கும்பொருட்டு சிறப்பு வகுப்புகள் நடத்த சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு மையங்களைத் தேர்வு செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில் இன்னும் இரண்டு மையங்களைத் தொடங்கி இம்மாணவிகளுக்கு உதவுவது, தமிழகக் கல்வி வளர்ச்சிக்கு மேலும் சிறப்பைச் சேர்க்கும் என்று கருதுகிறேன். இவ்வாண்டு 60 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றிருப்பது சிறப்பான அம்சமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள 477 கலை மற்றும் அறிவியல் துறைக் கல்லூரிகளில் 120 கல்லூரிகள் பெண்கள் பயிலும் கல்லூரிகளாகவும், மீதமுள்ளவற்றில் 30 விழுக்காடு மாணவிகளைச் சேர்ப்பதற்காகவும் தமிழக அரசு ஆணையிட்டு இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. நலிந்த பிரிவினரான தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும்



பெண்களுக்கான உயர்கல்வி சம்பந்தப்பட்ட விஷயத்தில் பெரிய அளவில் எதுவும் சமீபத்தில் சொல்லப்படவில்லை.

2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் தேர்வு வாரியத்தால் புதியதாக ஆசிரியர் ஒருவர் கூட நியமிக்கப்படாதது வருத்தத்தை அளிக்கிறது. அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைப்பதன்மூலம் ஏழையெளிய மாணவர்கள் உயர்கல்வி அடையும் வாய்ப்பினை இழக்க நேரிடும் எனக் கருதுகிறேன்.

பிற்பகல் 1-05

உயர்கல்வி அளிக்கும் பொறியியல் கல்லூரிகளில் போதுமான அளவில் நூலகம் இல்லை. போதுமான கட்டடம் போன்ற கட்டமைப்பு வசதிகள் இல்லாமலேயே கல்லூரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று உலகத் தரத்தோடு நம் கல்வி வளர்ந்துள்ளது என்றால், அது அரசுக் கல்லூரிகளில் மட்டும்தானே தவிர, தனியார் கல்லூரிகளில் இல்லை என்பதை நாம் உற்றுக் கவனிக்க வேண்டும். பெரியார் கல்லூரி தொடங்கி நான்கு ஆண்டுகள் கடந்தும், பெரிய அளவில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. வகுப்புகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படவிலை. தேர்வு நடத்தும் மையமாக மட்டுமே அது இருந்து கொண்டிருக்கிறது. இவ்வாண்டு கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள மானியத்தைப் போதிய அளவுக்கு ஒதுக்கி இருக்க வேண்டும். அதன் மூலம் ஏழையெளிய மாணவர்கள் கல்வியைப் பெறுகின்ற வாய்ப்பினை அடைந்து இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

குறைவான கட்டணத்தில் உயர்கல்வி அளிக்கும் நிறுவனங்களாக அரசுக் கல்லூரிகள் உள்ளன. இலக்கியங்கள் மற்றும் அறிவியல் பாடங்களைக் கொண்டுள்ளவை இக்கல்லூரிகளாகும். கிராமப்புற மாணவர்களும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பெண்கள் மிகுதியாகப் பயிலும் கல்லூரிகளாக அரசுக் கல்லூரிகள் திகழ்கின்றன. உயர்கல்வித் துறையைப் பொறுத்தவரை, கல்வியின்பால் அரசு கொண்டுள்ள அக்கறைக்கு ஓர் அடையாளமாகத் திகழ்கின்றன அரசுக் கல்லூரிகள். இக்கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்கள் வசம் ஒப்படைப்பதன் மூலம், பணமுள்ளவர்கள் மட்டுமே பயிலும் நிறுவனங்களாக இவை மாறும் அபாயம் இருக்கிறது; அவ்வாறு இவை மாற்றப்படும். 160 ஆண்டுகால வரலாற்றையும், பாரம்பரியத்தையும்

கொண்ட அரசுக் கலைக் கல்லூரிகளை அரசின் நேரடி நிர்வாகத்திலிருந்தும், பராமரிப்பிலிருந்தும் எடுத்து, அவற்றை அப்படியே பல்கலைக்கழகங்களிடம் ஒப்படைத்தல் என்பது, மாபெரும் சமூகப் பின்னடைவை ஏற்படுத்தும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

222 பொறியியல் கல்லூரிகளில், வெறும் 7 கல்லூரிகளை மட்டும் அரசு நடத்துகிறது. இப்படி அரசுக் கல்லூரிகள் இருக்குமானால், ஏழை மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்றும் கருதுகிறேன். ஆட்சி மாற்றங்களால் மட்டும் கல்லூரிகள் முன்னேற்றம் அடைந்துவிடவில்லை. கல்லூரிப் பேராசிரியர்கள், தனியார் மயமாவதையும், கல்லூரிகள் பல்கலைக்கழகங்களோடு இணைவதையும் தடுத்து நிறுத்தக்கோரி, நேற்றைய முன்தினம் 8-4-2002 அன்று மாபெரும் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். சுயநிதிக் கல்லூரிகளின் மூலம், நிதி இல்லா ஏழை மாணவர்கள் கல்விபயிலும் வாய்ப்பை இழக்க நேரிடும் எனச் சுட்டிக்காட்டுகிறேன். நம் காலத்தின் சமூகப் பிரச்சினைகள் எவை என்று எடுத்துப் பார்த்தால், மனித நாகரிகத்தைப் பற்றிப் பெரிய அளவில் எடுத்துச் சொல்லப்படும் மகாபாரதக் கதையிலே நடைபெறும் சண்டையிலே தனக்கு நிகரற்றவர்களோடு சண்டையிடக்கூடாது; வயதானவர்கள், பெண்கள், குழந்தைகளெல்லாம் கொல்லப்படக்கூடாது என்றும், அதற்கு மேலாக தன்னோடு... (மணியடிக்கப்பட்டது) முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமபலம் இல்லாதவர்களோடு சண்டை போடக்கூடாது என்று சொல்லப்படுகிறது. மகாத்மா காந்தி அவர்கள் இந்திய நாடு ராமராஜ்யமாக விளங்க வேண்டும் என்றார். கம்பன் தனது காவியத்திலே இராமனது ஆட்சியில் கொள்வாரும் இன்றி, கொடுப்பாரும் இன்றி, எல்லோரும் எல்லாம் சமகாலத்தில் பெற்று வாழ்ந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இராமன் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பாக நடந்ததாகச் சொல்லப்படுகிறது. எனவேதான், தனக்குத் துரோகமிழைத்த எதிரியான இராவணனைக்கூடக் கடைசி நாள் சண்டையிலே ஆயுதங்களை இழந்து நிராயுதபாணியாக நின்ற இராவணனைப் பார்த்து, 'ஆயுதமற்ற உன்னை நான் எதிர்த்துப் போரிட மாட்டேன்; உன்னைக் கொல்ல மாட்டேன்;



இன்று போய் உன்னைச் சுதாரித்துக் கொண்டு நாளை வா" என்று சொல்லிய இராமன் பெயரால் இன்று ஆட்சி நடத்தும் நமது நாட்டில், குறிப்பாக குஜராத்தில், விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வந்து, வாயைத் திறந்து பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தியுள்ளார்கள். முதியோரை, இளைஞர்களை, பெண்களை பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தியுள்ளனர். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து கருப்பையைக் கிறியுள்ளார்கள். பெரிய கும்பல் மத்தியிலே ஒரு பையன் ஓடி வந்து சிக்கிக் கொண்டான். அவன் பெயரைக் கேட்டபோது, அவன் பெயரை மாற்றிச் சொல்கிறான். அதனைக் கண்டுபிடித்து, அவனை அண்ணாத்திப் பிடித்து, அவன் கழுத்தை அறுத்துக் கொன்றிருக்கிறார்கள். வெறிபிடித்த காமுகன் கற்பழிக்கிறான். இப்படித் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன என்று சொன்னால், இப்போது நமது நாட்டினுடைய கல்வி, கலாச்சார முறைகளெல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் இந்தக் காலத்தில் மிக ஆழமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், மனித நேயம், மனிதப் பண்பு, மனித நாகரிகம் கொண்டதாகச் சமூகம் இருக்க வேண்டும். சகமனிதன் துன்பத்தில் உழல்கின்றபோது உதவும் கரம் நீட்டும் எண்ணம் கொண்டவர்களாக மனித சமுதாயம் வளர வேண்டும்; இந்திய சமுதாயம், தமிழக சமுதாயம் அப்படித்தான் மலர வேண்டும். இதைத்தான் பாரதி,

*"அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்"*

என்று சொல்கிறான். இப்படி ஏழை மக்களை உயர்த்துகின்ற முறையில், மனித நாகரிகத்தை, மனித சமுதாயத்தை உயர்த்துகின்ற முறையில் நமது கல்வி முறைகள் வளர வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும் என்று கேட்டு, எனது தொகுதி சம்பந்தமாக இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1-10

அரூரில் ஓர் அரசுக் கலைக் கல்லூரியும், ஊத்தங்கரையில் ஒரு தொழில் கல்லூரியும் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூரிலிருந்து சேலம் ரோட்டையும், அனுமன்தீர்த்தத்திலிருந்து தீர்த்தமலை செல்லும் ரோட்டையும், அரூரிலிருந்து வேப்பம்பட்டி வழியாக கோட்டப்பட்டி செல்லும் ரோட்டையும், திருப்பத்தூரிலிருந்து சிங்காரப்பேட்டை செல்லும் ரோட்டையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலை அடிவாரத்தில் கெடப்பாரை ஆற்றின் குறுக்கே, அணைகட்டப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரூரிலும், ஊத்தங்கரையிலும் உள்ள அரசு மருத்துவமனைகளில் உள்ள இடப் பற்றாக்குறையைப் போக்கி, போதிய அளவில் மருத்துவர்களையும், துப்புரவுத் தொழிலாளர்களையும், எக்ஸ்ரேமேன்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37, பொது (தேர்தல்கள்) துறை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்றார்கள்.

***திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற வேண்டிய கல்வி மானியக் கோரிக்கை, ஒரு நாளாகக் குறைக்கப்பட்டு, அந்த ஒரு நாளிலும் சில மணித்துளிகள் மட்டுமே எடுத்துக்கொண்டு, முக்கியமான கட்சிகளுக்கு



இந்த மானியத்தின்மீது கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருப்பதற்கு, ----

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, எல்லா மானியக் கோரிக்கைகளிலும் கொடுக்க முடியாது. பத்து நிமிடங்களிலே எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் பேசி முடித்து விட்டால் வாய்ப்புக் கொடுக்கலாம். ஆனால், யாரும் அப்படிப் பேசி முடிப்பது கிடையாது.

**திரு. கே.சி. கருணாகரன்:** திரு. நன்மாறன் பேச அனுமதி கேட்டிருக்கிறார். அவரைப் பேச அனுமதிக்க வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அது இல்லையென்றால் ஏற்க முடியாது. 4 மணி நேரம் பட்ஜெட் உரையின்மீது நம்முடைய நிதியமைச்சர் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தை அரசியல் மேடையாக மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவறு என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகளினுடைய நிலைகளை, தரங்களைப் பற்றி இங்கே குறிப்பிடுகின்றபோது, 1995-96-ல் 78,993 மாணவர்களும், 2000-2001-ல் 49,000 மாணவர்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக இங்கே ஒரு தகவலைச் சொன்னார்கள். ஆனால், 1995-96-ல்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதற்கு விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்களே, இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதில் ஒன்றும் யாரும் பொறுப்பைச் சுமத்தவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் 5 நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அதில் விளக்கத்தைச் சொன்னேனேயொழிய தவறான தகவல் எதையும் சொல்லவில்லை.

**திரு. இ. புகழேந்தி:** தவறான தகவலைக் கூறியிருக்கின்றார். ஸ்டாலின் பெயரை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கையிலே பதில் சொல்லும்போது இதற்கு அமைச்சர் விளக்கம் சொல்வார். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே இதற்கு பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் அமருங்கள். திரு. நன்மாறன் பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அந்தப் புள்ளிவிவரமே தவறு.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில்நுட்பக் கல்லூரிகளில், கிராமப்புற மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை உத்தரவாதப்படுத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடுகிறேன்.

கல்வியை, மாநில அரசின் பட்டியலுக்குக் கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்தி, சட்டமன்றத்தில் இதுகுறித்து வலியுறுத்த வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, பல்கலைக்கழகத்தின் செனட், சிண்டிகேட் போன்றவற்றில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று குறிப்பிடுகிறேன். கல்லூரி மாணவர்களுக்கான பேரவைத் தேர்தல்களுக்கு உத்தரவாதம் செய்யப்படவேண்டும். சுயநிதிக் கல்லூரி, பள்ளிகளில் நன்கொடை வசூலுக்கு தடையினைச் செய்ய வேண்டுமென்பதை வற்புறுத்துகிறேன்.

பழனியாண்டவர் பெண்கள் கல்லூரியில் ஒரு இலட்சம் ரூபாய் வரை இரசீது இல்லாமல் பொது உடைப்பு என்கின்ற வகையில் வசூல் செய்யப்படுகிறது. அதனைக் கட்டாத மாணவிகளுக்கு Hall Ticket தருவதில்லை. தேர்வுகள் தொடங்கவிருப்பதால் உடனடியாக அந்த மாணவிகளுடைய நலன் பாதிக்காத வகையில் Hall Ticket வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குறிப்பிடுகிறேன். மாணவர்களிடமிருந்து பயன்பாட்டுக் கட்டணம் வசூலிக்கப்படும் என்கின்ற அரசின் முடிவைத் திரும்பப் பெற வேண்டுமென்பதைக் குறிப்பிடுகிறேன்.



தாய்மொழிக் கல்வி குறித்த கொள்கை அறிவிப்பு உறுதி செய்யப்பட வேண்டும். தமிழ்ப் பயிற்று மொழி அப்பீல் சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தின் விசாரணை குறித்து 'தினமணி' நாளேட்டில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் வழக்குரைஞர் இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்தின் முடிவிற்கே விட்டு விடுகிறோம் என்று தெரிவித்தார். உடனே நீதிபதி பதில் கூறுகின்றார்: 'அவ்வாறு சொல்ல முடியாது. மேல்முறையீட்டு மனுவை அரசு திரும்பப் பெற்றுக் கொள்கிறதா, இல்லையா' என்று கேட்டார். திரும்பப் பெறவில்லை என்று அரசு வழக்குரைஞர் கூறினார் என்று செய்தி வந்திருக்கிறது. வழக்கு இதுபோல நடத்தப்படுவது என்பது, பத்திரிகையில் வந்திருக்கும் அடிப்படையில் அமைந்திருக்கிறது என்றால் அது கவலைக்குரியது.

பிற்பகல் 1-15

தமிழ்ப் பயிற்று மொழி என்பது உறுதி செய்யப்படக்கூடிய வகையில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடத்தப்படுவதற்கு அரசு உத்தரவாதம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி மையத்தில் அடிப்படைக் கல்வித் தகுதி இல்லாத ஒருவர் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அது பொருத்தம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழி பேசும் மொழிச் சிறுபான்மை மக்களுக்கு, பள்ளியில் பயிலும் மலையாள மாணவர்களுக்கு ஆசிரியர்கள் போதுமான அளவில் இல்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 27 ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில் தூத்தூர் என்கிற கடலோர கிராமத்தில் சிறப்பாக விளையாடுகிற ஒரு கால் பந்தாட்டக் குழு உள்ளது. அது பராமரிக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில், அறநிலையத் துறைக்குச் சொந்தமான தேவி மகளிர் கல்லூரியில் போதுமான கட்டட வசதிக்கு உத்தரவாதம் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோன்று, குமரி மாவட்டத்[illegible]ம்பப்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224490
சென்னை-600 008

பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, மற்ற மாவட்ட தலைமை ஆசிரியர்களுக்கு வழங்குகிற ஊதியம், சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

சுயநிதிக் கல்லூரிகளில் U.G.C. சம்பளம் தருவதை உறுதிப்படுத்த வேண்டும். தென்காசி, சட்டநாதக் கரையாளர் கல்லூரியில் 5 மாதமாகச் சம்பளம் இல்லை என்ற குறை வந்துள்ளது. அது போக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கப்பலோட்டிய தமிழன் பாடம் 5 ஆம் வகுப்பு பாடத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. அது மீண்டும் அந்தப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். வரலாற்றுப் பாட நூல்களில், திராவிட நாகரிகம் நீக்கப்பட்டு, ஆரிய நாகரிகம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. திராவிட நாகரிகம், அதற்குரிய முக்கியத்துவம் பெற வேண்டும் என்பதை நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஜிடிஎன். கலைக் கல்லூரி, திண்டுக்கல்; அங்கே ஆசிரியர் நியமனத்தில் அரசாங்கத்தினுடைய வழிகாட்டுதல் முறை மீறப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் நியமனம் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. அதை உறுதி செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வயது வரம்பை மீறியதால், பணி நியமனம் மறுக்கப்பட்ட தமிழக இடைநிலை ஆசிரியர்களுக்கு மீண்டும்—அவர்கள், வயது வரம்பை மீறினாலும்கூட அவர்களுக்கு—பணி உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுமைப்பித்தனுடைய படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அதன்படி அவருடைய படைப்புகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கோருகிறேன்.

நூலகர்கள், அவர்களுக்குரிய ஊதியம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். நூலகங்களுக்கு உள்ளாட்சிகள் வசூலிக்கிற தொகை உரிய நேரத்தில் சென்று சேர வேண்டும். தமிழகத்தில் இளைஞர் நலக் குழு அமைக்கப்பட வேண்டும்.



விளையாட்டுத் துறையில் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த இளைஞர்கள் முன்னுக்கு நிறுத்தப்பட்டு, தகுதியான குழுக்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.

மதுரையில் Kinder Garten பள்ளி ஆசிரியைகளை ஆரம்பப் பள்ளி ஆசிரியைகளாக நியமிக்க வேண்டும். மதுரை மாநகராட்சிப் பள்ளிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. மதுரை, சென்னை, கோவை போன்ற இடங்களில் மாநகராட்சிப் பள்ளிகள் சிறப்புறச் செயல்படுகிற காரணத்தினால், அவற்றுக்கு மேலும் ஊக்கம் தர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊர்ப்புற நூலகர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, அவர்களுக்குரிய ஊதியத்தை உயர்த்தி வழங்க உறுதி செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவோடு கல்வி, தமிழ் வளர்ச்சி-பண்பாடு குறித்த மானியத்தின் மீதான கருத்தினை நிறைவு செய்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37, பொது (தேர்தல்கள்) துறை மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது (தேர்தல்கள்) துறை, மானியக் கோரிக்கை எண் 37-ன் மீது பேரவையில் அளித்துள்ள பதிலினை ஏற்று உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இம் மானியக் கோரிக்கையின்கீழ் கோரியுள்ள தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலுரை:

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ் மாநிலத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை பெற்ற மாநிலமாகவும், முன்னோடி மாநிலமாகவும் மாற்றுவதற்கு சபதம் ஏற்றுள்ள இந்தப் பொற்கால ஆட்சியின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் வணக்கத்தை முதலில் தெரிவித்துவிட்டு, இந்த மானியக் கோரிக்கையைப் பற்றிய சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தக் கல்வி மானியத்தில் பங்கேற்று, தமிழகத்தில் கல்வியிலே எந்த அளவிற்கு நாம் முன்னேறியிருக்கிறோம் என்றும், நாம் இன்னும் முன்னேற்றம் அடைவதற்கு என்னென்ன வழி முறைகள் எல்லாம் தேவை என்பதையும் விளக்கமாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. கே. மணி அவர்கள் பேசும்போது, திருவள்ளுவருடைய கருத்துகளை—அதாவது கல்வியைப்பற்றி திருவள்ளுவர் என்ன கருத்துகளைச் சொல்லியிருக்கிறார் என்று—விளக்கமாகச் சொன்னார்கள். அதிலே அவர்கள் சொல்லிருப்பது,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''

என்று விளக்கமாகச் சொன்னார்கள்.

அழிவில்லாத செல்வம், ஆக்கம் தருகின்ற செல்வம், ஈடிணையற்ற செல்வம் எது என்றால், அதுதான் கல்விச் செல்வம். அந்தக் கல்விச் செல்வத்தைவிடச் சிறந்த செல்வம் எதுவுமே இல்லை என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஒரு நாட்டு மக்கள் முன்னேற வேண்டுமானால், அவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்த வேண்டுமானால், அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானால், அந்த நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று, பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்தினார்கள். அந்த அடிப்படை இலட்சியத்தை ஆக்கபூர்வமாகப் பேறிஞர் அண்ணா அவர்கள் தனது ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றினார்கள். அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மிக்க மாநிலமாக்குவேன் என்று சூளுரைத்து, புரட்சிகரமான ஒரு வரவு-செலவுத் திட்டத்தை இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு சமர்ப்பித்துள்ளது. புதிய பள்ளிகளை, புதிய கல்லூரிகளை, புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்கியதிலும், வேறு எந்த ஆட்சியும் செய்யாத பல சாதனைகளைச் செய்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பெரியார், அண்ணா அவர்களின் கொள்கை வழியிலே வந்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், "தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம், கல்வி தெரியாத பேர்கள் இல்லாமல் செய்வோம்" என்ற வகையில்,



தன்னுடைய ஆட்சிக் காலத்தில் கல்வித் துறைக்கு முக்கியமான இடத்தை அளித்து, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திக் காண்பித்தார்கள். இந்த முப்பெரும் தலைவர்களின் முழு உருவமாக, இப்போது நம்மிடையே இருக்கின்ற நமது ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநில கல்வித் துறையிலே மகத்தான புரட்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

*19-12-1991* அன்று, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உரையாற்றியபோது, இன்றைய சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது பற்றி, தொலைநோக்குடன் தெரிவித்த கருத்துகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"மக்களின் கல்வி அறிவில்லாமையை ஒழிப்பது, ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் போதிப்பது, சமூக அரசியல் விழிப்புணர்ச்சிக்காகக் கல்வித் திட்டத்தை அமைத்துக் கொள்வது, ஒற்றுமை உணர்வு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை வளர்த்து, சாதி, இன மற்றும் இதர தீய சக்திகளால் உருவாகும் பிரிவுகளை ஒழிப்பது, விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள்மீது அதிக அக்கறை காட்டுதல், கல்விக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல், சரியான அணுகுமுறை, மதிப்பீடுகளை வளர்த்துக் கொள்ளுதல், பல்வேறு பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடும் கருணையோடும் அணுகுதல், முறையான தகுதியுள்ள சமூகக் கல்வியை வழங்குதல், பள்ளிக் கூடத்திலிருந்தே விஞ்ஞானத் தொழில் கல்வியை விரிவுபடுத்துதல் ஆகிய இந்த அம்சங்கள் நம்மை அலைக்கழிப்பது போலவும், விடை காண முடியாததைப் போலவும் காணப்படலாம். ஆனால், இதுகுறித்து நாம் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. நம் அரசியல் நிர்ணய சட்டத்தில் சொல்லியிருக்கிற நம் கல்வித் திட்டத்தில், நம் கல்வியின் பங்கைப்பற்றிச் சரியான கண்ணோட்டம் கொண்டு அதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்"

என்று பேசினார்கள்.

இவ்வாறு கூறியதற்கேற்ப, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவார்ந்த புதிய சமுதாயத்தைப் படைக்கும் இலட்சியப் பயணத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தமிழக மக்களும் என்றும் உறுதுணையாக இருப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

சில புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, தமிழகத்தில் எந்த அளவுக்குப் பள்ளிக் கல்வியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது முக்கியத்துவம் கொடுத்துப் பல திட்டங்களைச் செயல்படுத்தியது என்பதைப் பற்றிச் சில விவரங்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நமக்குத் தரப்பட்டுள்ள கல்வியினுடைய அறிவு, எந்த அளவுக்குத் தமிழகத்தில் வளர்ந்திருக்கிறது என்பதற்குப் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. அதில், ஒவ்வோர் ஆண்டும் எவ்வாறு அந்த நிலையை அடைந்தோம் என்பதைப் பார்க்கிறபோது, 1981ஆம் ஆண்டு, எழுத்தறிவு எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்றால், 46.7 சதவீதம் என்றுதான் இருந்தது.

1991-ல் அந்தக் கணக்கெடுக்கும்போது பார்த்தீர்கள் என்றால், 63.72 சதவீதம் என்ற இலக்கை அடைந்திருக்கிறோம். ஆகவே, அந்த ஓர் ஆண்டு காலத்தில் 17 சதவீதம் எழுத்தறிவினுடைய விகிதாச்சாரம் உயர்ந்திருக்கிறது. அதற்கு முந்தைய ஆண்டுகளைப் பார்த்தீர்கள் என்றால், 8 சதவீதம், 6 சதவீதம் என்ற நிலை இருந்தது. ஆனால், 1991-ல் பார்க்கும்போது, 63 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்றால், 17 சதவீதம், அதிகமாக உயர்ந்திருக்கிறது. அந்தக் கால கட்டத்திலேதான் தமிழகத்திலே கல்வி அறிவானது அதிகமாக உயர்ந்து வந்துள்ளது. அதற்குக் காரணம் என்ன? அந்தக் காலகட்டத்தில்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்.

பிற்பகல் 1-25

இன்று பேசுகின்றோமே, இந்த மேல்நிலைக் கல்வியினை plus two என்று; அந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். மேல்நிலைக் கல்வியானது, கிராமப்புற மாணவர்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டுமெனக் கருதி, 1978-ல் பள்ளிகளில், ten, plus two, plus three என்ற கல்வி முறையைக் கொண்டு வந்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித் தலைவர் ஆட்சி என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோல், கிராமப்புற மாணவர்களுக்கு, மருத்துவம், பொறியியல் போன்ற படிப்பை மேற்கொள்வதற்காக, ஒரு புதிய முறையைப் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்தார்கள். 1984-85-ல் தான் நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வந்தார்கள். அதற்கு முன்பெல்லாம் interview வைத்துத் தேர்ந்தெடுத்து விடுவார்கள். அதிலே சில நேரங்களிலே குறைபாடுகள் இருந்தன. வேண்டியவர்கள் சிலருக்குக் கிடைத்தன; சிலருக்குக் கிடைக்காமல் இருந்தன. ஏனென்றால், யாரெல்லாம் நேர்முகத் தேர்வு நடத்தினார்களோ, அதற்கேற்றாற்போல, மார்க்குகளை அளித்தார்கள். ஆனால், புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தவுடனேயே பல்வேறு எதிர்ப்புகள் இருந்தாலும்கூட, 1984-85-லே, நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வந்தார்கள். அதைத்தான் இன்றும் கடைப்பிடித்துக் கொண்டு வருகிறோம். திரு. உசேன் அவர்கள் பேசும்போது Counselling பற்றிச் சொன்னார்கள். இதற்கு வித்திட்டு சரியான முறையைக் கல்வித் துறையிலே கொண்டு வந்தவர், புரட்சித் தலைவர் அவர்கள்தான். அதைத்தான், அவர்களும் தொடர்ந்து செய்தார்கள். புதிதாக ஒன்றும் அவர்கள் செய்யவில்லை.

1981-ல், ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை, அரசு ஊழியர்களாக ஆக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்; ஆசிரியர்களுக்குப் பல சலுகைகளைத் தந்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். மற்ற எந்தக் கட்சியும் கிடையாது.

ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்கவும், இடையிலே படிப்பை நிறுத்துவதை அறவே ஒழிக்கவும், 1982-ல் மதிய உணவுத் திட்டம், அதாவது சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது, புரட்சித் தலைவர் அவர்களால். நான் முன்பு இந்த 17 சதவிகிதம் புள்ளிவிவரம் தந்தது, அந்த 10 ஆண்டு காலத்தில் உயர்ந்திருக்கிறது என்றால், அந்தக் காலத்தில் புரட்சித் தலைவர் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்ததுதான் காரணம். தமிழகத்திலே இவ்வாறு செயல்படுத்தியதன் காரணமாக, கல்வியறிவினை 46 சதவீதத்திலிருந்து 63 சதவீதமாக உயர்த்திக் காண்பித்திருக்கிறார், 10 ஆண்டு காலத்தில். அதேபோல், புரட்சித் தலைவி அவர்கள், 1991-96-லே ஆட்சிக்கு வந்த பிறகு பார்த்தீர்கள் என்றால், அதே சதவீதம் முன்னேறி இருக்கிறது. அந்தப் பழைய 10 சதவீதம் வந்திருக்கிறது. ஆனால், இடைப்பட்ட காலத்தில் ஐந்தாண்டுகள்தான் அண்ணா தி.மு.க. ஆட்சி இருந்தது; ஐந்தாண்டு காலம் தி.மு.க. ஆட்சி இருந்தது. ஆகவேதான் குறைந்திருக்கிறது. அதைத்தான் சொல்ல விரும்புகிறேன்; அனைத்திந்திய அண்ணா தி.மு.க.

பொறுப்பேற்றவுடனேயே, கிராமப்புறத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வியின் அந்த விகிதாச்சாரத்தினுடைய அளவை அதிகமாக உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அதற்காகப் பல திட்டங்கள் கொடுக்கப்பட்டன.

அதேபோன்று சத்துணவுத் திட்டம். கிராமப்புற மக்களுக்காக, P.U.Cயை எடுத்துவிட்டு Plus Two-வைக் கொண்டு வந்தோம் என்றால், பல கிராமங்களிலே படிக்கிற மாணவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். பிறகு, 1985-86-ல், 1-வது முதல் 5-வது வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும், பிறகு 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கும் மதிய உணவு உண்பவர்களுக்கும், இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் இலவசச் சீருடைகள் வழங்கியதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். உணவு தருகிறோம்; பள்ளிகள் கட்டித் தருகிறோம்; உடையைத் தருகிறோம்; புத்தகங்களைத் தருகிறோம்; இதுபோன்று அனைத்துத் திட்டங்களையும் செய்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

பிறகு, 1986-ல், தொடக்கக் கல்விக்கெனத் தனியாக ஓர் இயக்குநரை ஏற்படுத்தினோம். அதற்கு முன்பு அப்படிக் கிடையாது; அதுவும் 1986-ல் புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான்.

கட்டாயக் கல்வியை உருவாக்க சட்டம் இயற்ற வேண்டுமென்று நம்முடைய திரு. மணி அவர்கள் கேட்டார்கள். அதை உணர்ந்துதான், நான் முன்பு சொன்னதைப்போல, புரட்சித் தலைவி அவர்கள், 1994-ல் கட்டாயக் கல்வி என்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலேதான் வந்திருக்கிறது.

பிறகு, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, 1996-லே தொடக்கக் கல்விக்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உதவி தொடக்கக் கல்வி அலுவலரையும், மாவட்ட அளவிலே மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களையும் நியமித்தார்கள். அதோடு, 1994-95-ல், ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர் கழகங்களைச் செயல்படுத்துவதற்காகப் புரட்சித் தலைவி அவர்கள் திட்டம் கொண்டு வந்தார்கள்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பெற்றோர்-ஆசிரியர் கழகங்களை உருவாக்குவதன் மூலமாக, அவர்களுடைய ஈடுபாட்டின் மூலமாகத்தான் கிராமப்புறங்களிலே கல்வியை வளர்க்க முடியும் என்று மத்திய அரசு இப்போது கருதுகிறது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் 1994-95-லேயே இதை உணர்ந்து அப்போதே பெற்றோர்-ஆசிரியர் கழகங்களை உருவாக்கி, அதன் மூலம் கல்வி நிலையங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, பெண்கள் எழுத்தறிவு குறைவாக இருந்த 4 மாவட்டங்களில், எழுத்தறிவு இயக்கம் நடத்தி முழு வெற்றி அடைந்த 3 மாவட்டங்களிலும் 1994-95 முதல் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்ததும் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆகும்.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தை 10 ஆண்டுகளுக்குச் செயல்படுத்த, 2001-லிருந்து 2010 வரை பள்ளி இடைநிற்றலை ஒழித்து, 2010-க்குள் அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்ற திட்டத்தைச் செயல்படுத்த, புரட்சித் தலைவி அவர்கள் தற்போது நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். அதைவிட நம்முடைய திரு. புகழேந்தி அவர்கள் மீண்டும் மீண்டும் தலையிட்டு சில கருத்துக்களைச் சொன்னார்கள். drop-outs என்று சொல்கிறோமே—அதாவது இடைநிற்றலைப் பார்த்தீர்கள் என்றால்—அந்த விகிதாச்சாரத்தைப் பார்க்கும்போது, புரட்சித் தலைவி ஆட்சியிலேதான் 1995-96 வரையிலே கணிசமாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இடைநிற்றல் என்பதன் விகிதாச்சாரம் குறைந்து இருந்தாலும், அனைத்திந்திய அ.தி.மு.க. புரட்சித் தலைவி ஆட்சியில்தான் அது கணிசமாகக் குறைக்கப்பட்டதேயொழிய தி.மு.க. ஆட்சியில் அல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடித்துவிடட்டும்.

**திரு. இ. புகழேந்தி:** அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி அமைச்சர் அவர்கள் பதிலுரையை முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** 1991-92-ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பப் பள்ளிகளில் 6-லிருந்து 11 வயது வரையில் பார்த்தீர்கள் என்றால், இடைநிற்றல் 19.32 சதவீதம்; இது 1991-92-ல் உள்ள சதவீதம்; ஆனால், ஆட்சியை முடிக்கும்போது, 1995-96-ல் அது 15 சதவீதமாகக் குறைந்தது. அதேபோல 11-லிருந்து 14 வயது வரை பார்த்தீர்கள் என்றால், 41 சதவீதம் என்றிருந்த இடைநிற்றலை 32 சதவீதமாகக் குறைத்து இருக்கிறார்கள். 16 வயதிலிருந்து பார்த்தீர்கள் என்றால், 84 சதவீதத்திலிருந்து 81 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், குறிப்பாக 11-லிருந்து 14 வயது வரை பார்த்தீர்கள் என்றால், இந்த இடைநிற்றல் அதிகரித்து இருக்கிறது. 2001-ல் 35.59 சதவீதம் என்று மாறி இருக்கிறது. அதேபோல் 16-18 வயது வரை பார்த்தீர்கள் என்றால், 82 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. அதிலே குறையாமல் Increase ஆகி இருக்கிறது. அதனால் சொல்கிறேன், இதிலே அவர்கள் முக்கியத்துவம் தரவில்லை என்று. (குறுக்கீடு) மாநகராட்சி குறித்த புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அது தவறாக இருந்தால் மாற்றிக் கொள்ளலாம். அதிகாரிகள் கொடுத்ததை நீங்கள் தவறு என்று சொல்கிறீர்கள். அவர்கள் அப்படிக் கொடுத்து இருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. உசேன் அவர்கள் பேசும்போதுகூட விளையாட்டுத் துறைக்கு எல்லாம் தி.மு.க. ஆட்சியில் முக்கியத்துவம் கொடுத்தார்கள்; அதற்காகத் தனியாக ஒரு அமைச்சரைக்கூட உருவாக்கி வைத்தார்கள் என்று சொன்னார்கள். எந்தக் காலத்தில் உருவாக்கினார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். அவர் எத்தனை ஆண்டுகாலம் அந்த அமைச்சர் பொறுப்பு வகித்தார் என்பது அவர்களுக்குத் தெரியும். பேராசிரியர் அவர்கள்தான் 3 ஆண்டுகாலம் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தார்கள். கடைசி காலகட்டத்தில்தான், 3 மாதத்திற்கோ, 6 மாதத்திற்கோதான் திரு. பொங்கலூர் பழனிசாமி அவர்கள் அந்தத் துறைக்கு அமைச்சர் ஆனாரேயொழிய, அதோடு அவருக்கு வேறு சில துறைகளையும் சேர்த்துக் கொடுத்தார்கள். ஆகவே, ஏதோ அனைத்திந்திய அ.தி.மு.க. தான் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் எதுவும் தரவில்லை; ஏதோ தி.மு.க. ஆட்சிதான் கொடுத்தது என்று சொல்வது பொய்யான வாதம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.



மதுரையைச் சேர்ந்த சோலைமதியைப் பற்றி இன்னொரு கருத்துச் சொன்னார்கள். மதுரையைச் சேர்ந்த சோலைமதி என்ற பெண் தேசிய அளவில் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் champion-ஆக வந்தவர். ஆனால், அவருடைய குடும்பம் வறுமையில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அந்தச் செய்தி சென்றவுடன், செல்வி சோலைமதியின் பெயரில் 2 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக வங்கியில் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியை மாதந்தோறும் செலவுக்குப் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். மேலும் அவருடைய தந்தைக்கு மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் வேலைக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். இதற்கிடையில் சோலைமதிக்கு இரயில்வேயில் வேலை கிடைத்தது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டவுடன் செல்வி சோலைமதியின் பெயரில் வைப்பு நிதியாகச் செலுத்தப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபாயைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும் என்று தகவல் அனுப்பினார்கள். அவருக்கு இரயில்வேயில் வேலை கிடைத்துவிட்டது என்ற காரணத்தைக் காண்பித்து அப்படிச் சொல்லியிருந்தார்கள். இரயில்வே department-ல் வேலை கிடைத்துவிட்டது, அதனால் நீங்கள் பணத்தைக் கட்ட வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், மீண்டும் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அந்தப் பெண்ணின் பெயரிலே உள்ள வைப்பு நிதி இப்போது அவருக்கே பயன்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

1991 முதல் 1996 வரையில் சென்னை நகரில் உலகத் தரம் வாய்ந்த பல விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டன. அதைப்பற்றியெல்லாம்கூட முன்பு நான் பட்ஜெட் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். ஆனால் அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அவற்றைச் சரியாகப் பராமரிக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும்.

அதுமட்டுமல்லாமல், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பவள விழாவிற்கு நேரு ஸ்டேடியத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று முனைந்தார்கள். அப்போது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த முயற்சியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத்

தொடுத்தார்கள். ரூ. 3 கோடி செலவில் அமைக்கப்பட்ட செயற்கைதளம், லாரி, மற்ற வண்டிகள் வருவதனால் பாழ்பட்டேபோகும் வாய்ப்பு உள்ளது என வழக்கின்போது வாதிட்டார்கள். இதை ஏற்றுக் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் விளையாட்டுத் துறைக்குத் தொடர்பில்லாத எந்த நிகழ்ச்சிக்கும் நேரு விளையாட்டு அரங்கத்தைப் பயன்படுத்தக்கூடாது என உத்தரவிட்டது.

மேலும், தமிழக அரசு நடத்திவரும் சென்னை, விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதியில் மாணவர் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனார். அவரது குடும்பத்தாருக்கு ஒரு இலட்ச ரூபாயைக் கருணைத் தொகையாக வழங்கியது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது ஆட்சியில் இருந்த விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பு வகித்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் அதுபற்றிக் கண்டுகொள்ளவே இல்லை என்பதுதான் உண்மை. இதைச் சொல்வதற்குக் காரணம்; நான் ஏதோ தவறான புள்ளிவிவரம் தருவதுபோல நம்முடைய நண்பர்கள் சொல்கிறார்கள். அவ்வாறு கிடையாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இதுதான் உண்மை. புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு நலப் பணிகள், அதிலும் குறிப்பாக விளையாட்டுத் துறைக்குச் செய்யப்பட்டிருந்தன.

அனைவரும் எழுத்தறிவு பெற வேண்டும் என்று கருதி முழு எழுத்தறிவுத் திட்டத்தைக் கொண்டு வந்த பெருமையும் புரட்சித் தலைவர் அவர்களுக்கே உண்டு. இதனால் நான் முன்பு சொன்னதுபோல 1981-ல் 46.7 என்ற மொத்த அறிவு விகிதம் 1991-ல் 63 ஆக உயர்ந்ததற்குக் காரணம் நான் முன்பு சொல்லி விளக்கியதுபோல, பல்வேறு திட்டங்களையெல்லாம் கொண்டுவந்ததுதான். நல்லதொரு கல்வியைத் தமிழகத்தில் உருவாக்கி, அனைவரும் நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக வகுத்த திட்டம் எல்லாம் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களையும், புரட்சித் தலைவி அவர்களையும் சாரும் என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த முறை 5 ஆண்டுகாலமாக முதலமைச்சராக இருந்த ஆட்சிக் காலத்தில் இந்த மாநிலத்திற்கும் இம்மாநில மக்களுக்கும் நிம்மதியான வாழ்வை அளித்து வந்தார்கள். 1991 ஆம் ஆண்டு முதல், ஒவ்வோர் ஆண்டும் கல்வித் துறைக்கு



அதிக நிதியை ஒதுக்கிக்கொண்டு வந்திருப்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். கல்வி வளர்ச்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்டு, கல்விக்கென அனைத்துத் துறைகளிலும் சுமார் 6530 கோடி ரூபாயை இந்த நடப்பு ஆண்டில், 2002-2003 செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ளார்கள் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறை என்றால், Schools-க்கு மட்டுமல்ல, Colleges, Universities, Medical Education, Agricultural Education என்று எல்லாம் சேர்த்து நான் சொல்கிறேன். எல்லாம் கல்விதான். கல்வி என்று எடுத்துக்கொண்டால் எம்பிபிஎஸ்.-ம் கல்விதானே! அதற்குத் தனியாக துறை அமைச்சர் இருக்கலாம்; அதுமாதிரி Agricultural University, அதற்குத் தனி அமைச்சர் இருக்கலாம்; இப்படி Veterinary-யாக இருந்தாலும் Law-வாக இருந்தாலும், அதையெல்லாம் சேர்த்துக் கல்வி என்று எடுத்துப் பார்க்கும்போது 6530 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், ஏறக்குறைய இந்த பட்ஜெட்டில் 24, 25 சதவீதம் கல்வித் துறைக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறைக்கு இந்த ஆண்டு ஒட்டுமொத்தமாக Revenue expenditure-ல் எவ்வளவு தொகை என்று குறிப்பிடப்படவில்லை. அதற்கு மாறாக, உயர் கல்விக்கு இவ்வளவு, பள்ளிக் கல்விக்கு இவ்வளவு என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதேதவிர, ஒட்டுமொத்தத் தொகை குறிப்பிடப்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அதைப்பற்றி, பார்த்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதானே! (சிரிப்பு)

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அனைவருக்கும் கல்வி. அதுதான் இப்போது முக்கியம். இப்போது நாம் பேசுவது எல்லாம், கிராமப்புறங்களில் நல்ல பள்ளிக் கட்டடங்களைக் கட்ட வேண்டும், மாணவர்களுக்கு நல்ல குடிநீரைக் கொடுப்பதற்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டும். நல்ல ஆசிரியர்களை நியமிக்க வேண்டும், பிறகு அங்கு வேண்டிய கல்விச் சாதனங்கள் இருக்க வேண்டும். இதுதான் நம்முடைய மாண்புமிகு

உறுப்பினர்கள் அனைவருடைய கருத்து. அதைத்தான் அவர்களுடைய இயக்கமும் அரசிடமிருந்து எதிர்பார்க்கின்றது. அதற்கெல்லாம் ஏற்றவாறுதான், நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே இப்போது அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறோம். மத்திய அரசும் உதவுகிறது; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இதைக் காலப்போக்கில் பார்த்தீர்களென்றால் மீதம் வருகின்ற 50-க்கு 50 சதவீதம் என்ற ஒரு நிலைமையை மாநிலம் ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் இருக்கின்றோம். Concurrent list என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். நிதி அமைச்சர் சொன்னதைப்போல, எந்தெந்த வரி வருகிறதோ அதெல்லாம் அங்கேயே போய்விடுகிறது. எல்லாப் பணமும் அங்கேயே போய்விடுகிறது; நம்மிடம் எதுவும் கிடையாது. கல்வித் துறையை, இப்போது என்ன செய்தார்கள் என்றால், ஏறக்குறைய Concurrent list-ல் அங்கேயே வைத்துக்கொண்டு அவர்கள் திட்டம் கொண்டு வருவதாக—மத்திய அரசுதான் திட்டம் தருவதுபோல—ஒவ்வொன்றுக்கும் பணம் கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதுமாதிரி Elementary School-க்கும் அதுதான் நிலைமை, கல்லூரிக்கும் அப்படித்தான் இருக்கிறது. இப்படி எல்லாவற்றிற்கும் அந்தமாதிரி ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவேதான், சில நேரத்தில் நாம் மைய அரசின் உதவியை எதிர்பார்க்கின்ற நிலைமையில் இருக்கின்றோம். Tax-ம் அவர்களுக்குத்தான் போய் விடுகிறது. இப்போது நமக்குப் பணம் வேண்டும் அல்லவா? அதற்கு ஏதாவது ஒன்றைச் சொல்கிறார்கள்.

சில புரியாத வார்த்தைகளைச் சொல்லி அதற்கு ஒரு திட்டம் என்று கொண்டுவந்துவிடுகிறார்கள். 'சர்வ சிக்ஷா அபியான்' என்கிறார்கள். அப்படி ஒரு திட்டம் கொண்டு வருகிறார்கள். அந்த அந்த மொழியிலே சொல்லலாம். அனைவருக்கும் கல்வி என்று தமிழிலே கொண்டு வரலாம். அந்தத் திட்டம் என்று சொல்லலாம். கர்நாடகத்திலே அதற்குத் தகுந்தாற்போலச் சொல்லலாம். எப்படி முன்பு ஆங்கிலம் வேண்டாம் என்று ஒவ்வொரு கட்டத்திலும் சொன்னார்களோ, அப்படி இப்போது இந்தியை எப்படி எப்படிக் கொண்டுவர முடியுமோ அப்படிக் கொண்டு வருகிறார்கள். பணம் கேட்பதற்கு நாம் அந்த இந்தி வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். "சர்வ சிக்ஷா அபியான்" என்று சொன்னால்தான் பணம் கிடைக்கும் போல இருக்கிறது. அப்படி ஒரு அவல நிலை நமக்கு. அப்படிக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதை, அனைவருக்கும் கல்வி என்று சொல்லலாமே! ஆகவே புரட்சித் தலைவிதான் சொன்னார்கள். தமிழையும் இந்தியாவில் ஆட்சி மொழியாக்கினால்தான், அது முடியும். அதற்காகத்தான், தேர்தலிலே



ஒவ்வொரு கட்டத்திலும் நம்முடைய புரட்சித் தலைவி தமிழகத்திற்குச் செய்ய வேண்டுமென்று சொல்லி, இந்த முக்கியமான ஒரு தீர்மானதைக் கொண்டு வந்தார்கள். இது உங்களுக்குத் தெரியும்.

1991-96-ல் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த உடனேயே, முதன்-முதலாக கழகத்தினுடைய செயற் குழுவிலும், பொதுக் குழுவிலும், தமிழை இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றார்கள். முதன்-முதல், அண்ணாவினுடைய கொள்கையைத் தீர்மானமாகக் கொண்டு வந்தது புரட்சித் தலைவிதான். வேறு யாரும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.கூட இரண்டு வருடம் கழித்து, பின்னாலேதான் பொதுக் குழுவிலே தீர்மானத்தைப் போட்டார்கள். ஆனால் முதன்-முதலில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது—அனைத்து மொழிகளையும் அண்ணாவின் கொள்கைப்படி இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்க வேண்டுமென்று சொன்னது—புரட்சித் தலைவி அவர்கள்தான்.

அதுபோல, பிறகு எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்த உடனேயே மத்திய ஆட்சியிலே 1998-99-ல் அமைச்சராக ஆனோம். முதலில் அமைச்சரவையில் உட்கார வேண்டுமென்று அ.இ.அ.தி.மு.க. ஏக்கம் கொள்ளவில்லை; அதற்கு ஆர்வமும் காட்டவில்லை. அது அனைவருக்கும் தெரியும். ஆனால் அங்கே இருந்த பாரதிய ஜனதா கட்சியினர் வந்து, அம்மா அவர்களை நேரிடையாகச் சந்தித்து ஆட்சியிலே பங்கேற்க வேண்டுமென்று வலுக் கட்டாயமாகச் சொன்னதால்தான், சேர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போதும் எங்களுடைய சில கோட்பாடுகளை வைத்தோம். ஏதோ, ஆட்சிக்கு வரணும், ஆட்சிக்கு வரணும் என்று நாங்கள் மந்திரி பதவிக்காக இருந்தது கிடையாது. தமிழகத்தினுடைய நலனுக்காக, தமிழகத்தின் வளர்ச்சிக்காக, சில திட்டங்களைக் கொண்டு வர வேண்டும்; அதை National Agenda-வில் சேர்க்க வேண்டுமென்று சொன்னோம். அதில் தமிழை இந்தியாவினுடைய ஆட்சி மொழி ஆக்க வேண்டும்; மற்ற மொழிகளையும் ஆக்குங்கள்; 18 மொழிகளையும் ஆக்குங்கள்; தமிழையும் இந்தியாவினுடைய ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வைத்தவர் புரட்சித் தலைவி அவர்கள். பிறகு நாங்கள் ஆட்சியை விட்டு சில காலத்திலே வந்து விட்டோம் என்று சொல்லலாம். வெளியிலே வந்தோம். வருவதற்குப் பலவித காரணங்களை எதிர்க்கட்சி நண்பர்கள் சொன்னார்கள். ஆனால், உண்மையிலேயே நேற்று அமைச்சர் அவர்கள் சொன்னது போல, நமது காவிரி நீர்ப் பிரச்சினை ஒன்று. தமிழை ஆட்சி மொழி ஆக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது

அதையும் செய்யாதது மற்றொன்று. இதுபோன்ற காரணங்களால்தான் வெளியே வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, டெல்லி மாநகரிலே தமிழ் உள்பட 18 மொழிகளையும் ஆட்சி மொழி ஆக்க வேண்டுமென்று சொல்லி மத்தியிலே இருந்த அமரர் பாலயோகி அவர்களை, கூட்டத்தைத் துவக்கி வைக்கச் சொல்லி, அகில இந்திய அளவில் இருக்கக்கூடிய எல்லா அரசியல் கட்சித் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்களை எல்லாம் அழைத்து, தமிழ், ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். டாக்டர் அய்யா அவர்கள் அதைச் செய்தார்கள். அப்போது மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள், டாக்டர் அய்யா அவர்களை அழைத்துப் பேசி, அகில இந்திய அளவிலே அனைத்து மொழி பேசக்கூடியவர்களை எல்லாம் உள்ளடக்கிய ஒரு குழுவைப் போட வேண்டும் என்று சொன்னார்கள். டாக்டர் அய்யா அவர்களும் அந்தக் குழுவை எல்லாம் போட்டார்கள். அதற்குள் அரசியல் சூழ்நிலை காரணமாக இப்படி நின்று கொண்டு இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புகழேந்தி கேட்டுவிடட்டும்.

பிற்பகல் 1-45

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், பல அரசியல்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னாலும்கூட, நான் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் முதலிலே சொன்னது, Corporation School-இல், 1995-96 இல் 336 பள்ளிகள், 1 இலட்சத்து 35 ஆயிரம் மாணவர்கள். ஆனால், 2000-2001 இல் 1 இலட்சத்து 54 ஆயிரம் மாணவர்கள், 354 பள்ளிகள்....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** திரு. புகழேந்தி, நீங்கள் சொல்வதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, இதே கருத்தைத்தான் முதலில் சொன்னீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் மேயர் அவர்கள் சிறந்த முறையிலே கல்வித் தரத்தை அங்கே வைத்திருந்தார். கல்வியின் நிலை உயர்ந்திருந்தது; விளையாட்டுத் துறைக்கென்று மந்திரி இருந்தது கழக ஆட்சியில்; இப்போது ஏன் இல்லை என்பதுதான் அண்ணன் திரு. உசேன் அவர்களுடைய கேள்வியே தவிர, வேறு அல்ல. அதற்கு பதில் சொல்ல வேண்டும். அண்ணா அவர்கள் தலைமையில், தமிழ் மொழியை ஆட்சி மொழியாக மத்திய அரசு, கொண்டு வரவேண்டும் என்ற தீர்மானத்தைப் போட்டதே, திராவிட முன்னேற்றக் கழகம்தான். முதன்முதலாகத் தீர்மானம் போட்டதே தி.மு.க. தான்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டும் என்பது அண்ணாவின் கொள்கை. அதை யாரும் மறுக்கவில்லை. அதைத்தான் நாங்களும் சொல்கின்றோம். ஆனால், அந்த மொழியை ஆட்சிமொழி ஆக்கவேண்டும் என்பதற்கான ஒரு வாய்ப்புக் கிடைத்தபோது, புரட்சித் தலைவி அவர்கள், அதை National Agenda-இல் சேர்த்து, அதைச் செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். அதற்காகத்தான் குழு ஏற்பாடு செய்யப்பட்டது. தி.மு.க. என்ன செய்திருக்கிறது இப்போது அதுபற்றி ஏதாவது கண்டு கொள்கிறார்களா? National Agenda for governance என்று ஏற்படுத்தப்பட்டது. ஆகவேதான், நீங்கள் அதைப்பற்றிக் கவலைகொள்ளாமல் ஆட்சியில் இருந்தால் போதும் என்று இருந்து கொண்டிருக்கிறீர்களேயொழிய, வேறு ஒன்றும் கிடையாது. ஆனால், நான் சொல்கிறேன்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பி.ஜே.பி. கட்சியினர் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள், ஏதோ பாரதிய ஜனதா கட்சியின் வாஜ்பாய் அரசு, தமிழுக்கு விரோதியைப் போல ஒரு தோற்றத்தை உண்டாக்குகிறார்கள். தமிழ் மொழியை திருக்குறளை ஐ.நா. சபையிலே சொல்லியவர் உலக மனிதப் புனிதன் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள்தான். மேலும் தமிழை உயர்தனிச் செம்மொழியாக ஆக்க வேண்டுமென்ற—18 மொழிகளும் தேசிய மொழி—

முனைப்பிலே, மத்திய அரசு செயல்பட்டுக் கொண்டிருப்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்...

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வாஜ்பாய், திருக்குறளைத் தமிழில் சொன்னாரா என்பதை நான் மீண்டும் உறுதி செய்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்கள் ஐ.நா. சபையிலே தமிழிலேதான் பேசினார் என்பதை உறுதியாகச் சொல்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அதுமட்டுமல்ல, உயர்தனிச் செம்மொழி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-க்குள் அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உறுதி பூண்டுள்ளார்கள். அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளைத் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களும் அடைய, 4118 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, 10 ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும். அனைவருக்கும் கல்வித் திட்ட அடிப்படையில் 2003 ஆம் ஆண்டுக்குள் பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல், 2007ஆம் ஆண்டுக்குள் குழந்தைகளுக்கு 5 ஆண்டுக் கல்வி அளித்தல், 2010-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் 8 ஆண்டுக் கல்வி அளித்தல், 2010-க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே ஒழித்தல் ஆகிய இத்தகைய சீரிய எண்ணங்களுடன் புரட்சித் தலைவி அவர்கள், சுமார் 376 கோடி ரூபாயை 2002-2003-ல் செலவிட, பட்ஜெட்டிலே இடம் தந்திருக்கிறார்கள்.

அதேபோல, மெட்ரிகுலேஷன் பள்ளிகள். இந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பற்றி எல்லோருக்கும் தெரியும். இவை எப்படி எல்லாம் தமிழ்நாட்டிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன; அதிலே என்ன குறைபாடுகள் இருக்கின்றன; இவற்றை நடத்துபவர்கள் எந்த அளவுக்குப்



பணத்தைப் பறிக்கிறார்கள்; எப்படிப்பட்ட ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள்; அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார்கள் என்ற பட்டியல் எல்லாம் அனைவருக்கும் தெரியும். ஆகவே, இவற்றையெல்லாம் நெறிப்படுத்த வேண்டுமென்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். அதற்காகத்தான் தனியாக ஓர் இயக்குநரை அமர்த்தியிருக்கின்றோம். வேறொன்றும் கிடையாது. அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே, பல இடங்களுக்குச் சென்று அந்தக் கல்வி நிலையங்களை எல்லாம் பார்த்து, அவை முறையாகச் செயல்படுகின்றனவா என்று பார்த்து, குறைபாடுகள் இருந்தால் அதற்குண்டான அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கும், நல்ல பள்ளிகளுக்கு அங்கீகாரம் தருவதற்கும் வேண்டிய நடவடிக்கை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, வாழ்க்கைத் தொழில் கல்வி. நாம் தொழில் கல்வி வேண்டுமென்று சொல்கின்றோம். ஆகவே, தொழில் கல்வியை வளர்ப்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், வருகின்ற கல்வி ஆண்டில் 1 கோடி ரூபாய், அதற்காகத் தனியாக ஒதுக்கி இருக்கின்றார்கள். மாவட்ட அளவிலே ஒவ்வொரு பகுதியிலும் மையம் ஏற்படுத்தப் போகிறோம்.

பிறகு, நம்முடைய குறிப்பிலே ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் பள்ளிகள் இல்லாத நிலையிருப்பின் அப்பகுதிகளிலும் மக்கள் தொகை 300-க்கு மேல் உள்ள சிற்றூர்களிலும், தொடக்கப் பள்ளிகள் அமைப்பதை நம்முடைய அரசினுடைய கொள்கையாகச் சொல்லியிருக்கிறோம். அதன் அடிப்படையில் இந்த ஆண்டே 2001-2002-ல் பார்த்தீர்கள் என்றால், 452 தொடக்கப் பள்ளிகள் தொடங்க உத்தரவும் தரப்பட்டிருக்கின்றது. அதோடு, 2002-2003-ல் 187 புதிய பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் தொடங்க, நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல, 2002-2003-ல் 1243 ஆரம்பப் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-50

ஆசிரியர்கள் நியமனம், உங்களுக்கே தெரியும். பல பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத குறை இருந்து கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில், மலைவாழ் பகுதிகளில் உள்ள பள்ளிகளில்

பார்த்தீர்கள் என்றால், ஆசிரியர்கள் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் போக்குவதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி கொண்டு வருகிறது.

போனமுறைகூட அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 1991-96-க்கு இடைப்பட்ட காலத்தில், 10 ஆயிரம் ஆசிரியர்கள் நிரப்பப்பட்டனர் என்று சொன்னார்கள். பிறகு, தி.மு.க. ஆட்சியில் 50 ஆயிரம் ஆசிரியர்களை நிரப்பினார்கள் என்று சொன்னார்கள். 50 ஆயிரம் ஆசிரியர்கள் நிரப்பப்பட்டும், இன்றும் ஆசிரியர்கள் இல்லாத நிலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி உணர்ந்திருக்கிறது. அதற்கேற்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். இந்த ஆண்டே பார்த்தீர்கள் என்றால், பொறுப்பேற்றவுடனேயே 10 மாத காலத்திற்குள், 2001-2002-ல் —இந்த— ஆண்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் 3651 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் B.T. ஆசிரியர்கள் 773, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 611, இடைநிலை ஆசிரியர்கள் 1326, சிறப்பு ஆசிரியர்கள் 320; ஆக 3030 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல, மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் ஆசிரியர் பயிற்சியிலே 403 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆக இந்த 10 மாதத்திற்குள், இந்த ஆட்சி பொறுப்பேற்றபின், புரட்சித் தலைவி ஆட்சியானது பொறுப்பேற்றபின், 2001-2002-ல் 7084 ஆசிரியர்கள் இதுவரையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு, மீண்டும் ஒரு தேர்வினை இந்த மாதத்திலேயே நடத்தவிருக்கிறோம். இதன் மூலமாக இன்னும் சுமார் 4000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டுக்குள் பார்த்தீர்கள் என்றால், ஏறக்குறைய 10 ஆயிரம் ஆசிரியர்கள் ஓராண்டுக்குள் நியமிக்கப்பட்டு இருக்கிற சூழ்நிலையை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியானது, புரட்சித் தலைவி ஆட்சியானது உருவாக்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 ஆயிரம் ஆசிரியர்கள் இந்த ஆண்டு படிப்படியாக நியமிக்கப்பட்டதாகச் சொன்னதற்கு, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆனால், ஓராண்டில்



மட்டும் எத்தனை ஆசிரியர்கள் ஓய்வு பெறுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். அதோடு மட்டுமல்ல; ஏற்கெனவே பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் மூலமாக நியமிக்கப்பட்டவர்களுக்குத் தொகுப்பு ஊதியம் வழங்கப்படும் என்று அமைச்சரவர்கள் பல தடவை இந்த அவையிலேயே பதிய வைத்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக இதுவரையில் எந்த அறிவிப்பும் வரவில்லை. எனக்கு ஞாபகம் இருக்கிறது, 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய திருத்துறைப்பூண்டியில், முத்துப்பேட்டையில் ஒரே பள்ளியில், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 12 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக, இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தால் அவர்களுக்கெல்லாம் ஊதியம் வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. இதுசம்பந்தமாகவும் அமைச்சரவர்கள் விளக்கினால், நிச்சயமாகப் பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், திரு. பழனிசாமிக்கு அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சமுதாயத்தினுடைய அடிப்படைப் பிரச்சினை என்கின்ற காரணத்தினால், இதற்கு அமைச்சரவர்கள் உரிய விளக்கத்தினைத் தரவேண்டும். கடந்த காலத்திலே வேலைவாய்ப்பிலே தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இவர்களுக்கு நிறைய வேலைகளுக்கான பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்கிற வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அதிலும் ஆதிதிராவிடர்களுக்கு ஏறக்குறைய 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட வேலைகளும், மிகவும் பின்தங்கியவர்களுக்கு 5 ஆயிரத்திற்கு மேலான வேலைகளும் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்கிற குறிப்பு இருந்தது. இதில் கல்வித் துறையிலும், பல்கலைக்கழகங்களிலும், உயர் கல்வியிலும் பெரும்பாலான இடங்கள் மிகவும் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கப்படவில்லை. அதேபோல ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்ற நிலை இருந்தது. இப்போது நமது அமைச்சர் அவர்கள், பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு மூலமாக நிரப்புகிறார்கள். அப்படி நிரப்புகின்றபோது அந்த உரிய இடங்கள் மட்டும்தான் சுழற்சி

முறையிலே, அந்த ஒதுக்கீட்டு முறையிலே, ஒதுக்கப்படுகின்ற ஆதிதிராவிடர்களுக்கும் மிகவும் பின்தங்கியவர்களுக்கும். இந்த பின்னடைவை நீக்கி வேலைவாய்ப்பினை ஒதுக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது பல பள்ளிகளில் ஆசிரியர்களை நிரப்புவதற்கு அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும், பல பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத நிலைமை இருக்கும்போது contract basis-ல் நியமிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும் கேட்டார்கள். இந்தக் கல்வியாண்டில் அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு முயற்சிகளை எடுத்த நேரத்தில், இந்தத் தேர்வு மூலமாக பலபேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அதோடு, குறிப்பாக தென்மாவட்டங்களில் அதிகமாக surplus teachers இருக்கிறார்கள். சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள், தென் மாவட்டங்களில் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் எங்கெங்கே ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறதோ, அந்த அந்தப் பகுதிகளுக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் ஆசிரியர்கள் சிலர் சந்தித்து, இந்த இடைநிலையில் மாற்றுவதில் அவர்களுக்கு சில பிரச்சினைகள் இருப்பதாகச் சொன்னதன் காரணமாக, உடனடியாக அந்த இடத்தை நிரப்பமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இதெல்லாம் முடிந்த பிறகுதான் இந்த contract basis ஆசிரியர்களைப் போடுவதைப் பற்றிப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாகச் செய்வது பற்றிச் சில நடவடிக்கைகள் எடுப்பதற்கு நாங்கள் அறிவித்திருக்கிறோம்.

இரண்டாவது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் பேசும்போது பின்தங்கியோர், மிகவும் பின்தங்கியோருக்கான இடங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறதென்ற குறையைச் சொன்னார்கள். அதை உணர்ந்துதான் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, இடைநிலை ஆசிரியர்கள் பிரச்சினை இருந்தது. எங்களுடைய தருமபுரி போன்ற மாவட்டங்களுக்கு ஆசிரியர்களே கிடைப்பதில்லை. எங்களுக்கு அது ஒரு பிரச்சினை. Employment Exchange-ல் திருநெல்வேலியிலே



மட்...கின்றார்கள். கன்னியாகுமரியிலே இருக்கின்றார்கள். இந்த ஆண்டு அ... backlog-ஐ fill up பண்ணுவதற்கு இந்த இடத்திற்கு மீண்டும் ஒரு ஏற்...பரத்தைக் கொடுத்து அவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தி, நிய...ர மூலமாக நிரப்பிவிட்டு, பிறகு அந்த மாவட்டங்களில் இல்லாத அ...ங்களில், அந்த backlog-ஐ நிரப்புவதற்காக, எங்கு உபரியாக ...க்கிறதோ அந்த மாவட்டங்களிலேயிருந்து ஆசிரியர்களைக் வர...ண்டு வந்திருக்கிறோம். அந்த நடவடிக்கையும் ...க்கப்பட்டிருக்கிறது.

...கல்லூரிகளைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அதுபற்றி நாங்கள் ...ள்ளிவிவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். அது பற்றிக் ...னித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவையிலே ...ால்ல விரும்புகின்றேன். (குறுக்கீடு).

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களில் 10 ஆயிரத்திற்கு அதிகமான ஆசிரியர்கள் surplus என்று சொன்னார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்திலே பல பள்ளிக்கூடங்களிலே ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்கான ஆசிரியர்களுடைய பணியிடங்கள் இப்போது காலியாக இருந்துகொண்டு இருக்கின்றன. அதில் எப்படி இந்த முரண்பாடு ஏற்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முரண்பாடு எப்படி வருகிறது என்றால், சில பள்ளிகளிலே மாணவர்கள் சேர்க்கை குறைந்திருக்கிறது. சில பள்ளிகளிலே மாணவர்கள் சேர்க்கை அதிகரித்தும் இருக்கிறது. இந்த மாதிரி குறைந்திருக்கும் அந்தக் கணக்கீட்டை எடுத்துப் பார்க்கும்போது தென்மாவட்டங்களிலே அதிகமாக நான் சொன்னதுபோல் இருக்கிறது. ஆனால் சில நேரங்களில் உயர்ந்திருக்கும்போது அந்த இடத்தில் நிரப்பப்படாமல் இருந்திருக்கும். அதைத்தான் நீங்கள் பார்த்துச் சொல்கிறீர்கள். முரண்பாடு என்பது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. அந்த முரண்பாட்டைப் போக்குவதற்காகத்தான் இப்போது புள்ளிவிவரத்தைச் சேகரித்து வருகிறோம். இப்போது சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை இடையிலே மாற்றம் செய்தால் தொல்லைகள் ஏற்படும். திரும்பவும் உங்களிடம் வந்து நிற்பார்கள். Transfer போட்டால் உடனே வந்து உங்களிடம் நிற்பார்கள். அவற்றையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் நிறுத்தி வைத்திருக்கிறோம். அதோடு தேர்வு முறையிலே இப்போது

ஆசிரியர்களை எல்லாம் தேர்ந்தெடுக்கிறோம். B.E
படித்தவர்களையெல்லாம் தேர்ந்தெடுக்கிறோம். அதி
பார்த்தீர்களென்றால், நேர்மையான முறையிலே நடைபெறுகிற
முன்பெல்லாம் Interview-க்காக mark வைத்திருந்தோம். அதையு
எடுத்துவிட்டோம். Interview mark இனிமேல் கிடையாது. Written-
எழுதி, அதில் என்ன mark வாங்கியிருக்கிறார்களோ அதனை
அடிப்படையாக வைத்து Employment Exchange seniority-க்கு
முக்கியத்துவம் கொடுத்து, அதற்கும் மதிப்பெண்ணைப் போட்டு, அதி
வெற்றிபெற்று வருகிறவர்களை 1:1 என்ற முறையிலேதான் records-
எல்லாம் verify செய்து ஆசிரியர்களை நியமிக்கிறோம். நியமன
செய்யும்பொழுதுகூடப் பார்த்தீர்களென்றால், இவர்களை இங்கு
செல்லுங்கள் அங்கு செல்லுங்கள் என்று நிர்ப்பந்தம் செய்வது கிடையாது
ஆயிரம் இடம் காலியாக இருக்கிறது என்றால், அவற்றை மாவட்ட
வாரியாக இந்த இந்த இடத்திலே ஆசிரியர்களுக்கான இடம் காலியாக
இருக்கிறது என்று பட்டியல் போட்டுவிடுவோம். அந்தப் பட்டியல் போட்டவுடனேயே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் first rank யார் வந்திருக்கிறாரோ, யார் முதல் மதிப்பெண் பெற்றிருக்கிறாரோ, அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். முன்பு இப்படிக் கிடையாது. இந்த இடத்திற்குப் போக வேண்டும் என்று orders போடுவார்கள். இப்போது அதுவும் transparent-ஆக வந்திருக்கிறது. அதில் யாரும் தலையிட முடியாது. எந்த அதிகாரியும் ஒன்றும் செய்ய முடியாது. First rank-ல் இருக்கிறவர்கள், ஊட்டியிலிருக்கிறவர்கள், சென்னைக்கு வரவேண்டும் என்றால் அவர் சென்னைக்கு வரலாம். சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்குப் போக வேண்டும் என்றால், நாகர்கோவிலுக்குப் போகலாம் அவர். ஆகவே, இத்தகைய அளவிற்கு ஒரு நேர்மையான transparent-ஆன முறையை நீங்கள் எங்குமே பார்த்திருக்க முடியாது. இதைப் புரட்சித் தலைவி அரசுதான் இப்போது செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). Posting, selection-இலே யாரும் ஒன்றும் செய்ய முடியாது. யாரும் தலையிட முடியாது. Posting போட்டு யார் எங்கு போக வேண்டுமோ, அதற்கும் அவர்களுக்கு அரசால் உரிமை தந்திருக்கிறோம். அதேமாதிரிதான் transfer-க்கு counselling என்ற ஒரு புதிய முறையை இந்தியாவிலேயே புரட்சித் தலைவியினுடைய மனதிலே உதித்த, அவர் கருத்துக்கு ஏற்ப, புரட்சித் தலைவி அவர்களுடைய........ (குறுக்கீடு) இருங்கள். இருங்கள். அந்த counselling முறையிலே ஆசிரியர்களை transfer பண்ணியிருக்கிறோம். முன்பெல்லாம் சொல்வார்கள். (குறுக்கீடு) Counselling method-ஐக் கொண்டு வந்து...



200 பிற்பகல் 2-00

**திரு. வை. சிவபுண்ணியம்:** எவ்வளவு நேரம் நீங்கள் அவையை
த்திக் கொண்டிருப்பீர்கள்; எப்போது முடிப்பீர்கள் என்று கேட்க
ரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** இல்லை, இல்லை.
டித்துவிடுகிறேன். இருங்கள். சீக்கிரம் முடிக்க வேண்டும் என்றால்
டித்துவிடுகிறேன். நீங்கள் விளக்கம் கேட்கும்போது பதில் சொல்ல
வண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் 5 மணித் துளியில் என்னால்
முடித்துவிட முடியும். என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே
ஆசிரியர்களுடைய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், என்ன பசி அதிகமாக எடுக்கின்றதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஆசிரியர்களுடைய அந்த மாற்றத்திலே ஒரு புதுமையைக் கொண்டு வந்து மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் இதைப் பாராட்டி, எப்படிச் செயல்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக அந்த அதிகாரிகள் வந்து நம்முடைய அதிகாரிகளோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த transfer-லேயே நாம் ஒரு புதுமைச் செய்திருக்கிறோம். முன்பெல்லாம் பார்த்தீர்கள் என்றால், இந்த transfer-க்கு வரும் கூட்டத்தால் lodge எல்லாம் நிறைந்திருக்கும். அவர்களை அழைத்து வந்து அலைவார்கள். அந்த மாதிரி நிலைமை இப்போது கிடையாது. யாரும் வரமாட்டார்கள். ஒளிவுமறைவின்றி transfer பண்ணியிருக்கிறோம். அதிலும் சிலருக்கு இடர்பாடுகள் இருந்தால் அதைப் போக்குவதற்காக சில கருத்துக்களை இந்த ஆசிரியர் சங்கங்கள் மூலமாகவும், மற்றவர்களுடனும் பேசியிருக்கிறோம். ஏதாவது மாறுதல் வேண்டும் என்றால், அதைப் பரிசீலனை செய்து அதற்கேற்றாற்போல், ஆசிரியர் நலனுக்கு ஏற்றாற்போல் இந்த மாறுதல் முறை இருக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. ஆகவே இந்த அரசானது எதிலும் நேர்மையாகவும், நியாயமாகவும் transparent என்ற முறையிலே செயல்படுகிறது. இந்த முறைகளை எல்லாம் ஆசிரியர்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகின்றேன்.

அடுத்தது, பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவிகள் பற்றிச் சொல்லாம். (குறுக்கீடு) பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவிகள் பிரச்சினை ஒரு பெரிய செய்தியாக இருக்கிறது.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர்களு
training கிடைத்தது என்பதற்காகவே சுப்ரீம் கோர்ட், ம
கோர்ட்டுகளுடைய தீர்ப்பை வைத்துக்கொண்டு செயல்படு
முடியாமல், கமிட்டி எல்லாம் போட்டு பல ஆண்டுகளாகக் கால
தாழ்த்திக் கொண்டிருந்தார்கள். ஏதோ அண்ணா தி.மு.க. ஆட்சியி
வந்துவிட்டார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அந்த ஆசிரிய
பயிற்சி மாணவர்கள் பழிவாங்கப்பட்டார்கள்; ஏறக்குறைய 25,000 பே
பிறகு பார்த்தீர்கள் என்றால் அவர்களும் ஒரு திட்டத்தைக் கொண்
வந்தார்கள் 40% கொடுப்பதாக. அந்த training institute-லே அரசாங்க
சம்பந்தப்பட்டதிலே ஒரு ஆயிரம் பேருக்குத்தான் கிடைக்கும். 25 ஆயிர
பாதிக்கப்பட்ட அந்த மாணவர்களுக்கு நீங்கள் செயல்படுத்த வேண்டு
என்றால், 1000 என்ற அளவில் செயல்படுத்த வேண்டும் என்றால்
அதற்கு 25 வருடம் ஆகும்; 25 வருடம் என்றால் என்ன ஆகும்
அப்போது அந்த மாணவனுக்கு வயது என்ன ஆகும்? ஆனால் புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அனைவருக்கும் இந்தப் பயிற்சியைத் தந்து 2 ஆண்டு காலத்திற்குள் முடித்துவிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தவகையில்தான், இன்றுகூடக் காலையிலே ஒரு நிகழ்ச்சியிலே பங்கேற்று, புரட்சித் தலைவி அவர்கள், பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு இன்று வகுப்புகளைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது உண்மை. (குறுக்கீடு) சொல்கிறேன் இருங்கள், சொல்கிறேன் இருங்கள். இதில் என்ன இன்னொரு வேடிக்கை பார்த்தீர்கள் என்றால், எங்களிடம் பல பேர் வருவார்கள். வரும்போது பார்த்தீர்கள் என்றால்---குறிப்பாக பெண்கள் அந்தந்த இடத்திலே கிடைக்கவில்லை என்று சொல்வதற்கு—சிலர் குறைபாட்டோடு வருகிறார்கள். என்னவென்றால், பாதிக்கப்பட்ட அந்த ஆசிரியர் பயிற்சி மாணவர்கள், அந்த 5, 6 மாவட்டத்தில்தான் அதிகமாக இருக்கிறார்கள். அதாவது தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இந்தப் பகுதிகளில்தான் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நாம் எங்கே training போடுகிறோம் என்றால், N.C.T.E.-லே Permission வாங்கி இருப்பது 36. DIET-லும் எல்லாவற்றிலும் நடத்த வேண்டியிருக்கிறது. 29 DIET, அரசாங்கத்தினுடையது, 7 இன்ஸ்டிடியூஷன். மொத்தம் 36, கோத்தாரி இன்ஸ்டிடியூட் உட்பட. பாதிக்கப்பட்ட இவர்கள் எல்லோரையும் ஒரே இடத்திலே போட முடியாது. அது ஒரு பிரச்சினை. எல்லோருக்கும் வேலூர் என்றால் வேலூரிலே கொடுத்துவிட முடியாது.



அந்தப் பகுதியிலே, ராணிப்பேட்டையிலே கொடுக்க முடியாது. அவர்கள் சில நேரம் நாகர்கோவிலுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. கரூர் மாணவர்கள் மாயனூருக்கும் போக வேண்டியிருக்கிறது. இப்படியெல்லாம் நிலைமை இருக்கிறது.

*பிற்பகல் 2-05*

அப்படி வரும்போது பார்த்தீர்கள் என்றால், எல்லோரும் வந்து பேசும்போது மாமியாரும் வருகிறார்கள், மருமகளும் வருகிறார்கள். வரும்போது இரண்டு குழந்தைகளோடு வருகிறார்கள். இந்தப் பக்கம் மாமியார் ஒரு குழந்தை வைத்திருக்கிறார்; மருமகள் ஒரு குழந்தை வைத்துக்கொண்டு இருக்கிறார். பாருங்கள் இரண்டு குழந்தை இருக்கிறது, நான் திருப்பத்தூரில் இருக்கிறேன், என்னை கிருஷ்ணகிரியில் போடுங்கள், என்னைப்போய் நீங்கள் நாகர்கோவிலில் போட்டால் நான் எப்படிப்போக முடியும் என்கிறார்கள். உண்மைதான், சிலருடைய நிலைமை கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால், வருகிறவர்கள் எல்லோரும் இதைத்தான் சொல்கிறார்கள். எல்லோருக்கும் இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. ஏனென்றால், குடும்பக் கட்டுப்பாடு இதில் இருக்கிறது என்று தெரிகிறது. இவ்வளவு ஆசிரியர்கள், இத்தனைபேர் பாதிக்கப்பட்டும், இரண்டு குழந்தைகளுக்கு மேல் யாருக்கும் இல்லை. எல்லோருக்கும் இரண்டு குழந்தைகள் என்றுதான் சொல்கிறார்கள். இப்படி ஒரு நிலைமை. தி.மு.க. ஆட்சி ஆயிரம் என்று போட்டிருந்தால், 25 வருடம் என்றால் பேரன் பிள்ளையோடு அடுத்து வரவேண்டியிருக்கும். இப்போது கைக் குழந்தையோடு வருகிறார்கள். இவர்களை விட்டிருந்தால் இன்னும் 25 வருடம் ஆகி நிலைமை என்னவாகும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படியொரு நிலைமை, ஆசிரியர்களுடைய பயிற்சி நிலைமை. அப்படியொரு பரிதாப நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு 6, 7, 8 ஆண்டு காலமாக தொல்லைக்குட்பட்ட அந் நிலைமையைப் புரட்சித் தலைவி அறவே இப்போது ஒழித்திருக்கிறர்கள். போட்டவர்கள் யாரையும் தள்ளிவிட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வீர்கள்? உறுப்பினர்கள் பலபேர் பரிதாபமாகப் பார்க்கிறார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடித்துவிடட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அனைத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கும் கொடுக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். 45 சதவீதம் மார்க் இருந்தால் மட்டுமேதான் அவர்கள் சேர்க்கப்படுகிறார்களேயொழிய, இன்னும் பல பேர் 45 சதவீத மார்க்குக்குக் கீழே இருக்கிறவர்கள் இன்னும் பாதிக்கப்பட்டேதான் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அமைச்சர் வாய்ப்பு அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எதைச் செய்தாலும் ஓரளவுக்கு வரைமுறைக்குட்பட்டுத்தான் செயல்படுத்த முடியும். முன்பு 50 மார்க் என்று இருந்தது. N.C.T.E.-யிடம் பேசி அதை 45 ஆகக் குறைத்திருக்கிறோம். அகில இந்திய அளவிற்கு அந்த மார்க் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அதைச் செய்திருக்கிறோம். இப்போது 40-ம், 35-ம் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் குறைந்துதான் இருக்கிறார்கள். சிலர் பிளஸ் 2 படிக்காதவர்களும் இருக்கிறார்கள். அப்போது 10-வது சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் இருக்கிறார்கள். பலபேர் பாதிக்கப்பட்டவர்கள் என்றால், யார் யாருக்குத் தகுதி இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் செய்துகொண்டிருக்கிறோம். மற்றவர்களுக்குத் தகுதி மாற்றம் செய்தால் அவர்களுக்கும் செய்துதரப்படும். ஆகவே, அதற்கு வேண்டிய முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. அதற்காக விட்டுவிடவில்லை. 45-ஐ 40 பண்ணினால், அதற்கு என்ன வழிமுறைகள் இருக்கிறதோ, சட்டத்திலே அதற்கு ஏற்றாற்போல் என்னென்ன செய்ய முடியுமோ, அதைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். யாரையும் விட்டுவிடமாட்டோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 25 ஆயிரம் பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாணவ மாணவியர்களை 45 சதவீதம் மதிப்பெண், இட ஒதுக்கீட்டு முறை, 10 ஆம் வகுப்பு முடித்துவிட்டு பயிற்சிக்குச் சென்றவர்கள், நேரடியாக



இரண்டாம் ஆண்டிலே சேர்ந்து பயிற்சி பெற்றவர்கள் என்று பல்வேறு நிபந்தனைகளை வைத்து இப்போது நிராகரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, admission நேரத்திலே, கடந்த ஆட்சிக் காலத்திலே மாணவர்கள் சேர்க்கை நேரத்திலே, இது பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். அதையெல்லாம் விட்டு, இப்போது சொல்வது என்பது மிகக் கடுமையான சூழ்நிலை. இலட்சக்கணக்கிலே செலவழித்து இரண்டு ஆண்டு காலம் படித்து இப்போது பாதிப்பு என்று சொன்னால், இவ்வளவு செய்த அரசாங்கம், மேற்கொண்டும் அவர்களுக்கு ஏன் வாய்ப்பு அளிக்கக் கூடாது? வாய்ப்பு அளித்து அனைவரையும் சேர்த்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆண்டு காலம் என்று முதலில் குறிப்பு வந்தது. குறிப்பு வந்த பிறகு, இரண்டு மூன்று ஆண்டு காலம் தி.மு.க. ஆட்சியிலும் ஆயிரம், ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்; நடந்து கொண்டிருக்கிறது. பிறகு, அண்ணா தி.மு.க., நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகு, 15,670 பேர் என்பது எப்படி வந்தது என்றால் application call for செய்தோம், இவ்வளவுதான் application முதலில் வந்தது. அந்த application போட்டவர்களுக்கு எல்லாம் நாங்கள் permission வந்துவிட்டோம். அதற்குப் பிறகு இப்போது சில பேர் வந்து எங்கள் பெயர் விடுபட்டுவிட்டது என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முதலில் போட்டிருந்தால் அதைச் செய்திருப்போம். ஆகவே, இதிலே அவர்களுக்கெல்லாம் கொடுக்கக்கூடாது என்று இல்லை. பிறகு தேர்ந்தெடுக்கும்போது சில வழிமுறைகளை வைத்துக்கொண்டோம். இரண்டு ஆண்டு படித்துத் தேர்வு எழுதியிருப்பார்கள்; தேர்வு முடிவானது நிறுத்தப்பட்டிருக்கும்; அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள். ஏனென்றால் நம்பர் நம்மிடம் இருக்கிறது. பிறகு முதல் ஆண்டு மட்டும் தேர்வு எழுதிப் படித்திருந்தால் அந்த நம்பரும் நம்மிடம் இருக்கிறது; ஏதாவது ஒரு ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடு) இருங்கள். பிறகு இரண்டு ஆண்டும் தேர்வு எழுதாதவர்கள் சிலருக்கு அப்போது புத்துயிர்ப் பயிற்சி தந்தார்கள். அதற்குச் சென்றவர்கள் பற்றி நம்மிடம் நம்பர் இருக்கிறது. இந்த மூன்றும் இல்லாதது; நான்காவது என்ன என்று புரியவில்லை நமக்கு. (குறுக்கீடு) இருங்கள். அப்போது வந்து சேர்ந்தால்கூட அப்போது பாதிக்கப்பட்டிருந்தால் அரசு பள்ளிகளிலே பயிற்சி தந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இருந்தது. அப்போது அவர்கள் சேர்ந்திருக்க வேண்டும். சேர்ந்திருந்தால் தருவோம். ஆனால், சேராமல், இப்போது அதிலும்

போகவில்லை, மூன்றிலும் இல்லை, நான் சேர்ந்தேன் என்று ஒரு receipt கொண்டு வருகிறார்கள் Institute-லிருந்து. அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஏனென்றால் இப்போதெல்லாம் பழையபடி வியாபாரம் எல்லாம் ஆரம்பித்துவிட்டது. நாம் கொடுக்கிறோம் என்று தெரிந்ததுமே சிலர் 25 ஆயிரத்திற்கு, 30 ஆயிரத்திற்கு T.C. கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்களையெல்லாம் பாதிக்கப்பட்டவர்கள் என்று நாம் கணக்கில் கொண்டு வந்தால் நிலைமை என்னவாகும்? ஆகவே, இந்த மூன்று வகையிலே சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் இந்த 45 மார்க் இருந்தால் தருவோம். அதற்குப் பிறகு 40 இருந்தால் பிறகு பார்ப்போம். அதற்கு நம்முடைய N.C.T.E.-யிடம் சொல்லி அந்த மார்க்கைக் குறைக்கமுடியும் என்றால் அதைச் செய்யலாம்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றைப் பார்த்தீர்கள் என்றால், ஒரு Nursery Training கொடுத்துக்கொண்டிருந்தோம். பிளஸ் 2-ல் ஒரு கோர்ஸ் மாதிரி கொடுத்து, புரட்சித் தலைவர் காலத்திலே ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது; மழலையர் பள்ளி. அவர்களுக்கு இப்போது சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதுவும், 2000, 3000 ஆசிரியர்கள் தேறுவார்கள். அவர்களுக்கும் அடுத்த ஆண்டில் பயிற்சி தருவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு நூலகங்களைப் பற்றிச் சொன்னார்கள்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் இந்த நிலையிலும் இவ்வளவு உற்சாகமாக இருப்பதற்காக என் பாராட்டுகள். (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் திட்டம் பற்றிச் சிலவற்றை சொல்ல வேண்டும். நான் முன்பு பல நேரங்களில் சொன்னது போல் உயர் கல்வியிலும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க.தான் பல்வேறு நலத் திட்டங்களைச் செய்திருக்கிறது. பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் பேசும்போது ஏதோ தி.மு.க. ஆட்சியிலேதான் அதிகமாகச் செய்ததுபோல் சொன்னார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியிலேதான் அதிகமாகச் செய்திருக்கிறோம்.



7 பல்கலைக்கழகங்களை புரட்சித் தலைவர் ஆட்சியிலும் நம்முடைய அம்மா ஆட்சியிலும் ஏற்படுத்தியிருக்கிறோம். அப்போது மட்டும் 7 பல்கலைக்கழகங்கள்.

இப்போது அன்னை தெரசா பல்கலைக்கழகம் பற்றிச் சொல்ல வேண்டும். பெண்களுக்காக, அவர்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு நல்ல கல்வியைத் தருவதற்காக புரட்சித் தலைவர் அவர்களால் ஒரு நல்ல பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அதைப் பார்த்தீர்களானால், அன்னை தெரசாவை ** இங்கே இருந்து அங்கே தூக்கி போட்டு விட வேண்டியது. கொடைக்கானலிலிருந்து சென்னைக்கு இப்படி வந்து, நாம் அங்கே போட வேண்டியது. ** அந்த நிலைமை வந்துவிட்டது. அவரைப் பாதுகாப்பதற்காக இப்போது கண்ணனாக அவதாரம் எடுத்து புரட்சித் தலைவி அவர்களே வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அதற்கு ஒரு மேல்நிலை தருவதற்காக கொடைக்கானலில் அதற்கு சுமார் 150 ஏக்கர் நிலத்தைப் பார்த்திருக்கிறார்கள். இப்போது நல்ல கட்டடங்களைக் கட்டி, அதோடு சில கல்லூரிகளையும் இணைத்து ஒரு affiliating type University ஆக மாற்றி, பெண்கள் கல்லூரியைச் சேர்த்து, அதன் தரத்தை உயர்த்துவதற்கு இப்போது ஒரு திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய சட்டமன்றத் தொடரிலேயே அதற்குரிய சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்ற இப்போது முடிவெடுத்து இருக்கிறோம். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள்.

